விலை : 20.00
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 சித்திரை 30 வெள்ளிக்கிழமை (13.05.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 146

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம் 1000/- மட்டுமே

## பசில் நேற்று கைது

### பின் பிணையில் விடுதலையானார்



(கொழும்பு)

நிதிமோசடிக் குற்றச்சாட்டில் நேற்று கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு மாத்தறை நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

கறுப்புப் பணத்தை பயன்படுத்தி மாத்தறை பகுதியில் காணியொன்றை வாங்கியதாக அவர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்திவந்துள்ளனர்.

அந்தக் குற்றச்சாட்டு சம்பந்தமாக வாக்குமூலம் அளிப்பதற்காக பசில் ராஜபக்ஷ நேற்றுக் காலை நிதி மோசடிகள் பற்றி விசாரணை நடத்தும் விசேட பொலிஸ் பிரிவின் முன்னால ஆஜரானார். வாக்குமூலம் பெறப்பட்ட பின்னர் பசில் ராஜபக்ஷ

23ஆம் பக்கம் பார்க்க....

### தற்காலிக மருத்துவமனையிலிருந்த

## காயமடைந்தவர் மீதும் இராணுவத்தினர் சுட்டனர்

### போர் அவலத்தை பகிர்கிறார் மருத்துவர் உயர்ச்சி

(லண்டன்)

**வன்னி யுத்தத்தின் இறுதி நாட்களில் சுமார் ஆயிரம் பேர் வரை காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த முள்ளிவாய்க்கால் தற்காலிக மருத்துவமனைக்குள் நுழைந்த இலங்கை இராணுவத்தினர், கண்போன போக்கில் சரமாரியாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தபடியே வந்தார்கள். இதனால் அங்கிருந்த பலர் கதறலுடன் செத்து மடித்தனர் என அந்த நேரத்தில் அந்த மருத்துவமனைக்குப் பொறுப்பாக இருந்த மருத்துவர் உயர்ச்சி தனது அனுபவத்தை வெளிப்படையாகப் பகிர்ந்து கொண்டுள்ளார்.**

பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினருடனான சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில்,

23ஆம் பக்கம் பார்க்க....

## ஊழலை ஒழிப்போம்



(லண்டன்)

நாட்டில் ஊழலை ஒழிப்பதை எமது அடிப்படைப் பொறுப்பாக நாம் கருதுகிறோம் என் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று லண்டனின் நடைபெற்ற ஊழலுக்கு எதிரான சர்வதேச மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றிய போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஊழலுக்கு எதிரான சர்வதேச மாநாட்டில்

23ஆம் பக்கம் பார்க்க....

### பூநகரி பள்ளிக்குடா பகுதியில்

## கடற்படை அச்சுறுத்தலுக்கு மத்தியில் காணி சுவீகரிப்பு மக்களால் தடுப்பு!



24ஆம் பக்கம் பார்க்க....

### மே 12-18 வரை

## முள்ளிவாய்க்கால் வாரம் பிரகடனம்

### வடக்கு மாகாண சபை அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் படையினரால் கொல்லப்பட்ட இறுதி யுத்தம் நடைந்தேறிய மே 12ஆம் திகதி தொடக்கம் மே18 ஆம் திகதி வரையான ஒரு வார காலப்பகுதியை முள்ளிவாய்க்கால் வாரமாக பிரகடனம் செய்துள்ள வடக்கு மாகாண சபை, இந்த ஏழு நாட்களும் வடக்கு கிழக்கின் யுத்தத்தில் உயிரிழந்த மக்கள் நினைவாக நினைவு நிகழ்வுகள் நடைபெறும் என தெரிவித்துள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## மனித உரிமை மீறல்களுக்கு துணைபோகிறது நீதித்துறை

### ஐ.நா நிபுணர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

துன்புறுத்தல்கள் மற்றும் சித்திர வதைகளை அனுமதிப்பதன் ஊடாக இலங்கையின் நீதிமன்ற கட்டமைப்பு மனித உரிமை மீறல்களுக்கு அனுமதியளிப்பதாக அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த ஐக்கிய நாடுகளின் சிறப்புப் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். இலங்கை சென்று நிலைமை களை நேரில் ஆராய்ந்திருந்த சித்திரவதைகளுக்கு எதிரான ஐ.நாவின் சிறப்புப் பிரதிநிதி ஹுவான் ஈ மெண்

23ஆம் பக்கம் பார்க்க....

## தீர்வு அவசியம்

(கொழும்பு)

போரின் போது இடம்பெற்ற மனித உரிமை பிரச்சினைகளுக்கு இலங்கை அரசாங்கம் தீர்வு காண வேண்டியது அவசியமென முன்னாள் ஜனாதிபதியும், தேசிய ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் தலைவருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சமாதானம் மற்றும் பாதுகாப்பு

24ஆம் பக்கம் பார்க்க....

## முதலாம் நாள் நினைவேந்தல்



24ஆம் பக்கம் பார்க்க....

## விரைவில் நினைவுத்தூபி

(யாழ்ப்பாணம்)

எமது உறவுகளை நினைவு கூருவதற்கு எவரிடமும் அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை, நல்லாட்சி அரசின் ஒத்துழைப்புடன் முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி விரைவில் அமைக்கப்படும் என சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன்

23ஆம் பக்கம் பார்க்க....

## உயிரிழந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த முடியும்

### தடையில்லை என அரசு அறிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி செலுத்துவது தடை செய்யப்பட்டிருந்தாலும், வடக்கு கிழக்கு மக்கள் யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளுக்கு அஞ்சலி செலுத்த முடியும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## 'குடிவரவாளன்' நாவல் அறிமுக நிகழ்வு ஞாயிறன்று

(யாழ்ப்பாணம்)

உயில் மற்றும் சித்தம்அழகியார் ஏற்பாட்டில் வ.ந.கிரிதரனின் "குடிவரவாளன்" என்ற நாவல் வெளியீட்டு அறிமுக நிகழ்வு நாளை மறுதினம் பருத்தித்துறை ஞானாலயத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

குப்பிளான் ஐ.சண்முகன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் அறிமுகவுரையினை சு.குனேஸ்வரன் நிகழ்த்தவுள்ளதுடன் மதிப்பீட்டுரையினை ஜி.ரி.கேதாரநாதன், வேல்நந்தகுமார் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (இ-5)

# வீட்டுத்திட்ட வீடுகளுக்கு இராணுவம் உடலுழைப்பை வழங்க விருப்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் வீட்டுத்திட்ட வீடுகளை இலவசமாக உடல் உழைப்பை வழங்கி அமைத்துக் கொடுப்பதற்கு இராணுவத்தினர் விருப்பம் தெரிவித்துள்ளதாக தெரியவருகிறது.

யாழ் மாவட்டத்தில் பல்வேறு வீட்டுத்திட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன நிலையில் சமீபத்தில் மீள்குடியேற்ற அமைச்சினால 8 இலட்சம் பெறுமதியுடைய 3 ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டு அதற்கான பயனாளிகள் தெரிவு நடைபெற்று வருகின்றது.

இந்த வீட்டுத்திட்டம் கூடுதலாக அண்மையில் மீள் குடியேறியுள்ள மக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இந்த நிலையில் வீடுகள் அமைப்பதற்குரிய மூன்றில் ஒரு பங்கை அதாவது வீட்டை கட்டிக்கொடுப்பதற்கு இராணுவத்தின் பொறியியல் பிரிவு தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அரச அதிபர் மற்றும் பிரதேச செயலர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் பொதுமக்கள் விரும்பும் பட்சத்தில் குறித்த வீடுகளை இலவசமாக இராணுவத்தினர் அமைத்துக் கொடுப்பார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-9)


**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



**பகிரங்க ஏல விற்பனை**

எமது பாடசாலையில் பாவிக்க முடியாத சில பொருட்கள் 26.5.2016 அன்று மு.ப 10 மணிக்கு ஏல விற்பனை இடம்பெறும்

அதிபர் : யா/வண்ணை நாவலர் மகா வித்தியாலயம் (4557)



WESTERN UNION MONEY TRANSFER

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Wastern Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392 (C-4592)



**நீங்கள் ஒரு நடமாடும் ஐஸ் கிறீம் வாகன வியாபாரியா...?**




எம்மிடம், சிறந்த உயரிய தொழில் நுட்பமுறையில் Higenic முறைப்படி உற்பத்தி செய்யப்பட்டு பொதி செய்யப்பட்ட

| | |
|---|---|
| ஐஸ்பழம் | ரூபா 6/- தொடக்கம் |
| ஐஸ் சொக் | ரூபா 16/- தொடக்கம் |
| 80ml கப் | ரூபா 18/- தொடக்கம் |
| தண்டர் கோண் | ரூபா 50/- தொடக்கம் |
| ஐஸ் கிறீம் (லீட்டர்) | ரூபா 90/- தொடக்கம் |

கொள்வனவு செய்து 30% தொடக்கம், 40% வரையான லாபம் ஈட்ட முடியும். சிறு வியாபாரிகள், திருமண மண்டப உரிமையாளர்கள், மற்றும் புதிதாக ஐஸ்கிறீம் வியாபாரம் செய்ய விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

(4559)

Sylo food & Beverages (Pvt.) Ltd

76, அம்மன் வீதி, கொக்குவில் கிழக்கு.
தொலைபேசி: 021 221 2003. (4559)
Hotline 07777 10 785


## மஹோற்சவ விஞ்ஞாபனம்

(கோப்பாய்)

உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியதுடன் தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் மஹோற்சவத்தில் 19ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பறத் திருவிழாவும், 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு தேர்த்திருவிழாவும், 21ஆம் திகதி சனிக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

அத்துடன் தினமும் மாலை வேளையில் விசேட மேளக் கச்சேரியும், வயலின் இசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. (செ-87)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 02 10 1973



உதிர்வு 13 05 2015

அமரர் **செல்லத்தம்பி சுதர்சன்**

குடும்பத்தின் ஒளிவிளக்கே அன்பின் பிறப்பிடமே
ஆண்டொன்று ஆனபோதும் ஆறவில்லை நம்துயரம்
காலத்தின் செயலால் கண்சிமிட்டும் நொடியில்
நீங்கள் எமை விட்டுச் சென்று விட்டீர்கள்
காலங்கள் பல சென்றாலும் கடைசிவரை
உங்கள் நினைவு எம் நெஞ்சைவிட்டு அகலாது

"சுதர்சனம்"
அண்ணா சிலையடி
குமாரியோடை
கரணவாய்

உங்கள் பிரிவால்
தவிக்கும்
குடும்பத்தினர்

(C-4598)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் சிறிதேவன்




வறுத்தலைவிளான் தெல்லிப்பளை கட்டுவனை பிறப்பிடமாகவும் நல்லூர் கொக்குவிலில் வசித்தவரும் அளவெட்டி தெற்கு மேலயப்புலத்தை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சிறிதேவன் 12.05.2016 நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும் நேசமலரின் (நேசம்) அன்புக்கணவரும் காலஞ்சென்ற ரவீந்திரன் மற்றும் ரவிசங்கர் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும் ஜெனாதர்ஷினியின் (முன்னாள் மகாஜனக் கல்லூரி ஆசிரியர் - பிரான்ஸ்) மாமனாரும் காலஞ்சென்ற நடராசா தங்கரத்தினம் மற்றும் நவரத்தினம் (இளைப்பாறிய அதிபர்), பாலசிங்கம் (கிளிநொச்சி), குலசிங்கம் (மட்டக்களப்பு), தளையசிங்கம் (இளைப்பாறிய அதிபர் - பொன்பரமானந்தா, குரும்பசிட்டி), குகதாசன் ஞானவல்லி (லண்டன்) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.
0712384188 / 0776617001 (4560)

தகவல் :
தளையசிங்கம் (சகோதரன்)
ரவிசங்கர் (மகன்)



## இரத்ததான நிகழ்வு

THE ART OF LIVING

**ஜெய்குருதேவ்**

வாழும் கலை அமைப்பின் ஸ்தாபகர் பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜி அவர்களின் 60வது அகவையை முன்னிட்டு இரத்ததான நிகழ்வு நடைபெறவுள்ளது.

**இடம் : நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபம்**
(சட்டநாதர் கோயில் அருகாமையில்)

திகதி : 15.05.2016
நேரம் : மு.ப 10 மணி முதல் பி.ப 2 மணி வரை

தொடர்புக்கு :
077 903 7321
077 760 7008
(C-4591)

## 31ஆம் நினைவு நாளில் துயர் பகிர்கின்றோம்



**அமரர் ஸ்ரீமதி சிவபாதம் புஸ்பவதி**

அவர்கள்
(வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் அவர்களின் பாசமிகு தாயார்)


13/04/2016 அன்று இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஆ.வடிவேலு
(ஓய்வு நிலை அதிபர்)

தும்பளை,
பருத்தித்துறை.

ஆ.மகேசு
(ஓய்வு நிலை அதிபர்)

(C-4596)







# ஜனாதிபதி மைத்திரிக்கு எதிராக லண்டனில் பாரிய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பிரித்தானிய விஜயத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து லண்டனில் நேற்று முன்தினம் பிரித்தானிய தமிழர் பேரவை பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது. லண்டனில் அமைந்துள்ள பொதுநலவாய அலுவலகத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமாகி இந்த போராட்டம் நடைபெற்றது.**

இறுதிக்கட்ட போரின் இறுதி ஐந்து மாதங்களில் 70 ஆயிரம் தமிழ் மக்கள் படையினரால் படுகொலை செய்யப்பட்டமைக்கு முன்னாள் மகிந்த ராஜபக்ஷ மாத்திரமன்றி போரின் இறுதி நாட்களில் பதில் பாதுகாப்பு அமைச்சராக இருந்த தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பொறுப்புக்கூற வேண்டுமென பிரித்தானிய தமிழர் பேரவை கூறுகிறது. யுத்தம் முடிவடைந்து பல வருடங்கள் கடந்துள்ள போதிலும் தற்போதைய அரசாங்கமும் தமிழர்களுக்கான உரிய தீர்வுத் திட்டங்களையோ பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நீதியையோ வழங்க மறுத்து வருவதாகவும் அந்த அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

புதிய அரசாங்கமும் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருவதாகவும் தெரிவிக்கும் பிரித்தானிய தமிழர் பேரவை அதனாலேயே அவற்றுக்கு எதிராகவே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்துவதாக தெரிவித்துள்ளது. (இ-5)

# புதிய பாதுகாப்புச்சட்டம் ஜூனில் அறிமுகமாகும்

## பாதுகாப்புச் செயலாளர் அறிவிப்பு



(கொழும்பு)

தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு பதிலாக எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் புதிய பாதுகாப்பு சட்ட மூலத்தை அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாக பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

புதிய சட்டமூலத்திற்கான நடவடிக்கைகள், சட்டமா அதிபர் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள அவர், எதிர்வரும் ஜூன் மாத இறுதியில் அதன் முதற்கட்ட வரைபை அறிமுகப்படுத்த எதிர்பார்ப்பதாக மேலும் தெரிவித்தார்.

தற்போதைய சட்டமூலத்திலுள்ள குறைபாடுகள் நிவர்த்திக்கப்பட்டு தற்போதைய நிலைமைக்கு ஏற்ற வகையில் புதிய சட்டமூலம் அறிமுகப்படுத்தப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டில் யுத்தம் நிறைவடைந்த நிலையில் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருப்பது பொருத்தமற்றதென சமூக ஆர்வலர்கள் மற்றும் சர்வதேச நாடுகளும் இலங்கையிடம் வலியுறுத்தி வருகின்ற நிலையில், அதற்கு நிகராக ஒரு சட்டமூலத்தை தயாரித்த பின்னரே பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கமுடியுமென அரசாங்கம் ஏற்கனவே தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# ஜே.வி.பியின் தலைவர் மக்களை ஏமாற்றுகிறார்

## சம்பிக்க குற்றச்சாட்டு



ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார மக்களை ஏமாற்றுகின்றார் என மேல் மாகாண அபிவிருத்தி மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றம் சுமத்தியுள்ளார். அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் நோக்கில் நேற்று முன்தினம் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்று அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 5 ஆம் திகதி நாடாளுமன்றில் குறைநிரப்புப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரேரணையில் 55 மில்லியன் ரூபா என எழுத்திலும் இலக்கத்திலும் குறிப்பிடப்பட்டிருந்தது. கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் இதுபற்றி தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் குறைநிரப்புப் பிரேரணை தொடர்பில் ஜே.வி.பியின் தலைவர் எந்தவிதமான தகவல்களையும் அரசாங்கம் வழங்கவில்லை என பொய்யுரைத்து மக்களை பிழையாக வழிநடத்துகின்றார் என சம்பிக்க குற்றம் சுமத்தியுள்ளார். (இ-5)

# நாரஹேன்பிட்டிப் பொலிஸ் அதிகாரிக்கு பிணை மறுப்பு

பிரபல றக்பி வீரர் வசீம் தாஜுடீன் கொலை வழக்கில் சந்கேத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலிலுள்ள நாரஹேன்பிட்டி பொலிஸ் நிலையத்தின் குற்றப்பிரிவின் முன்னாள் அதிகாரியான, சுமித் பெரேராவிற்கு நேற்றும் பிணை மறுக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் தரப்பு சட்டத்தரணி முன்மொழிந்த பிணை மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த நபரை பிணையில் அனுப்பினால் சாட்சிகளை அழிக்கக் கூடும் என அரச தரப்பு சட்டத்தரணி கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனை செவிமடுத்த கொழும்பு பிரதான நீதவான் நிஸாந்த பீரிஸ், சந்தேக நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (இ-5)

# மருந்து என்ற பெயரில் போதைப்பொருள் இறக்குமதி

(கொழும்பு)

மருந்து என்ற பெயரில் நாட்டுக்குள் போதைப் பொருள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதியிடமும் முறையிட்டுள்ளதாக அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.


குறித்த போதை மருந்தில் நிகோடின் அடங்கியுள்ளதுடன், இந்தியாவில் இருந்தே இது கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் நளிந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் குறித்த போதை மருந்தானது நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட சந்தர்ப்பத்தில் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதற்கு முன்பும் இவ்வாறானதொரு சம்பவம் பற்றி ஜனாதிபதியிடம் அறிவித்த போது இந்த மருந்தினை இறக்குமதி செய்ய ஜனாதிபதி தடை விதித்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் நிக்கோடின் அடங்கிய மருந்துகளை இலங்கைக்கு இறக்குமதி செய்வதற்கு வர்த்தமானி மூலம் அறிவிப்பதில் தாமதம் ஏற்படுவதாகவும், குறிப்பாக இந்த மருந்து வகையானது பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்தே இறக்குமதிசெய்யப்படுவதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (இ-5)

# பஞ்சாப் அணியின் பயிற்சியாளரை கெட்ட வார்த்தையால் திட்டிய பிரீத்தி



பெங்களூர் அணியிடம் கடைசி பந்தில் தோல்வியடைந்ததால் ஆத்திரமடைந்த பஞ்சாப் அணி உரிமையாளர் பிரீத்தி ஜிந்தா அந்த அணியின் பயிற்சியாளரை மோசமான வார்த்தையால் திட்டியது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐ.பி.எல். தொடரில் கடந்த திங்கள்கிழமை பெங்களூர் அணியும், பஞ்சாப் அணியும் விளையாடின.

அடுத்த சுற்றுக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்பை தக்கவைத்துக் கொள்ள இந்த போட்டியில் வெற்றிபெற்றே ஆக வேண்டும் என்ற கட்டாயத்தில் விளையாடிய பஞ்சாப் அணி ஒரு ரன் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது. இந்த தோல்வியால், இனி வரும் போட்டிகளில் வெற்றி பெற்றாலும் கூட அடுத்த சுற்றுக்கு பஞ்சாப் அணியால் தகுதி பெற முடியாது. பஞ்சாப் அணி தான் விளையாடிய 10 போட்டிகளில் மூன்றில் மட்டுமே வெற்றிப்பெற்றுள்ளது.


இந்த போட்டியில் பஞ்சாப் அணி தோல்வி அடைந்ததும், ஆந்திரமடைந்த பிரீத்தி ஜிந்தா வேகமாக பஞ்சாப் அணி வீரர்கள் மற்றும் பயிற்சியாளர் குழு அமர்ந்திருக்கும் டக் அவுட்டிற்கு சென்று, அணியின் தலைமை பயிற்சியாளர் சஞ்சை பங்கரை ஒரு மோசமான ஆங்கில கெட்ட வார்த்தையால் திட்டியுள்ளார்.

அருகில் வெளிநாட்டு வீரர்களும், இளம் இந்திய வீரர்கள் இருக்கும் போது, இந்த சம்பவம் நடந்துள்ளது.

அக்‌ஷார் படேலை பட்டிங் செய்ய களமிறக்காததால் தான் பயிற்சியாளர் பங்கரை பிரீத்தி ஜிந்தா திட்டியதாக கூறப்படுகிறது.

விராட் கோலி, ரோகித் சர்மா, ரகானே போன்ற வீரர்களால் போற்றப்படும் இந்திய அணியின் பட்டிங் பயிற்சியாளரான சஞ்சை பங்கரை பிரீத்தி ஜிந்தா மோசமாக திடடியது கிரிக்கெட் வட்டாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (க)

# இத்தாலி ஓபன் டென்னிஸ் போட்டி 2-வது சுற்றில் பெடரர், ஜோகோவிச்




ரோம் நகரில் நடந்து வரும் இத்தாலியன் ஓபன் டென்னிஸ் போட்டியின் 2-வது சுற்றில் ஜோகோவிச், பெடரர் வெற்றி பெற்றுள்ளனர்.

இத்தாலியன் ஓபன் டென்னிஸ் போட்டி ரோம் நகரில் நடந்து வருகிறது.


இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 2-வது சுற்று ஆட்டம் ஒன்றில் நடப்பு சாம்பியனும், உலகின் முதல் நிலை வீரருமான ஜோகோவிச் (செர்பியா) 7-5, 7-5 என்ற நேர்செட்டில் பிரான்ஸ் வீரர் ஸ்டீபன் ராபர்ட்டை தோற்கடித்து 3-வது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் உலக தர வரிசையில் 3-வது இடத்தில் இருக்கும் ஆன்டி முர்ரே (இங்கிலாந்து) 6-3, 6-3 என்ற நேர் செட்டில் கஜகஸ்தான் வீரர் மிகைல் குகுஷ்கினை சாய்த்தார். மற்ற ஆட்டங்களில் ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து), வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து) ஆகியோர் வெற்றி பெற்று 3-வது சுற்றுக்குள் நுழைந்தனர்.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவில் தகுதி சுற்று மூலம் முன்னேறிய கிறிஸ்டினா (அமெரிக்கா) 6-7, 6-4, 6-1 என்ற செட் கணக்கில் செர்பியா வீராங்கனை அனா இவானோவிச்சுக்கு அதிர்ச்சி அளித்து 3-வது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்ற ஆட்டங்களில் பவுச்சர்ட் (கனடா), முகுருஜா (ஸ்பெயின்) ஆகியோர் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்கள். (க)

# கிரிக்கெட் வர்ணனையாளர் டோனி கோசியர் மரணம்



கிரிக்கெட்டின் குரல் என்று அனைவராலும் போற்றப்பட்ட வர்ணனையாளர் டோனி கோசியர் உடல் நிலை பாதிப்பால் நேற்று முன்தினம் மரணம் அடைந்தார்.

கிரிக்கெட்டின் குரல் என்று அனைவராலும் போற்றப்பட்ட வர்ணனையாளர் டோனி கோசியர் மரணம் அடைந்தார். அவருக்கு 75 வயது. சமீபகாலமாக கழுத்து, கால் பகுதியில் ஏற்பட்ட கிருமி தொற்று காரணமாக உடல் நிலை பாதிக்கப்பட்டார். இதன் காரணமாக மரணம் அடைந்தார்.

மேற்கிந்தியத்தீவைச் சேர்ந்த டோனி கோசியர் கிரிக்கெட்டில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். எழுத்தாளரர், பத்திரிகையாளர், வர்ணனையாளர் என பன்முக திறன் கொண்டவராக திகழ்ந்தார். 1965-ல் மேற்கிந்தியத்தீவுகள் அணி அவுஸ்திரேலியா சென்றது. அப்போது தான் அவர் தனது வர்ணனையாளர் பணியை தொடங்கினார். சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக இவரது குரல் ரசிகர்களை வெகுவாக கவர்ந்தது.

டோனி கோசியர் மறைவுக்கு ஐ.சி.சி. மற்றும் கிரிக்கெட் பிரபலங்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர். (க)

# வாகன விபத்தில் காயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

இலுப்பக்கடவை மூன்றாம் பிட்டி பகுதியில் உழவு இயந்திரம் தடம்புரண்டு விபத்துக்குள்ளானதில் காயமடைந்த குடும்பஸ்தர் 14 நாட்களின் பின்னர் சிகிச்சை பலனின்றி நேற்றையதினம் யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார்.

புத்தூர் மேற்கு புத்தூர் பகுதியினை சேர்ந்த நவரத்தினம் நிரஞ்சன் வயது (33) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

புத்தூர் பகுதியில் இருந்து கடந்த மாதம் 26-ம் திகதி இலுப்பக்கடவை சென்ற இவர் உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிகொண்டு மன்னார் பிரதான வீதியூடாக சென்றுகொண்டிருந்துள்ளார்.

அதிவேகமாக சென்ற உழவு இயந்திரம் 3-ம் கட்டை பகுதியில் வீதியினை விட்டு விலகி தடம் புரண்டது. இச் சந்தர்ப்பத்தில் உழவு இயந்திரத்தின் பெட்டி கழன்று தூக்கி வீசியதில் பெட்டியினுள் அகப்பட்டுக்கொண்டு வெளியில் வரமுடியாது தவித்த இவரை பொதுமக்களின் உதவியுடன் மீட்டு முழங்காவில் வைத்தியசாலையில் சேர்ப்பித்திருந்தனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் இருந்து மறுநாள் 27 ஆம் திகதி யாழ் போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டிருந்தார்.

இந் நிலையில் மேற்படி குடும்பஸ்தர் நேற்றையதினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மரண விசாரணைகளை யாழ் போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டதுடன் மேலதிக விசாரணைகளை இலுப்பக்கடவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-9,30)

# குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

தலைச்சுற்று ஏற்பட்டு கீழே விழுந்ததில் தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் ஒருவர் சிகிச்சை பலன் இன்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

மேற்படி விபத்துச் சம்பவம் கடந்த 6-ம் திகதி இடம் பெற்றுள்ளது.

இதில் பரந்தன் 11ஆம் ஒழுங்கையை சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான குலேந்திரன் விக்னேஸ்வரன் (வயது 40) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலமானது பிரேதப் பரிசோதனையின் பின்னர் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (செ-30)

# இங்கிலாந்து அணித் தலைவர் சார்லோட் எட்வர்ட்ஸ் ஓய்வு



இங்கிலாந்து பெண்கள் கிரிக்கெட் அணியின் அணித்தலைவர் சார்லோட் எட்வர்ட்ஸ் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

1996-ம் ஆண்டு இங்கிலாந்து அணியில் அறிமுகமானவர் சார்லோட் எட்வர்ட்ஸ் (வயது 36).

இதுவரையிலும் 23 டெஸ்ட், 191 ஒருநாள், 95 இருபது-20 போட்டியில் விளையாடியுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளாக அணித் தலைவராக இருந்து வரும் சார்லோட் தலைமையிலான அணி 2009-ம் ஆண்டு ஒருநாள் மற்றும் 20 ஓவர் உலக கிண்ணத்தை கைப்பற்றியது.

இந்நிலையில் சமீபத்தில் இந்தியாவில் நடந்த இருபது-20 உலகக் கிண்ணப் போட்டியின் அரையிறுதியில் இந்தியாவிடம் தோல்வி கண்டது.

இதற்கு வீராங்கனைகள் போதிய உடல்தகுதியுடன் இல்லாததே காரணம் என பயிற்சியாளர் மார்க் ராபின்சன் கருத்து தெரிவித்தார்.

இதனை தொடர்ந்தே சார்லோட் ஓய்வு பெற்றதாக கூறப்படுகிறது, எனினும் உள்ளூர் மற்றும் லீக் போட்டிகளில் தொடர்ந்து விளையாட முடிவு செய்துள்ளதாக சார்லோட் தெரிவித்துள்ளார். (க)

# கொழும்பை வர்த்தக நகராக மாற்றுவதற்கு நடவடிக்கை

## அமைச்சர் சம்பிக்க தகவல்



(கொழும்பு)

கொழும்பிலுள்ள 113 முக்கிய அமைச்சுக்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்கள் பத்தரமுல்லைக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாகவும் கொழும்பு நகரை முற்றிலும் வர்த்தக நகராக மாற்றுவதே இதன் நோக்கம் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது. கொழும்பு நகரில் உள்ள அரசநிறுவனங்களைவெளியே கொண்டு செல்லும் திட்டத்தின் கீழ், செத்சிறிபாயவின் மூன்றாவது கட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும், இதற்கமையவே 113 அரச நிறுவனங்கள் பத்தரமுல்லைக்கு கொண்டு செல்லப்படவுள்ளதாகவும் பெருந் தெருக்கள் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் காணப்படும் வாகன நெருக்கடி மற்றும் பொதுமக்களின் தேவைப்பாடுகளைப் பற்றி சிந்தித்தே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.


இதற்கமைய பிரதான அமைச்சு அலுவலகங்கள் 31, திணைக்களங்கள் 50 மற்றும் அரச நிறுவனங்கள் 32 என்பனவே இடமாற்றப் படவுள்ளதாகவும் கூறியுள்ளார்.

இதேவேளை குறித்த வேலைத்திட்டத்தின் கீழ் ஜனாதிபதி செயலகம், பிரதமர் அலுவலகம் என்பன பாராளுமன்றத்திற்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (இ-5)

உ

சிவமயம்

# 31 ஆம் நாள் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை



அமரர் ஸ்ரீமதி சிவபாதம்

புஸ்பவதி அவர்கள்

(வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சிவபாதம் நந்தகுமார் அவர்களின் பாசமிகு தாயார்)

(13.04.2016) அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டுத்துணுக்குற்றோம். அன்னாரினை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது அன்னை நெல்லண்டைப் பத்திர காளியம்மன், தும்பளை நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம், ஸ்ரீ வீரமாகாளியம்மன், வட பத்திரகாளியம்மன், ஆறுதல் நல்க வேண்டும் என்று பணிகின்றோம். தாய் அன்பே உலகன்பு ஆகும். தாய்ப்பாசம் முற்றும் துறந்த முனிவர்களும் மறக்க முடியாத அன்பாகும். சிவபாதம் புஸ்பவதியவர்கள் சிவசோதியுடன் கலக்க வேண்டுமென்றும் ஆத்மா சாந்தி பெற வேண்டுமென்றும் பிரார்த்தனை செய்கின்றோம்.

**சைவ சித்தாந்த பண்டிதர் சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்த ராஜாக்குருக்கள், நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோவில், நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன் வடபத்திரகாளியம்மன் தேவஸ்தானஸ்பதி ஆதீனகர்த்தா.**

(சி-4593)

# இராசி பலன்

13.05.2016

(சித்திரை 30, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.55 மணிக்கு

சப்தமி பிற்பகல் 3.35 மணிவரை

ஆயிலியம் பின்னிரவு 4.37 மணிவரை

சுபநேரம் 5.54-7.24 மணிவரை

இராகுகாலம் 10.24-11.54 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சூரி சுக், புத | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தராடம் இரவு 4.46 இற்கு சிங்-சந் | | சந் |
| | | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்:** மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**இடபம்:** குடும்பத்தினர் பாராட்டும் வகையிலான காரியங்களைச் செய்து முடிப்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**மிதுனம்:** தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், பேச்சில் கனிவு பிறக்கும், இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், மாமன், மைத்துனர் வழியில் நல்ல செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்:** தொழில் நலன்கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், ஆலய வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செலவுகள் கூடும்.

**கன்னி:** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள கூடும் நாள், எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், திடீர் பணவரவு மனதிற்கு சந்தோசம் தரும்.

**துலாம்:** நல்ல காரியங்கள் நடைபெறும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்த வைப்பீர்கள், எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்:** வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**தனுசு:** ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவுகள் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அற்பத்தனமாக நடந்து கொள்ளலாம்.

**மகரம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பேச்சில் .கனிவு பிறக்கும், செய்தொழில் மேன்மையுண்டு, ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**கும்பம்:** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், தொழில் மேன்மையுண்டு.

**மீனம்:** பணத் தேவைகள் பூர்த்தியாகும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வியாபார விருத்தியுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

# அதிகரிக்கும் குற்றச்செயல்களின் பின்னணியை கண்டறிதல் அவசியம்

## டக்ளஸ் எம்.பி.வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

**யாழ்.மாவட்டத்தில் தொடர்ந்து அதிகரித்துவரும் பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பிலான பின்னணிகள் பல சந்தேகங்களை எழுப்புவதாகவும் பின்னணியை கண்டறிதல் அவசியம் எனவும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.)யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா எம்.பி. தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் கொலை, கொள்ளை, பாலியல் வன்முறைகள், போதைவஸ்து பாவனை போன்ற பல குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளன. அந்த வகையில், தொடரும் கொள்ளைச் சம்பவங்களின்போது கொள்ளைக்கு உட்படுகின்ற வீட்டினர், தாங்கள் யாரென்பதை வெளியில் கூறினால் கொல்லப்படுவீர்கள் என கொள்ளையர்களால் எச்சரிக்கப்படுகின்றனர் எனத் தெரியவருகிறது. அதேநேரம், தென்பகுதியிலிருந்து வரும் நபர்களிடம் கொள்ளைகள் இடம்பெறாத நிலையில், அவர்களும் அச்சுறுத்தல்களுக்கு ஆளாகின்றனர் எனவும், இவ்வாறான சம்பவங்கள் அதிகாலை 2 மணிக்கும் 3 மணிக்கும் இடையில் இடம்பெறுவதாகவும் தெரியவருகிறது. இச்செயற்பாடானது, யாழ். மக்கள் மத்தியில் தொடர்ந்து பதற்றத்தை ஏற்படுத்தி வருகின்ற அதேநேரம், இப்பகுதியானது ஏனைய பகுதியினது மக்கள் வருகைதர உகந்த பகுதியல்ல என்றதொரு நிலைப்பாட்டைத் தோற்றுவிப்பதாகவும் அமைந்து வருவதைக்காணக்கூடியதாகவுள்ளது.

தொடர் கொள்ளைச் சம்பவங்கள் ஒருபுறம் இடம்பெற்றுவரும் நிலையில், வாள்வெட்டுச் சம்பவங்கள், அடிதடிகள் மூலம் யாழ்ப்பாணத்துச் சமூகம் பதற்றமான நிலையிலேயே தொடர்ந்துவைக்கப்படுகின்றது.



அத்துடன் இத்தகைய சம்பவங்களில் ஈடுபடுபவர்கள் இளம் வயதைக் கொண்டவர்களாக இருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளமை வேதனை தரக்கூடிய விடயமாகும். இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக கடந்த மாதம் 23ஆம் திகதி பண்ணையில் வைத்து கைது செய்யப்பட்டவர் 17 வயதுடையவர் என்றும், 26ஆம் திகதி அரியாலையில் கைது செய்யப்பட்டுள்ள 6 பேரும் 25 வயதிற்குக் குறைந்தவர்களெனவும் தெரிய வருகிறது. இது, எமது எதிர்கால சமூகத்தின் முன்னேற்றத்தின் மீதான பலத்த சவாலாகவே அமைகிறது. எனவே, இவ்வாறான நிலைமைகள் யாழ். மாவட்டத்திலிருந்து உடனடியாக களையப்பட வேண்டியது அவசியமாகும்.

இவ்வாறானதொரு நிலை ஏனைய மாவட்டங்களில் காணக்கூடியதாக இல்லை. எனவே, திட்டமிட்டதொரு செயலாகவே யாழ். மாவட்டத்தில் இது தொடர்வதாகத் தெரியவருகிறது. இதனைத் தடுத்து நிறுத்த உடனடி நடவடிக்கைகள் பரந்தளவில் விரிவுபடுத்தப்பட வேண்டும். அதேநேரம் இதன் பின்னணிகள் தொடர்பில் கண்டறியப்பட்டு, அவை முழுமையாகத் துடைத்தெறியப்பட வேண்டும்.

இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக பொது மக்களின் உதவிகளை நாட முடியும் என்பதால், அம்மக்கள் மத்தியில் உரிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும். இதற்கான நடவடிக்கைகளை பொலிஸாரும், ஏனைய உரிய அரச அதிகாரிகளும், சமூக பொது அமைப்புகளும், கல்வி சார் நிறுவனங்களும் முன்னெடுக்க முன்வர வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-5)

## பொதுக்கூட்டம்

வலி.வடக்கு மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு சங்கத்தின் மாதாந்த பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 15 ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு வலி.வடக்கு பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மீள்குடியேற்றம் தொடர்பான தற்கால நடவடிக்கை தொடர்பாகவும் எதிர்கால நடவடிக்கை தொடர்பாகவும் ஆராய்ந்து முக்கியமான முடிபுகள் எடுக்கப்படவுள்ளதால் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு வலி.வடக்கு மீள்குடியேற்றம் மற்றும்புனர்வாழ்வு சங்கத்தலைவர் குணபாலசிங்கம் அறிவித்துள்ளார்.(இ-9)




## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.றோட்டறிக் கழகத்தின் அனுசரணையுடன் கராத்தே பயில விரும்பும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவிகளுக்கான இலவச கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.(இ-5)

# மணல் கொள்ளையில் ஈடுபட்டவரும் லஞ்சம் கொடுத்தவரும் கைதாகினர்

## இருவரும் சகோதரர்கள்

மண்கும்பான் பகுதியில் மணல் கொள்ளையில் ஈடுபட்ட நபரும் அவருக்கு ஆதரவாக பொலிஸாருக்கு ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் வழங்க முற்பட்ட சகோதரனையும் நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக யாழ்ப்பாண குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் மண்கும்பான் பகுதியில் சிலர் மணல் கொள்ளையில் ஈடுபடுவதாக யாழ்.பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து அவர்களை கைது செய்வதற்காக யாழ்ப்பாண பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு அதிகாரி சம்பவ இடத்திற்கு சென்றுள்ளார்.

இதன்போது குறித்த மணல் கொள்ளையில் ஈடுபட்ட நபரை பொலிஸார் கைது செய்துள்ளதுடன் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட டிப்பர் வாகனத்தையும் கைப்பற்றியிருந்தனர். கைது செய்யப்பட்ட நபர் தனது சகோதரனுக்கு குறித்த சம்பவம் தொடர்பாக தெரியப்படுத்தியமையை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த சகோதரன் பொலிஸாருக்கு ஒரு இலட்சம் ரூபா இலஞ்சமாக கொடுக்க முற்பட்டுள்ளார்.

இதனையடுத்து பொலிஸாருக்கு இலஞ்சம் கொடுக்க முற்பட்ட குற்றச்சாட்டில் சகோதரனையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மேலும் கைது செய்யப்பட்ட இருவரையும் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதுடன் அவர்கள் மீது மண் கடத்தலில் ஈடுபட்டமை மற்றும் இலஞ்சம் கொடுக்க முற்பட்டமை போன்ற குற்றங்களின் கீழ் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இவர்கள் இருவரையும் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தியதன் பிற்பாடு கொழும்பு இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு விசாரணைக்கு அனுப்பவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-9)



புங்குடுதீவைச் சேர்ந்த இளம் கவிஞரான புங்கையூர்ராகுலன் எனும் விவேக்ராகுலனின் "புலம்பெயரும் மனித வாழ்க்கை" எனும் கவிதைநூல்வெளியீடு கடந்த 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப.4 மணியளவில் புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கில் டயான் தலைமையில் இடம்பெற்றது. படைப்பாளிகள் உலகத்தின் அனுசரணையில் இடம்பெற்ற இக்கவிதைநூல் வெளியிடும் நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் பிரதம விருந்தினராகக்கலந்துகொண்டு நூலினை வெளியிட்டு வைத்தார். நிகழ்வில் படைப்பாளிகள் உலக இயக்குநர் ஐங்கரன் கதிர்காமநாதன், வைத்தியகலாநிதி க.சிறீதரன், சர்வோதய இயக்குநர் பொன்.ஜமுனாதேவி, புங்குடுதீவு தாயகம் அமைப்பின் போஷகர் சுலோச்சனா தனபாலன், புங்குடுதீவு அமெரிக்கமிஷன் பாடசாலை அதிபர் வி.யோகராணி, புங்குடுதீவைச்சேர்ந்தவரும் நல்லூர் பிரதேச கிராம அலுவலருமான ப.தர்சானந், பாடகர் எஸ்.ஜி.எஸ்.கோகுலன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டதுடன் சிறப்பு பிரதிகளையும் பெற்றுக்கொண்டனர். (படங்கள்:-கிஷோர்)

# திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பு

வடமராட்சி நெல்லியடி, கரவெட்டிப் பகுதிகளில் அண்மைக்காலமாக தொடர்ச்சியான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பொதுமக்கள் இடையே அச்சநிலை ஏற்பட்டுள்ளது.

கரவெட்டி கிராய்ப் பகுதியில் உள்ள தோட்டங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்த தண்ணீர் இறைக்கும் மூன்று மோட்டர்களும் அடுத்தடுத்து இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளன.

இதனால் தோட்டங்களுக்கு நீர் இறைப்பதில் விவசாயிகள் பெரும் இடர்களை எதிர்கொண்டுள்ளனர்.

அத்துடன் நெல்லியடி பழைய சந்தியில் மோட்டர் பொருத்தப்பட்ட அறை உடைக்கப்பட்டு அதற்குள் இருந்த மோட்டர் திருடப்பட்டுள்ளது.

இதனையடுத்து சந்தைப்பகுதிக்கான தண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது. கரணவாய் உப்பு றோட்டை அண்டியுள்ள மேய்ச்சல் தரவைகளில் மேய்ந்து வரும் மாடுகளுடன் வரும் மாட்டுக்கன்றுகள் இதுவரை நான்கு திருடப்பட்டுள்ளன.

இது தவிர வீடுகளில் கட்டி நிற்கும் ஆடுகளும் இரவு வேளைகளில் திருடப்பட்டு வருகின்றன.

அத்துடன் பூட்டி வைக்கப்படுகின்ற சைக்கிள்கள் பட்டப்பகல் வேளைகளில் தொடர்ச்சியாக திருடப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் மக்களால் பலதரப்பட்ட முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆனால் பொலிஸ் முறைப்பாட்டின் பின்னரும் பல்வேறு திருட்டுக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. இதனால்மக்கள் அச்சத்தில் தினமும் பொழுதைக் கழிக்கின்றனர்.

எனவே இது தொடர்பில் பொலிஸார் கூடிய அக்கறைசெலுத்த வேண்டும் என அப்பகுதி மக்கள் பொலிஸாரிடம் கேட்டுள்ளனர்.(இ-5-60)

### மாற்றுவலுவுடையோர்

# பயிற்சிநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சமூக சேவைத் திணைக்களமானது வறுமைக் கோட்டிற்குட்பட்ட மாற்றுவலுவுடையோருக்காக ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறிகளுக்கு கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்டோர் விண்ணப்பிக்குமாறு கரவெட்டிப் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் எஸ்.ராஜீவ் அறிவித்துள்ளார். ஆட்டோ திருத்தம், ஒட்டு வேலை, வீட்டு இலத்திரனியல் உபகரணம் திருத்துதல் போன்ற பயிற்சி நெறிகளுக்கே இவ் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலவச உணவு, பிரயாணச் செலவு என்பன மேலதிக கொடுப்பனவாக வழங்கப்படும். (இ-5-60)





# யாழ்.மாவட்டம் வடமராட்சி வடக்கு தும்பளை நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம் (இத்திமரத்தாள்- மாமரத்தாள்) வெளிமடைப் பூஜை சிறப்பிதழ் (2016.05.13 வெள்ளிக்கிழமை)

**மடைப்பண்ட பூசை**
**மாலை 5 மணி**
**13.05.2016 வெள்ளி**

**வளந்துப் பூசை**
**இரவு 11 மணி**
**13.05.2016 வெள்ளி**

**வெளிமடை பூசை**
**காலை 6 மணி**
**14.05.2016 சனி**

**விளக்கு வைப்பு**
**06.05.2016**
**வெள்ளி**



## அருளாசிச் செய்தி

இத்திமரத்தாள் என்றும் மாமரத்தாள் என்றும் எம் முன்னோராலும் எம்மாலும் அழைக்கப்படும் நெல்லண்டைப் பத்திரகாளித்தாய் திருவருள் இந்நாளில் எங்கும் பரவிக்கலக்க வேண்டுமென்று எம் அன்னையின் அடி மலர்தாள் சரண்புகுந்து வாழ்த்துவோமே. இற்றைக்கு நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே எமக்குத் திருவருள் தர அமர்ந்து கொண்ட அன்னை கணம் கணம் தோறும் பல்லாயிரம் பக்தர்களின் கடுவினைகளைக் களைந்த வண்ணம் உள்ளாள்.

(இத்திமா மால் துணைவி) என்று பழைய வெண்பா பாடல்வரி சான்றுபகரும்.

ஆத்தாள் அருளுதி நெல்லண்டை
மாநிழல் மேவிய அன்னையே!

என்றும் சான்று பகரும் “கூத்துவர்ந் தாய் நேர்த்தியெல்லாம்” என்றும் பண்டிதர் நமசிவாய தேசிகர் திருவூஞ்சல் மூலம் விளக்கியுள்ளார்.

எமது முன்னோர் வழிவழியாக எமது உரித்தை முழுக்க முழுக்க சட்டபூர்வமாகக் கொண்டுவழ. இல.53/2001ஆம் ஆண்டின் கொழும்பு மீளாய்வு நீதிமன்றமும் அதன் பின் யாழ். உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் எம் அன்னையின் பூசையில் யாரும் தலையிடா வண்ணம் எம் அன்னை நெல்லண்டைப் பத்திரகாளி திருவருள் பொழியும் வண்ணம் உதவிய எமது குருமார் சிவப்பிரம்மஸ்ரீ சதாசிவக்குருக்கள் நியாயசிரோன்மணி சுப்பிரமணிய சாஸ்திரிகள்,நாராயண சாஸ்திரிகள்,ஆத்மார்த்த குரு சிவஸ்ரீ.கந்தசிவபாத சுந்தரக் குருக்கள்,வித்தியாகுருமார் அருணாசலம் சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ், கலாநிதி சிவலிங்கராஜா, அருள் நங்கை சண்முகநாதன், சபா.ஜெயராசா, கலாநிதி த.கலாமணி சேர் அவர்கட்கும் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அவர்களுக்கும் வணக்கம் செலுத்துகின்றோம்.

எமது தந்தையார் சிவஸ்ரீ.கந்த.தியாகராஜா குருக்கள் அவர்தம் நண்பர் சிதம்பரப்பிள்ளை வாமதேவன்(உத்தரவு பெற்ற நில அளவையாளர்) மற்றும் சி.மு.கந்தசாமி,கமலேஸ்வரன், கதிரவேற்பிள்ளை, வீரகத்திப்பிள்ளை,நடராசா சற்குணராசா, இராஜதுரை அவர்கட்கும்( அமரர்)ருத்திரா (சிரேஷ்ட சட்டத்தரணி), உருத்திரேஸ்வரன் விஜயராணி(சட்டத்தரணி), அன்பு நண்பர் தம்பு இராமச்சந்திரன் அவர்கட்கும் என் நாளாந்த வணக்கத்தை எம்மன்னை நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி திருவருள் நிதம்தருவாள்.

அன்னையின் மாதாந்த வருடாந்த உற்சவங்களையும் உபயங்களையும் செய்யும் அனைத்து மெய்யடியார்கட்கும் மற்றும் நான் நலிவுற்ற காலத்தில் உதவிய எல்லா அன்பு நெஞ்சங்கள் அனைத்து மெய்யடியார்கள், அன்பர்கள், பெரியவர்கள் அனைவர்க்கும் நன்றியுடன் அன்னையிடம் வணக்கம் செலுத்தி ஆசிகூறி வாழ்த்தி மீண்டும் அன்னை ஸ்ரீ நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், ஸ்ரீ நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளியம்மன், வடபத்திரகாளியம்மன், இலட்சுமணன் தோட்டம் அருள்மிகு பிள்ளையார் திருவருளும் பொழிக என வணங்கி விடை பெறுகின்றோம்.

சுபமஸ்து



பரம்பரை உரித்துடைய அர்ச்சகர்
சிவ ஸ்ரீ. சோமாஸ்கந்த-தனஞ்சயன் குருக்கள் அவர்கள்



பிரதம குருக்கள்
சிவஸ்ரீ.இராமலிங்கக் குருக்கள் சுந்தரலிங்கம் குருக்கள் அவர்கள்

## ஆலயத்தின் புராதன வரலாறு

அகில அண்டங்களும் சராசரங்களும் உள்ள பொருளுமாய் ஐம்பத்தொரு (51) அட்சரமாய் தொண்ணூற்றாறு (96) கோணங்களும் உயிருமாய் நிற்கும் மனோன்மணி அன்னையே முன்னை சிவனுடன் முடுகியே நடம்புரிந்த சக்தி நீ. மும்மூர்த்திகளின் ஆதாரம் ஆனாய். எங்கும் எதையும் ஆற்றலுடன் இயங்க வைப்பாய். ஏழைகளாகிய நின் ஜீவன்கள் துயர் தீர்க்க என் எண்ணியே உருவத் திருமேனியையும் அருவுருவத் திருமேனியையும் உற்று முன்னொரு காலத்தில் தென்னிந்தியாவில் உள்ள கோடிக்கரை என்ற வேதாரணியத்தை சேர்ந்த சந்நியாசி ஒருவர் மரகதலிங்கப் பெருமானாகிய திருமறைக்காடு வேத வேதாரணியேஸ்வர சுவேதவனப் பெருமானின் ஞான சிஸ்யன் ஒருவரால் முன்னே சொன்ன சந்நியாசி ஒருவனுக்கு இற்றைக்கு நான்கு நூற்றுகளுக்கு முன்பு (400 வருடங்களுக்கு) ஆன்மார்த்த பூசையின் பொருட்டு அளிக்கப்பட்ட பத்திர காளி யந்திரத்தையும் மூர்த்தியையும் தாம் சென்ற இடமெல்லாம் கொண்டு சென்றார். அவர் ஈழவள நாட்டிற்கு வந்தபோது இந்த தும்பளை நெல்லண்டைப் பதியில் நெல்லி நின்ற ஓடை என்ற ஆதீனத்தில் சில நாட்கள் தங்கியிருந்தார்கள். அத்தகைய அருட் திருநாளில் ஒருநாள் சந்நியாசியின் கனவில் தோன்றி தாம் அருகில் நின்ற மாமரம் ஒன்றின் கீழேயே அமைந்திருக்க விரும்புவதாக கூறினார். அதன் பிரகாரம் அச்சந்நியாசியார் அங்கே வைக்க அன்னை மாமரத்தடியில் உறைந்தார். இன்றும் அம்மாமரம் நீண்ட பழைமையை புதுப்பித்து காட்டிய வண்ணம் கணம் கணந் தோறும் நினைத்தவண்ணம் எங்கும் அருள்மழை பொழிந்து ஆட்சி செய்து வருகின்றாள்.

நமது மூதாதையர்கள் சின்னையர் முதற் கொண்டு ஆறாவது பரம்பரையான தியாகராஜக் குருக்கள் அவர்களும் அவர் மகன் சிவஸ்ரீ.தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் அவர்களும் அவர்தம் புத்திரன் சோமாஸ்கந்த தனஞ்சயக் குருக்கள் பரம்பரைப் பூசகராகக் கொண்டு இன்று வரை பூசனை புரிந்து வருகின்றார்கள். பிரதம குருக்களாக தியாக சோமாஸ் கந்தராஜாக்குருக்கள் அவர்களின் மூத்த மருமகன் சிவஸ்ரீ. இராமலிங்கக் குருக்கள் சுந்தரலிங்கக் குருக்கள் பூசை செய்து வருகின்றார்கள்.

தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்பாளின் பராக்கிரமம் என்கின்ற மாண்மியம் கணந்தோறும் பெருகிக்கொண்டே வருகின்றது. அன்னையின் அருட்பிரவாகத்தால் வைத்திய நிபுணர் எவராலும் குணப்படுத்த முடியாத பலவகையான நோய்களும் அன்னையின் அருளால் இன்றும் குணமடைந்த வண்ணமே உள்ளன. மற்றும் குழந்தைப்பேறும் கல்விப் பேறும் அருட்பேறும் செல்வப்பேறும் வெற்றிப்பேறும் வற்றாத புகழ் என்பனவும் முன்னைக்கும் இம்மைக்கும் நம்பிஅடைக்கலம் புகுந்த அனைத்து அடியார்களும் உலகமயமாதலோடு கூடி இற்றைவரை அருள்மழை பெற்று வருகின்றார்கள். இவ் ஆலயத்தில் ஆண்டுதோறும் சித்திரைமாதம் சித்திரா பௌர்ணமி அடுத்து வருகின்ற அமாவாசைத் திதியின் பின் முதல் வெள்ளிக்கிழமை வெள்ளிமடை வேள்வி பொங்கல் உற்சவம் நடைபெற்று வருவது சரித்திரப் புகழ் வாய்ந்த நிகழ்வாகும்.

கந்தபுராணச் செய்யுள் முழுவதும் உரையோடு பயன்சொல்லி பாராயணம் செய்யும் ஆலயமாகவும் இது அமைகின்றது. தைப் பூசம் தொடங்கி பங்குனி உத்தரம் கழிந்த சுபநாளில் கந்தபுராண நிகழ்வாகிய வள்ளி திருமணப் படிப்பும் அடுத்த நாள் வளந்துப் பூசையும் அன்று காப்புக் கட்டி அன்னதானமும் மிகப்பெரியளவில் நடை பெற்று மறுநாள் நிறைமணி என்கின்ற நிகழ்வும் தவறாமல் நடைபெற்று வருகின்றது. நித்திய, நைமித்திய, காமிக பூசைகள் காலம் தவறாமல் நடைபெற்று வருகின்றது.

அன்னை அடியார்கள் அன்புக்கும் வேத மந்திர சாஸ்திர தோஸ்திரங்களுக்கும் மட்டுமன்றி இயற்றமிழ் என்கின்ற கூத்து, நாடகம், நாட்டியம் ஆகியவற்றிலும் பெரும் விருப்பமுடையவள் எம் நெல்லண்டைத்தாய். முன்னைய காலம் தொடக்கம் இற்றைவரை வடமோடி, தென்மோடி ஆட்டக் கூத்துக்கள், நாடகங்கள் அரங்கேற்றம் செய்யப்படும் ஈழத்தின் கலைமளித்த திருத்தலங்களில் பழைமைமிக்க தலமாகவும் இது விளங்குகிறது. இவ்வைபவங்களில் வல்லிபுர ஆழ்வாரை நினைத்து கதிரைப்பூசை நிகழ்வும் இற்றைவரையும் நிகழ்ந்து வருவதைக் காணலாம். இவ் அன்னையின் மூர்த்தி அம்சங்கள் தாய்த்தெய்வ வழிபாடாகிய நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி வடபத்திரகாளியம்மன், நெல்லண்டை பிராந்தாள் முத்துமாரியம்மன், தும்பளை மேற்கில் வில்வளை ஸ்ரீ பித்தியங்கரா காளிகாதேவியம்மன் வழிபாட்டு அம்சங்களும் மிகப்பெரும் வளர்ச்சியுடன் வெளிமடைத் தொடர்புகளும் உள்ளடங்கி வருவதை தொடர்ச்சியாகக் காணமுடிகின்றது. அன்னையின் கிழக்குப் புறத்தில் உள்ள தீர்த்தம் ஊரில் உயிர் வாழ்க்கையாக அமைந்து அனைத்து நோய்களைத் தீர்க்கும் அருமருந்தாக விளங்குகின்றது. தலவிருட்சமாக மாமரம், இத்திமரம் இன்றும் அதிசயமாக விளங்குகின்றது. கிழக்குப் பக்கத்தில் நெல்லிமரமும் வெளிவீதியில் உள்ள ஆல், அரசு, மகிழ் போன்ற தலவிருட்சங்களும் நிழல் தருகின்றன். இவ்வாலயம் நீண்ட காலங்களுக்குப் பின்பு முதன்முதலில் ருதோற்காரி வருடம் கார்த்திகை மாதம் 16 ஆம் நாள் (12.12.1983) வெள்ளிக் கிழமையும் சுவாதி நட்சத்திரமும் தனுலக்கினமும் சித்தயோகமும் கூடிய சுபவேளையில் கும்பாபிஷேகம் நிகழ்வுற்றது. பின் 1997 இலும் 2000 ஆம் ஆண்டிலும் அதன் பின்னர் நவக்கிரக ஸ்தாபன கும்பாபிஷேகமும் அதேநாளில் முகப்புத் தோறணவாயில் கும்பாபிஷேகமும் 2013 ஆம் ஆண்டு தைமாதம் ரோகிணி நட்சத்திரமும் கூடியநாளில் மூன்றாவது தடவை மகா கும்பாபிஷேகமும் இதன் மண்டலாபிஷேக பெரும்சாந்தி விழா (08.03.2013) வெள்ளிக்கிழமை நடைபெற்றபோது ஸ்ரீ பத்திரகாளி பிரதிஸ்டாவிதி என்கின்ற நூல் வெளியீடும் 1008 கலச சங்காபிஷேகமும் சிவஸ்ரீ. தியாக சோமாஸ்கந்தராஜாக்குருக்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தைமாதத்தில் பிரதி தோறும் ரோகிணி நட்சத்திரத்தை நிறைநாளாகக் கொண்டு பத்து நாட்கள் அலங்கார உற்சவமும் மாசி மாதத்தில் மாசி மக உற்சவமும் மகாமக உற்சவமும் மகோதைய உற்சவமும் பங்குனி மாதத்தில் பங்குனித்திங்கள் , பங்குனி உத்தரமும் வள்ளி திருமணப் படலமும் அன்னதானமும் நிறைமணியும் சித்திரை மாதத்தில் சித்திராப் பௌர்ணமியும் அடுத்து வருகின்ற அமாவாசையின் முதன் வெள்ளியை வெளிமடையாகவும் அதன் முதன் வெள்ளியை விளக்குவைத்தலும் சித்திரைச் சதயத்தில் அப்பர் குருபூசையும் வைகாசிமூலத்தில் சம்பந்தர் குருபூசையும் ஆனி மாதத்தில் மக நட்சத்திரத்தில் மாணிக்கவாசகர் குரு பூசையும் ஆடிமாதத்தில் பூர நட்சத்திரத்தில் பூர்வகர்ம நிகழ்வும் (சாமத்தியச்சடங்கு) ஆடிச்சோதியில் சுந்தரர் குருபூசையும் ஆவணி மாதத்தில் ஓணப் பெருவிழாவும் வரலட்சுமி விரதமும் புரட்டாதி மாதத்தில் சிறப்புற விளங்கும் நவராத்திரிப் பெருவிழாவும் தொடர்ந்து தீபாவளி, அமாவாசை தொடர்ந்து கேதாரகௌரி விரதமும் ஐப்பசி மாதத்தில் வெள்ளிக்கிழமை சிறப்புப் பூசையும் கார்த்திகை மாதத்தில் சோமவாரத் திருவிழாவும் பிள்ளையார் பெருங்கதையும் மார்கழி மாதம் திருவெம்பாவை , திருவாதிரை, ஆருத்திரா தரிசன விழாவும் இனிது நடைபெற்று வருகின்றன.

*ஏகைவசக்தி பரமேஸ்வரஸ்ய*
*ப்ரயோஜ நார்த்தாய சதுர் விதாபூத்*
*போகே பவானி புருஷேஷீ விஷ்ணு*
*க் ரோதேச காளீ சமேரேச துர்க்கா*
*(காமிக ஆகமம்)*

அன்னையே ஆனந்த ரூபினி யாக, காளியாக , ஸ்ரீபத்திரகாளி யாக, ரூபபேதங்களைக் கொண்டு நிற்கின்றாள். சிவ மங்களம் நிகழும் சிவம் பெருகும் நிலையில் உயரும் அனைத்து உயிரிலும் கலந்தும் மறைந்து செறிந்தும் மிளிரும் அன்னை அகிலம் காக்கும் ஆக்ஞையுடையவள். உலக முதற்காரண தத்துவம் சக்தியுடையது. சிவமயமாக சிவனுடன் இணைந் தாள், சக்தியே பத்திர காளி, பத்திரை என்பவள் மிக உயர்ந்தவள் எனப்பொருள்படுவாள்.

மிகவுயர்ந்த காளீகாம்பா என்பது நேர் பொருள். இதன் புதை பொருள் தேவர்களும் உணராத் தன்மையிலும் மேலானவள் சிவனைத் தினமும் நினைப்பவர்களும் உடன் இருப்பவர்களும் சிவசக்தி அவளே வீரபத்திர பத்திரகாளி இவளே. பார்வதி உமா மலைமகள் அங்கையற்கண்ணி , அகிலாண்டேஸ்வரி , புவனேஸ்வரி , திரிபுரசுந்தரி , தேவி மகாகாளி சண்டிகா , மகாசரஸ்வதி , பகவதி , பவானீ , பைரவீ என பலகோடி நூறாயிரம் பெயர்கள் உடையவள் இவளே. அதர்வண வேத பத்திரகாளியாக வாமசாரா வழிபாடுகளும் சக்தி தாந்திரமுறைகளும் நிகழ்வுற்று வருகின்றன. இது இந்தியாவிலும் இலங்கையிலும் குறிப்பாக இற்றை வரை எமது நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் ஆலயத்திலும் விளங்குகின்றது. அவள்பாதம் நிதம் பணிவோம்.

**உலகாண்ட நாயகியாய் காட்சி தந்தாய்**
**உக்கிரமாய் தாண்டவமும் ஆடிக்**
**கொண்டாய்**
**சிலகாலம் சிவன் நோக்கி நிட்டை**
**கொண்டாய்**
***சீடர்களுக்கு அபயகரம் நீட்டி நின்றாய்***
**பலவாய தருமங்கள் போதித் தாண்டாய்**
**பக்வமாய் வன்பாசவினை நீக்கினாய்**
**நலம்சேரும் சோமாஸ்கந்த ராஜன்**
**என்தனை**
**அருளோடு பொருள் கொண்டு**
**ஆண்டாயே**

தும்பளை நெல்லண்டை பத்திரகாளியம்மன் தேவஸ்தானம், ஆதீனஹர்த்தா, சைவசித்தாந்த பண்டிதர், சிவாகம உபதேச வாசஸ்பதி, சிவஸ்ரீ.தியாக. சோமாஸ்கந்தராஜக் குருக்கள் (B.A.Dip.in. Edu, M.A. பிரதிபதிபர்), தும்பளை, நெல்லண்டை, பருத்தித்துறை.

(அ-4593)

# வைத்தியர் விடுதி பற்றாக்குறையால் வைத்தியர்கள் இடம் மாற்றும் நிலை

வவுனியா வடக்கு மீள் குடியேற்ற பகுதியான நெடுங்கேணி வைத்தியசாலையில் வைத்தியர் விடுதி பற்றாக்குறை காரணமாக அங்கு கடமை புரியும் வைத்தியர்கள் இடமாற்றம் பெற்றுச் செல்லக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

யுத்தத்தால் பாதிப்படைந்து இடம்பெயர்ந்து மீள்குடியேறிய நிலையில் உள்ள வவுனியா வடக்கு மக்களுக்கான வைத்தியசாலையாக செயற்பட்டு வரும் நெடுங்கேணி வைத்தியசாலையில் இரு வைத்தியர்கள் பணியாற்றி வருகின்றனர். ஆனால் அவ் வைத்தியசாலையில் ஒரு வைத்தியர் தங்குவதற்கான விடுதி வசதி மாத்திரமே உள்ளது. இதன் காரணமாக இரு வைத்தியர்களும் ஒரு விடுதியையே பயன்படுத்தி வருகின்றனர். தங்குமிட வசதி போதாமையால் அங்கு கடமை புரியும் வைத்தியர்கள் மாற்றலாகி வேறு வைத்தியசாலையை நோக்கிச் செல்லக்கூடிய நிலை உருவாகியுள்ளதாக தெரிய வருகிறது. (இ-250)

# சொற்பொழிவுகள்

நாரந்தனை -சரவணை கர்ணதோட்டம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவ காலச் சொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றன.

இதற்கமைய இன்று சமூக சேவை உத்தியோகத்தர் வேசிவராஜாவின் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும்.

*********

(யாழ்ப்பாணம்)


யாழ். சாவகச்சேரி -மட்டுவில் வடக்கு சந்திரபுரம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவகால சொற்பொழிவுகள் தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7.30 மணி வரை இடம்பெற்று வருகின்றன. இதற்கமைய இன்று சைவப் புலவர் கந்த சத்தியதாசன் வழங்கும் சிறப்புச் சொற்பொழிவு இடம்பெறும். (இ-5)

# வெளி மடைப் பூஜைத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சி வடக்கு தும்பளை நெல்லண்டை ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தான வருடாந்த வெளி மடை பூஜைத்திருவிழா நாளை சனிக்கிழமை இடம்பெறும். (இ-5)

# சந்தைப்படுத்தல் குறித்து புரிந்துணர்வு ஒப்பந்தம்



யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் சந்தைப்படுத்தல் பிரிவும் அலியான்ஸ் காப்புறுதி நிறுவனமும் இணைந்து சந்தைப்படுத்தல் தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று நேற்றைய தினம் யாழ் பல்கலைக்கழகத்தில் கைச்சாத்திடப்பட்டது.

அலியான்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் யாழ்.கிளையின் முயற்சியில் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தமானது யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தின் சந்தைப்படுத்தல் பிரிவில் கல்வி கற்று வெளியேறும் மாணவர்களுக்கு அலியானஸ் காப்புறுதி நிறுவனத்தில் 6 மாத கால வேலை வாய்ப்புடன் கூடிய சான்றிதழும் வழங்கப்படுவதாகும்.

முதன்முறையாக மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம், யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீ பீடாதிபதி தி.வேல்நம்பி, அலியான்ஸ் நிறுவனத்தின் உதவிப்பொது முகாமையாளர் சுசில் லியனகே மற்றும் சிரேஷ்ட வலய முகாமையாளர் மா.புவிராஜ் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.

இந்த நிகழ்வில் யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் விரிவுரையாளர்கள், மாணவர்கள், அலியான்ஸ் நிறுவனததின் யாழ்.பிராந்திய முகாமையாளர் மு.மகேந்திரராஜ் வியாபார அபிவிருத்தி முகாமையாளர் வி.நிதர்சன், பயிற்சி மற்றும் அபிவிருத்தி முகாமை யாளர் கருணாமூர்த்தி மற்றும் நிறுவனத்தின் உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர். (இ-9-95)

# யாழிலுள்ள மீனவக் குடும்பங்கள் உடனடியாக விபரங்களை பதியவும் நீரியல் வளத் திணைக்களம் அறிவிப்பு

யாழ்.மாவட்டத்தில் உள்ள மீனவ குடும்பங்களை பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதால் விரைவாக தமது குடும்ப விபரங்களை பதிவு செய்யுமாறு யாழ் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் ரமேஷ்கண்ணா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ,

நாடளாவிய ரீதியில் கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தால் மீனவ குடும்பங்களின் விபரங்களை பதிவு செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த வகையில் யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து கடற்றொழில் சங்கங்களுக்கும் குறித்த விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன. அங்கு விண்ணப்பப்படிவங்களை பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் கடற்தொழில் பரிசோதகர் ஊடாக யாழ். கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

குறித்த விண்ணப்பப்படிவங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து அனுப்பப்படும் பட்சத்தில் எதிர் காலங்களில் உதவிகளை பெறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# தமிழரின் கோரிக்கை திசை திருப்பப்படுகிறது

## முன்னாள் எம்.பி. சந்திரகுமார் ஆதங்கம்





தற்போது இனத்திற்கான உரிமை பிரச்சினையை விட இனத்திற்குள் நடக்கின்ற சமூக விரோத செயல்களை கட்டுப்படுத்துவது பற்றி பேச வேண்டிய நிலைக்கு தமிழ் தரப்பு தள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் நடக்கின்ற சமூக விரோத செயற்பாடுகள் தொடர்பில் அலரி மாளிகையில் அவசர கூட்டத்தை நடத்துகிறது என்றால் இதனை விட வெட்கப்பட வேண்டிய விடயம் வேறு என்ன இருக்கப் போகிறது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்தா.

கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி பழைய கச்சேரியில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தினால் சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக ஆரம்பிக்கப்பட்ட சான்றிதழ் கற்கை நெறியை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

எங்கள் சமூகம் மனித நாகரிகமற்ற சமூகமாக மாறிக்கொண்டிருக்கிறது. எனவே எங்கள் சமூகத்தின் மன நிலையில் மாற்றத்தைகொண்டு வரவில்லையெனில் மிக பாரதூரமான நிலையை நோக்கி எங்களது சமூகம் சென்றுவிடும். நாட்டில் ஏற்பட்ட யுத்தத்தால் தமிழ்ச் சமூகத்தின் கட்டமைப்பு சிதைந்து விட்டது. எனவே யுத்தத்தின் நேரடி பாதிப்பைச் சுமந்த கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற மாவட்டங்களுக்கு இது போன்ற கற்கை நெறிகள் மிக மிக அவசியமானது.

சுமார் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் மக்களை கொண்ட கிளி நொச்சி மாவட்டத்தில் 4ஆயிரத்து284 சிறுவர்கள் தாய் அல்லது தந்தை அல்லது இருவரையும் இழந்திருப்பது மாவட்டத்தில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் விடயமாக காணப்படுகிறது. அது மட்டுமன்றி சுமார் 5 ஆயிரம் பெண் தலைமைத்துவ குடும்பங்கள், நான்காயிரத்துக் மேற்பட்ட மாற்று வலுவுள்ளோர் என சமூகத்தில் ஏதோவொரு பாதிப்புக்குள்ளானவர்கள் காணப்படுகின்றனர்.

எனவே இவ்வாறான பாதிக்கப்பட்டவர்களை கொண்ட சமூகத்தில் கட்டுக்கோப்பான, வன்முறைகளற்ற ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்புவது பெரும் சவாலான விடயம். அதுவொரு கடினமான பணி. எனவேதான் மக்கள் மத்தியில் அடிப்படை விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதற்கு இவ்வாறான பயிற்சி நெறிகள் மிக அவசியமானது. இந்த பயிற்சியை பெறுகின்றவர்கள் கூட மக்களிடம் இந்தச் செய்தியை கொண்டு செல்ல வேண்டும் எனக கேட்டுக்கொண்ட அவர்,

புதிய புதிய சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், முதியோர் இல்லங்கள் உருவாக்கபபடுவது தவிர்ப்பட வேணடும், பிள்ளைகள் தங்களது குடும்பச் சூழலில் வாழ்கின்ற நிலைமை ஏற்படுத்தப்படல் வேண்டும், இருக்கின்ற சிறுவர் இல்லங்களும் படிப்படியாக குறைக்கப்படல் அவசியமானது. அப்போதே சமூகம் தனது பொறுப்பினை உணர்ந்து செயற்படும் எனவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பயிற்சி அமைப்பாளர் திருமதி.வாசுதேவன், யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாக பேராசிரியர் புஸ்பகாந்தன், மாவட்ட சிறுவர் நன்னடத்தை பணிப்பாளர் ராஜன், கரைச்சி பிரதேச திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர் விஜிதா என பலர் கலந்து கொண்டனர். (இ-5-312)

# குன்றும் குழியுமான வீதியால் பயணிப்போர் பெரும் சிரமம்

(கரணவாய்)

யாழ்.வடமராட்சி மாலுசந்தியில் இருந்து உடுப்பிட்டி வரை செல்லும் வீதி நீண்ட காலமாக குன்றும் குழியுமாக காணப்படுவதாக பொது மக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்குச் செல்லும் பிரதான வீதியாக இவ் வீதி காணப்படுகின்றது.

இவ் வீதி திருத்தம் தொடர்பாக உரிய அதிகாரிடம் பொது மக்களால் கோரிக்கைகள் விடப்பட்டிருந்த நிலையிலும் இவ்வீதிதிருத்துவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் எந்தவொரு அதிகாரியாலும் முன்னெடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே கவனிப்பாரான்றிய நிலையில் உள்ள இவ் வீதியை உரிய அதிகாரிகள் திருத்தி தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-60)

# தனியார் பேருந்து நிலையத்தில் கட்டாக்காலி நாய்கள் அதிகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுநகரில் அமைந்துள்ள தனியார் பேருந்து நிலையத்தில் கட்டாக்காலி நாய்கள் அதிகரித்து காணப்படுவதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். எனவே இவ்வாறான கட்டாக்காலி நாய்களை கட்டுப்படுத்த கரைதுரைப்பற்று பிரதேச சபையினர் முன்வரவேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாளாந்தம் பல நூற்றுக் கணக்கில் பொதுமக்கள், அரச பணியாளர்கள் என பலர் வந்து போகும் இப்பேருந்து நிலையத்தில் ஆங்காங்கே தொற்று நோய்களுக்கு உள்ளாகி நாய்கள் முதல் பல கட்டாக்காலி நாய்கள் உலா வருகின்றன.

இதனால் பிரயாணிகள் பெரும் அச்சத்துடனேயே பேருந்து நிலையத்திற்கு சென்று வருவதுடன் பல பொது மக்கள் அச்சம் காரணமாக வீதிகளில் நின்றே தமது பயணங்களை மேற்கொள்கின்றனர்.

அத்துடன் அப்பகுதிகளில் பல்வேறு தொற்றுக்களுக்கும் உள்ளாகிய கட்டாக்காலி நாய்கள் காணப்படுவதால் அத்தொற்றுக்கள் பொது மக்களுக்கும் பரவக்கூடிய அபாயமும் காணப்படுகின்றது. (இ-310)

# சட்டவிரோத நடவடிக்கை நந்திக்கடலில் அதிகரிப்பு

## 9 மீனவர்கள் கைது

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டம் வட்டுவாகல் தொடக்கம் வற்றாப்பளை வரைக்குமான நந்திக்கடலில் சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 9 மீனவர்கள் நேற்றுக்காலை கைது செய்யப்பட்டதுடன் பலநூறு மீற்றர் நீளமான சட்டவிரோத வலைகளும் கைப்பற்றப்பட்டன.**

இதுதொடர்பில்மேலும்தெரியவருவதாவது, சட்ட விரோத தொழில்நடவடிக்கையில்சிலர் ஈடுபடுவதால் மேற்படி கடலை நம்பி வாழும் முல்லைத்தீவு




வீச்சு தொழிலாளிகள் தொடர்ச்சியாக தமது வாழ்வாதார, பொருளாதார ரீதியாக பதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

பல கூட்டங்கள் கூடி பல இலட்சம் ரூபாவை செலவு செய்யப்பட்டதே தவிர எந்த விதமான ஆக்கபூர்வ முடிவுகளும் நடைமுறையிலில்லை என கடற்றொழிலாளர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். இந்நிலை முல்லைத்தீவில் கடற்றொழில் இடம்பெறும் ஒவ்வொரு பகுதியிலும் இடம்பெற்று வருகின்றதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்திலும் மீனவர்கள் பிரச்சினை பல மணி நேரம் பேசப்படும். ஆனால் அந்த சமூகத்துக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பதில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-310)

## சட்டவிரோத மணல் அகழ்வுக் குழு பொலிஸாரிடம் நேற்று அகப்பட்டது



கிளிநொச்சி பன்னங்கண்டி பிரதேசத்தின் ஆற்றுப் பகுதிகள் மற்றும் மக்களின் வயல் காணிகள் போன்றவற்றில் சட்டவிரோதமாக மணல் அகழ்வுப்பணிகள் நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்றன. நேற்றைய தினமும் குறித்த பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்ற போது பிரதேச மக்களால் கிளிநொச்சி பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதனை தொடர்ந்து சம்பவ இடத்திற்குச் சென்ற இரகசிய பொலிஸார் சிலரை கைது செய்யததோடு, பலர் தப்பியும் சென்றுள்ளனர்.

நேற்று வியாழக்கிழமை பன்னங்கண்டி பிரதேசத்தில் சட்டவிரோத மணல் அகழ்வில் பதினைந்துக்கும் மேற்பட்ட உழவு இயந்திரங்கள் மற்றும் எட்டுக்கும் அதிகமான டிப்பர் வாகனங்கள் என்பன ஈடுபட்டுக்கொண்டிருந்த வேளை சிவில் உடையில் கிளிநொச்சி பொலிஸாரின் விசேட குழு குறித்த இடத்திற்கு விரைந்து சென்ற போது ஐந்து உழவு இயந்திரங்களை தவிர ஏனையவை தப்பி ஓடிவிட்டன. சில உழவு இயந்திரங்கள் பெட்டியை விட்டுவிட்டும் தப்பிச்சென்றுள்ளன.

பிடிக்கப்பட்ட உழவு இயந்திரங்கள் மற்றும் சாரதிகளை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கு கிளிநொச்சி பொலிஸார் நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளனர்.



குறித்த சட்டவிரோத மணல் அகழ்வுக் குழுவினர் மணல் அகழ்வதற்கான அனுமதிப்பத்திரம் இன்றியும் அனுமதிக்கப்படாத இடங்களில் நீண்டகாலமாக மணல் கொள்ளையில் ஈடுபட்டு வந்துள்ளனர். இவர்கள் டிப்பர்வாகனத்துக்கான மணல் ஏற்றிச்செல்வதற்கான வழி அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொண்டு குறித்த பகுதியை அண்டியுள்ள உழவு இயந்திர சாரதிகளுடன் ஒப்பந்தங்களை பேசி உழவு இயந்திரத்திலிருந்து சட்டவிரோதமாக அகழ்ந்து மக்கள் குடியிருப்பினுள் வைத்து டிப்பர் வாகனத்துக்கு மாற்றி இலங்கையின் பல பாகங்களுக்கு கடத்தப்பட்டுள்ளது என தெரிய வருகின்றது.

பன்னாங்கண்டி ஆற்றுப்படுகையை அண்டியதாக நீண்ட காலமாக சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது. மக்களின் வயல் காணிகள் மற்றும் தென்னாங் காணிகள் என்பவற்றில் மிக மோசமாக ஆழமான குழிகள் தோண்டப்பட்டு மணல் அகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. இந்த பிரதேசத்தில் மழை காலங்களில் அடிக்கடி வெள்ளம் ஏற்பட்டு மக்கள் இடம் பெயர்ந்து பன்னங்கண்டி பாடசாலையில் சில நாட்கள் தங்கியிருப்பது கடந்த காலத்தின் அனுபவம்.

இந்த நிலையில் இயற்கை நலனை சிறிதளவும் கவனத்தில் எடுக்காது மிக மோசமாக மணல் அகழ்வில் ஈடுபடுவது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். (இ-312)

## கிரவல் மண்ணுடன் சவாரி; வீதியில் இறங்கிய மக்கள்



விசுவமடு தொட்டியடி பிரதான வீதி பல வருடங்களாக புனரமைக்கப்படாது இருந்த காரணத்தால் இப்பகுதி மக்கள் தமது சொந்தப் பணத்தில் திருத்தப் பணிகளை முன்னெடுத்தனர்,


தற்போது இவ்வீதியால் டிப்பர் வாகனங்கள் கிரவல் மண்ணுடன் சவாரி ஓடுவதை கண்டித்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீதிகளை செப்பனிட்டு தரக் கோரியும் வீதிக்கு இறங்கி அவ்வாகனங்களை மக்கள் இடைமறித்ததால் தற்காலிகமாக வாகன ஓட்டம் நிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் முற்பகல் பதினொரு மணியளவில் சுலோகங்களை கையில் தாங்கியவாறு வீதிக்கு இறங்கிய மக்கள் குறித்த வீதி முப்பது வருடங்களுக்கு மேலாக யாராலும் கண்டு கொள்ளாமல் இருப்பது கவலை அளிப்பதாகவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தமது வீதியை புனரமைத்து தருமாறும் சுமார் 350 குடும்பங்கள் இவ் வீதியை பயன்படுத்துவதாகவும் தெரிவித்தனர். (இ-312)

## முல்லை. புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் பால் பதனிடும் நிலையம் திறந்து வைப்பு







11 மில்லியன் ரூபா செலவில் கனடா நாட்டின் நிதியுதவியுடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பால் பதனிடல் நிலையம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் வைபவ ரீதியாக இலங்கைக்கான கனடா நாட்டின் உயர்ஸ்தானிகர் எம்.எஸ்.வைற்றினால் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கால்நடை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் அ.புஸ்பராஜாவின் தலைமையில் நேற்று முன்தினம் இந்நிகழ்வு இடம்பெற்றது.

இதன் நோக்கம் இப்பிரதேசத்திலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுப்பதற்காகவும் இப்பிரதேசத்திலுள்ள கால்நடை உரிமையாளர்களுக்கு நியாயமான விலையில் பாலை கொள்வனவு செய்வதும் இந்நிலையத்தில் பால் பதனிடப்பட்டு யோக்கட், தயிர், யூஸ், நெய் போன்ற உற்பத்திகள் செய்யப்பட்டு இந் நிலையத்தில் விற்பனை செய்யப்படும்.

இந் நிகழ்விற்கு இலங்கைக்கான வதிவிட ஐ.நா. பிரதிநிதி பீற்றர், கனேடிய உயர்ஸ்தானிகர் ஆலய அலோசகர் டாக்டர் களிபர், இலங்கைக்கான யு.என்.டீ.பீ. உதவிப்பணிப்பாளர் ஆர்.கணேசராசா, முல்லை. மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், கூட்டுறவு அ.உ. ஆணையாளர், உதவிப் பணிப்பாளர். கால்நடை சுகாதார திணைக்கள அதிகாரி. புதுக் குடியிருப்பு கால்நடை வைத் தியர், யூ.என்.டீ.பீ. நிறுவன பணி யாளர்கள், எவ்.எ. ஓ.நிறுவன பண்ணையாளர்கள், உறுப் பினர்கள், பணிப்பாளர்கள் ஆகியோரும் கலந்து சிறப்பித் தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை — மாதிரி வினாத்தாள் இல-08

### (12.05.2016 அன்று வெளிவந்த வினாத்தாளுக்குரியவை)

| | |
|---|---|
| (i) | 9) 1% |
| 1.இரவு வானம் | 10) சூரியன்,சந்திரன்,புவி |
| 2.சந்திரன் | 11) தாதுசேனன் |
| 3.அம்புயம்,ஆம்பல் | 12) தோணிப்பாடல் |
| 4.வளர்ந்து வளர்ந்து | 13) ரூ.100.00 |
| 5.சின்னஞ்சிறு | 14) உணர்வானாய்,சுதந்திரம் |
| 6.அம்மா | 15) மாணிக்ககங்கை |
| 7.கூறாய்+அம்மா | 16) இடியப்பம் |
| 8.நட்சத்திரங்கள் | 17) 7 |
| 9.அயல் | 18) 3 |
| (ii) | 19) குருதிச்சோகை |
| 1.ஏமாற்றி தப்பியோடல் | 20) கருவாடு |
| 2.ஏமாற்றுதல் | (ix) |
| (iii) | A மகாவலிகங்கை |
| 1.உத்தம நட்பு | B மாணிக்க கங்கை |
| 2.திருப்தியற்றமனம் | C நில்வளகங்கை |
| (iv) | D ஜின் கங்கை |
| 1.சிரமதானம் | E களனி கங்கை |
| 2.அட்டவதானி | (X) |
| (v) | 1. பாதுகாப்பான புகையிரதக் கடவை |
| 1.Hard disk | 2. முன்னால் சிறுவர் கடவை |
| 2.Font | (XI) |
| (vi) | 1. விருட்சிகம் |
| 1.சிற்றுண்டிச்சாலை எங்கே | 2. சிம்மம் |
| உள்ளது? | 3. பெருநாய் |
| 2.உங்களது வீட்டு முகவரி என்ன? | 4. சிறுகரடி |
| (viii) | (XII) |
| 1.உங்களிற்கு என்ன விருப்பம் | 1. 40$cm^2$ |
| 2.விமான நிலையம் | 2.8.30 நிமிடங்கள் |
| (viii) | 3. 41 kg 400g |
| i.புகைக்கக்கூடாது, | 4. 10/12 |
| ii.ஒலியெழுப்பக்கூடாது | 5. 2kg 750g |
| 2) எரிபொருள் நிரப்பு நிலையம் | 6. 288.00 ரூபாய் |
| 3) மாகாணத்துறை | 7. 624 புள்ளிகள் |
| 4) நீர்மட்டம் குறைதல் | 8.2017 ஆம் ஆண்டு |
| 5) வானவில்லிலுள்ள நிறங்கள் | 9. 12:50 H |
| 6) கழுகு | 10. 8 மணி 20 நிமிடம் |
| 7) வல்லாரை | (XIII) உரிய எழுவாய் பயனிலையுடன் கருத்துள்ள |
| 8) மஞ்சள் | வசனங்கள் எழுதியிருப்பின் புள்ளி வழங்குக. |


# மணிவிழா நல்வாழ்த்துக்கள்

## திருமதி கலைராணி மகாதேவன்



13.05.2016 இன்று வெள்ளிக்கிழமை
மணிவிழாக்காணும்
திருமதி கலைராணி மகாதேவன்
(BED, பயிற். கணிதம்)
(முன்னாள் பிரதி அதிபர் யா/பண்ணாகம்
மெய்கண்டான் ம.வி.)

பண்ணாகம் மெய்கண்டான் மாதாவை
அலங்கரித்து கண்ணான கணிதமதை
கரிசனையாய் கற்பித்து மண்ணிலே
கண்ணியமாய் வாழ வழிகாட்டி
கடமையாற்றும் கலைராணி
ஆசிரியை விண்ணாளும்
அம்பாள் அருள் யாவும் பெற்று
பல்லாண்டு வாழ்க என

வாழ்த்தும்
அன்புள்ளங்கள்

(4546)


# நம் இளம் தலைமுறையை நல்வழிப்படுத்துவதற்கு ஆலயம் தோறும் அறநெறிப் பாடசாலை வேண்டும்

## தென் கைலாய குரு முதல்வர் வலியுறுத்து

ஆலயம் தோறும் அறநெறிப் பாடசாலைகளை அமைத்து இளம் சமூகத்தினரை நல்வழிப்படுத்தி அனைத்து தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும் என திருகோணமலை தென் கைலாய ஆதீன குரு முதல்வர் தவத்திரு அகத்தியர் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடகிழக்கில் என்றும் இல்லாதவரை இளவயதினரிடையே குற்றச் செயல்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. இளம் சமூகம் சீரழிந்து வருவது வேதனை அளிக்கிறது.எனவே இளையவரை நல்வழிப்படுத்துவதற்கு சமூகத்தில் உள்ள அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம் ஆகும்.

ஆலயங்கள் தோறும் அறநெறி வகுப்புக்களை நடத்தி ஒழுக்க விழுமியங்களை ஆன்மீக வழியில் போதிக்க வேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகள் அறநெறி வகுப்புக்களுக்கு செல்கிறார்களா? என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.அறநெறி வகுப்புக்களை ஆரம்பிக்காத ஆலயங்கள் மிக விரைவாக வகுப்புக்களை ஆரம்பிக்க வேண்டும். சமயத் தலைவர்கள் இது தொடர்பான நடவடிக்கைகளை மிக விரைவாக மேற்கொள்ள வேண்டும்.

இவற்றின் மூலம் தான் எமது அடுத்த சந்ததியினரை அழிவில் இருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-9)

# விபத்தா? தற்கொலை?

வெள்ளவத்தை புகையிரத நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் புகையிரதத்தில் மோதுண்டு உயிரிழந்த இளைஞர் மற்றும் யுவதியும் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது. மாத்தறையில் இருந்துமருதானைநோக்கிப் பயணித்த புகையிரதத்திலேயே நேற்று முன்தினம் இவர்கள் மோதுண்டு உயிரிழந்ததாக புகையிரதம் வரும் தண்டவாளத்தில் இருந்து சுமார் 50 மீற்றர் தூரத்தில் இவர்கள் இருவரும் தண்டவாளம் நடுவில் வந்து நின்றுள்ளதாகவும் தற்கொலை செய்து கொள்வதற்கே அவர்கள் அங்கு வந்துள்ளதாகவும் புகையிரத சாரதி தெரிவித்துள்ளார். பின்னர் புகையிரதத்தை நிறுத்த நேரமின்மையால் அவர்கள் இருவரும் மோதுண்டதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5)


நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை
கலைமாமணி
Dr.S.S. சர்மா குருஜீ
076 725 6024
(4393)
நந்தாவில் அம்மன் கோவில், கொக்குவில்



## கல்யாண மாலை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா:13 சூரி செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பட்டதாரி/ அரசதொழில்
தொ.இ: B/4448

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 30 செவ் 2 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/4452

பிறப்பு: 1983RC
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 26செவ் 2 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:மிருகவைத்தியர்
தொ.இ: B/4455

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 42 சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:ENG/சொந்த தொழில் லண்டன் PR
தொ.இ: B/4456

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 20
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: G/5352

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 23
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/5357

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 13
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:பட்டதாரி
தொ.இ: G/5362

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 19செவ் 7 இல்
உயரம்: 155cm
தகைமை / தொழில்: O/L/ சொந்ததொழில்
தொ.இ: G/5363

## கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## இலங்கையில் வடக்கு மாகாணத்திலிருந்து பார்த்தீனிய (Parthenium hysterophorus தாவரத்தினை அழிப்பதற்கு பயனுள்ள உயிரினவியற் கட்டுப்பாடு ஓர் அறிமுகம்



### அறிமுகம்

இலங்கையில் வடக்குப் பகுதிக்கு இவ்வாக்கிரமிப்பு அந்நிய நச்சுத் தாவரம் இந்தியாவிலிருந்து 1987 ஆம்ஆண்டு இந்திய அமைதி காக்கும் படையினரின் வருகையின் விளைவாக அவர்களின் உணவுத் தேவைக்காக கொண்டு வரப்பட்ட செம்மறி ஆடுகளின் மூலமாக அறிமுகமானதாக நம்பப்படுகிறது. இதன் தாயகம் மெக்சிக்கோ மற்றும் தென் அமெரிக்கா என ஆய்வுகள் வலியுறுத்துகின்றன. இத்தாவரம் அதன் வெளித்தோற்றத்தின் அடிப்படையில் பல்வேறு பெயர் கொண்டும் அழைக்கப்படுகின்றது. (White top plant, Carrot grass).

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாணம் வவுனியா, கிளிநொச்சி மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஆகிய அனைத்து மாவட்டங்களிலும் இவ்வாக்கிரமிப்பு அந்நிய நச்சுத் தாவரம் 137225 ha நிலப்பரப்பினை ஆக்கிரமித்துள்ளதாக அறியக்கிடக்கின்றது.

### பார்த்தீனிய தாவரத்தின் உயிரியல் முக்கியத்துவம்

பயிர்ச்செய்கை நிலங்களில் பயிர்த்தாவரங்களுக்கு போட்டியாக அமைவதுடன் தரிசு நிலங்களையும் ஆக்கிரமிப்பு செய்வதுடன் பல்வேறு அதீத சூழல் நிபந்தனைகளையும் (கடும் வரட்சி வெள்ளம்) சகித்து வாழக்கூடியவையாகும். அதிக பூக்களையும் உச்ச முளை திறனுடைய வினைதிறனான பரம்பல் உத்தியையுடையதாகவும் நான்கே வாரங்களைக் கொண்ட குறுகிய வாழ்க்கை வட்டத்தினையும் கொண்டதாக அமைந்திருத்தல். அத்துடன் இத்தாவரத்தின் பகுதிகள் நேரடியாக மனிதனிற் படும்போது எரிச்சல், சொறி, தடித்தல், கண்கள் சிவந்துவீங்குதலுடன் சில சமயம் மூச்சு விடுவதில் சிரமம் போன்றவையும் மட்டுமன்றி கால் நடைகளால் உண்ணப்படும் போது அவற்றிற் சமிபாட்டு ஒழுங்கீனங்களையும் ஏற்படுத்தும்.


### தற்போதைய கட்டுப்பாட்டு முறைகள்

வடக்கு மாகாணத் தைப் பொறுத்தவரை காலத்திற்குக் காலம் அதிக ஆக்கிரமிப்பிற்குட்பட்ட பொது இடங்கள் களைநாசினி விசிறப்படுவதன் மூலமும் பயிர்ச் செய்கை நிலங்களாயின் அவ்வப் போது செருக்குதல், உழுதல், கொத்துதல், எரித்தல், களை நாசினி பயன்படுத்தல் மூலமும் கட்டுப்பாட்டுக்குட்படுத்தப்படுகின்றது.

### பார்த்தீனிய தாவரத்தின் கட்டுப்பாட்டில் உயிரினவியற் கட்டுப்பாட்டின் தேவை

பாரிய அளவில் பரம்பலுக்குள்ளான ஆக்கிரமிப்பிற்குட்பட்ட பிரதேசங்களை மீட்பதற்கு களைநாசினி விசிறப்படுவதன் மூலம் சூழல் பாரியளவில் மாசாக்கத்திற்குட்படுவதுடன் செலவும் அதிகமாகும். பார்த்தீனிய தாவரத்திற்கென தேர்ந்த களைநாசினி பாவனையில் இன்மையால் சர்வ களைநாசினி பாவனையின்போது பார்த்தீனிய தாவரத்துடன் ஏனைய் தாவரவகைகளும் பாதிக்கப்படும். இது உயிர்ப்பல்வகைமையினை பாதிக்க வாய்ப்புள்ளது.

செருக்குதல், உழுதல், கொத்துதல், எரித்தல் போன்ற பொறிமுறை அழிப்பின் மூலம் மனிதவலு வீணடிக்கப்படுவதுடன் அதிலீடுபடுவோர்க்கு ஒவ்வாமை நோய் நிலைமையும் ஏற்படலாம்.



### பார்த்தீனிய தாவரத்தின் கட்டுப்பாட்டில் உயிரினவியற் பிரயோகம்

உயிரின்வியற் கட்டுப்பாடு என்பது ஓர் உயிருள்ள அங்கி (தாவரம் விலங்கு) யைக் கட்டுப்படுத்த இன்னோர் உயிருள்ள அங்கியைப் பயன்படுத்துவதே இதன் உயிரியல் விஞ்ஞான அடிப்படையிலான தத்துவமாகும்.

இது இலகுவானது என்பதுடன் மலிவானதும் உள்ளூரிலேயே பரந்து வியாபித்துள்ள உயிரங்கிகள் பலவற்றுள்ளும் பொருத்தப்பாடுடைய சில உயிரங்கிகள் இனங்காணப்பட்டுள்ளன.

கட்டுப்பட்ட தாவரத்தண்டொட்டுண்ணி (obligate stem parasitic plant) Cuscuta sp தூத்துமக் கொத்தன், தாவரச் சாற்றினை உறிஞ்சும் பூச்சி (sap sucking insect-mealy bug).

மேற்படி அங்கிகள் வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும்காணப்படக்கூடியவையாகும்.

### Cuscuta sp தாவரத்தின் உயிரியல்

மஞ்சள், செம்மஞ்சள் நிறத்திலான இலைகளற்ற நலிந்த மெல்லிய தண்டுடைய பூக்கும் தாவரம் வித்துக்களை உருவாக்கும். வினைத்திறனான ஒளித்தொகுப்பினை மேற்கொள்வதில்லை. பொருத்தமான சூழலில் வித்துக்கள் முளைக்கும். தகுந்த தாவர ஆதாரம் கிடைப்பின் அத்தாவரத்தின் தண்டிற்கும் தனது தண்டிற்குமிடையில் இணைப்பினை (haustoria) உருவாக்குவதன்மூலம் தொற்றும். இணைப்பின் மூலம் தொற்றிய தாவரத்திலிருந்து தனக்குத் தேவையான நீரையும் கனியுப்பையும் உணவையும் பெறும்.

### Mealy bug பூச்சியின் உயிரியல்

பூச்சி வகையை சேர்ந்தது. மிகமெதுவாக நகர்பவை. தம்மைச்சூழ வெண்ணிறமான பாதுகாப்பு உறையினைக் கொண்டவை. தாவரச் சாற்றினை உறிஞ்சும். குறையுருமாற்றத்துக்கூடாக வாழ்க்கைவட்டத்தை கடப்பவை. எறும்புடன் ஒன்றிய வாழ்வீட்டத்தில் பங்கெடுப்பவை.

### பார்த்தீனிய தாவரத்தின் கட்டுப்பாட்டுப் பொறிமுறை

இப் பொறிமுறையானது இனங்காணல், கட்டுப்படுத்தல், அறிமுகப்படுத்தல் தொடரவதானிப்பு என பல தொடர் செயன்முறைகளை உள்ளடக்கியது. மேற்படி அங்கிகளைக் கொண்ட இருப்பு இனங்காணப்பட்டு அவதானமாக பிரித்தெடுக்கப்பட்டு பார்த்தீனிய தாவரத்தின் காற்றுக்குரிய பகுதிகளில் செயற்கை முறையான தொற்று மூலம் அறிமுகப்படுத்தப்படும். பின்னர் தொடரவதானிப்பு செயன்முறை மூலம் தொற்று வீரியம் கண்காணிக்கப்படும். பார்த்தீனிய தாவரத்திற்கு மேற்படி அங்கிகளை தனித்தனி யாகவோ அன்றி இரண்டையும் இணைத்தோ தேவைக் கேற்ப அறிமுகப்படுத்த முடியும்.

இங்கு பார்த்தீனிய தாவரத்தின் ஆதாரம் Cuscuta தண்டொட்டுண்ணிக்குக் கிடைக்க அத்தாவரத்தின் தண்டிற்கும் தனது தண்டிற்குமிடையில் இணைப்பினை உருவாக்குவதன் மூலம் தொற்றிய பார்த்தீனிய தாவரத்திலிருந்து தனக்குத் தேவையான நீரையும் கனியுப்பையும் உணவையும் பெறும்.

Mealy bug பூச்சியும் தான் தொற்றலடைந்த பார்த்தீனிய தாவரத்திலிருந்து தாவரச்சாற்றினை உறிஞ்சுவதன் மூலம் தனக்குத் தேவையான நீரையும் கனியுப்பையும் உணவையும் பெறும்.

எனவே இதன் மூலம் பார்த்தீனிய தாவரத்தின் வளர்ச்சி விருத்தி என்பன பாதிக்கப்படும். மேற்படி அங்கிகளின் அறிமுகம் பார்த்தீனிய தாவரம் பூப்பதற்கு முன்னர்எனின்பூவினை உருவாக்க முடியாமலும் பூத்ததற்கு பின்னர் எனின் வீரியமான முளை திறனுடைய வித்துக்களை உருவாக்க முடியாமலும் மாறும் நிலை தோன்றும்.

ஈற்றில் பார்த்தீனிய தாவரத்தின் பரம்பல் வலுவற்றதாக மாற்றப்படும். இந்நிலை சிறப்பான கண்காணிப்பிற் தொடரப்படுமாயின் பார்த்தீனிய தாவரத்தின் இருப்பினை படிப்படியாக இல்லாதொழிக்கலாம்.

### எதிர் காலத்தில் பார்த்தீனியம் தொடர்பாக

இதற்கமைவாக பார்த்தீனிய தாவரமொன்றின் உடலில் தாவர ஒட்டுண்ணியாகவோ (plant parasites) தாவரச் சாற்றினை உறிஞ்சும் பூச்சி (phytophagus insect) யாகவோ அன்றி நோயாக்கியாகவோ (pathogens-bacteria, fungi, virus) செயற்படுவதன் மூலம் அவை உயிரினவியலுக்குரிய களைநாசினி (bioherbicides) யாக செயற்பட்டு அக்குறித்த அங்கியினை முழுமையாகவோ அல்லது பகுதியாக செயற்றிறனற்றதாக மாற்றும். இச் செயன்முறையினை உயிரினவியலுக்குரிய கண்காணிப்புடன் செயலாற்றுவதன் மூலம் அதனை குறித்த சூழலிலிருந்தே அகற்றிவிட முடியும்.

இது மட்டுமன்றி இவ்வாக்கிரமிப்பு தாவரங்களுக்கு இடையே போட்டியாக போட்டிக்குரிய தாவர இனங்களை (competitive plant species) அடையாளங் கண்டு வளர விடுவதன் மூலம் இவ்வாக்கிரமிப்பு தாவரங்களின் வளர்ச்சியையும் விருத்தியையும் தடுப்பதன் ஊடாக உயிரினவியற் கட்டுப்பாட்டிற் பிரயோகிக்க முடியும். அத்துடன் இவ்வாக்கிரமிப்பு தாவ ரங்களுக்கு அவற்றின் வளர்ச்சியை தடுக்க சில தாவரங்களின் வேரினாற் சுரக்கத்தக்க இரசாயனங்கள் (allelo chemicals) கூட பொருத்தமாக ஆய்வு செய்யப்பட்டு பயன்படுத்த முடியும்.

உயிரினவியலுக்குரிய முக்கியத்துவத்தின் வரையறைக்குட்பட்டு உயிர்ப்பல்வகைமைக்கு பங்கம் ஏற்படாத வண்ணம்பார்த்தீனிய தாவரத்தினை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டிய பாரிய பொறுப்பு சூழலை மனதார நேசிக்கும் ஒவ்வொருவரிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

திரு. ஞானமுத்து அன்ரன் சாள்ஸ்
[M. Phil, B.Sc (Hons) UJ, PGDE (OUSL), Cert .in. Eng UJ]
ஆசிரியர்
யா/புங்குடுதீவு மகாவித்தியாலயம்

## வாரத்திற்கு ஒரு புதிர்! 160

செம்பு-நாகம் கலந்த கலப்பு உலோகத்தின் (Brass) நிறம் வளியில் அற்றுப் போவதற்கு (disoloured) காரணமான வாயு எது ?

கலாநிதி.(செல்வி) ஷிவதர்சினி இராசலிங்கம்
ஆசிரியர், பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இரசாயனவியற்றுறை
யாழ்.பல்கலைக்கழகம்.

**புதிர் 160 இற்கான விடைகளை 23.05.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 500/- பணப்பரிசு வழங்கப்படும்.
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான சங்கம் பிரிவு A பிரிவிடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**புதிர் 159 க்கான 500/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

கே.ராஜகோபால்
அடைக்கலம் தோட்டம்
கந்தசுவாமி கோவிலடி,
வட்டுக்கோட்டை.

**புதிர் 159 க்கான கேள்வியும் விடையும்:**
ரேடார் (RADAR) கருவிகளில் பயன்படுத்தப்படும் தத்துவம் யாது?
தொப்ளர் (Doppler Effect)

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 158

சரியான விடை:-..........................................
முழுப்பெயர்:-..........................................
முகவரி:-..........................................
தொ.பே. இல:..........................................
கையொப்பம்:..........................................

# இலங்கையில் வெங்காய உற்பத்தியில் யாழ்ப்பாண மாவட்டம் தான் முதலிடம்

## ஆண்டுக்கு 55,000 மெற்றிக்தொன் உற்பத்தி வடக்கு விவசாய அமைச்சர் பெருமிதம்



இலங்கையில் வெங்காய உற்பத்தியில் யாழ் மாவட்டமே முதலிடத்தில் உள்ளது. ஏறத்தாழ 4,200 ஹெக்டயர் பரப்பளவில் ஆண்டுதோறும் 55,000 மெற்றிக்தொன் வெங்காயம் யாழ்ப்பாணத்தில் விளைவிக்கப்படுகிறது என வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை விவசாயிகளுக்கு வெங்காய விதைகள், வெங்காயக் குமிழ்கள் உட்பட நடுகைப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடை பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாய உற்பத்திகளில் வெங்காயம் பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தின் விவசாய வருமானத்தில் புகையிலை பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தது.

ஆனால், புகையிலை செய்யப்படும் பரப்பளவு இப்போது குறைந்து வருகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புகையிலை உற்பததியை முற்றாக நிறுத்துவதற்கும் காலஎல்லை ஒன்றை அறிவித்துள்ளார். இந் நிலையில், வெங்காய உற்பத்தியை நாம் அதிகரித்தால், புகையிலைச் செய்கையை நிறுத்துவதனால் ஏற்படும் வருமான இழப்பை ஈடுசெய்யலாம்.

வெங்காயச் செய்கையில் வெங்காயக் குமிழ்களை நடுகை செய்வதைவிட, வெங்காய விதைகளைப் பயன்படுத்துவது பொருளாதார ரீதியாக நன்மைகளைத் தரக்கூடியது. உற்பத்திச் செலவு குறைவு என்பதோடு, விதைகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் வெங்காயம் கூடுதலான நோய் எதிர்ப்புச்சக்தியையும் கொண்டுள்ளது. இதனால் பீடைகொல்லிகளுக்கு நாம் செலவு செய்யும் பணமும் மீதமாகிறது.

இதனடிப்படையிலேயே எமது விவசாய அமைச்சு இப்போது விதை வெங்காயத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்து வருகிறது. விவசாயத் திணைக்களத்தின் ஊடாக வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்கு வெங்காய விதைகளையும், வெங்காய விதைகளை உற்பத்தி செய்வதற்கு வெங்காயக் குமிழ்களையும் வழங்கி வருகிறோம் என்றும் தெரிவித்தார்.

யாழ் மாவட்டப் பிரதி விவசாயப்பணிப்பாளர்கி.ஸ்ரீபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்ற நடுகைப் பொருட்கள் வழங்கும் நிகழ்ச்சியில் வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் திருமதி வ.அமிர்தலிங்கம், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.மோகன், வளிமண்டலவியல் திணைக்கள சிரேஷ்ட அதிகாரி க.லோகேஸ்வரன் ஆகியோரும் விவசாயிகளும் கலந்துகொண்டிருந்தார்கள். (இ-5)

# மானிய உரத்துக்கு பதிலாக பணம் யாழில் 3,602 பேர் விண்ணப்பம்

மானிய உரத்துக்கு பதிலாக பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் 3 ஆயிரத்து 602 விவசாயிகள் 1669.94 ஹெக்டயர் நிலப்பரப்புக்கு விண்ணப்பித்துள்ளார்கள் என யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இ. நஷாந்தன் தெரிவித்துள்ளாா.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் ,

மானிய உரத்துக்கு பதிலாக பணம் வழங்கும் திட்டத்தின் கீழ் 2015 -2015 பெரும்போகத்தில் கமநல சேவை நிலையங்களின் ஊடாக மானிய உரத்தினை பெற்று நெற்செய்கையில் ஈடுபட்டு குறித்த நிலப்பரப்பில் 2016 சிறு போகத்தில் வெங் காயம், மிளகாய், மரக்கறி வகைகள் மற்றும் சிறு தானியம் போன்ற வேறு பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு பணம் வழங்கப்படவுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் விவசாயி ஒருவர் ஒரு போகத்தில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் பயிர்ச் செய்கையில் ஈடுபடும் போது அதிகபட்சமாக 25 ஆயிரம் ரூபாய் வரை பெற்றுக் கொள்ள முடியும். நெல் பயிரிட்டு அதெற்கென மானிய உரம் பெற்று அந்த நிலப்பரப்பில் வேறு பயிர் செய்கையில் ஈடுபட்டால் மாத்திரமே குறித்த பணத்தினை பெற்றுக் கொள்ள முடியும்.

அந்த வகையில் யாழ் மாவட்டத்தில் விண்ணப் பித்துள்ள விவசாயிகளின் விண்ணப்பங்கள் பரிசீலி க்கப்பட்டு மாவட்ட உரக் குழுவின் அனுமதியுடன் பணத்தை பெற்றுக்கொள்வதற்காக விவசாய அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டத்தில் வெளிபடைத்தன்மையை பேணும் பொருட்டு பணத்தினை பெறறுக்கொள்ளும் விவசாயிகளின் பெயர் விபரங்கள் ஒவ்வொரு கமநல சேவை நிலையங்களிலும் மற்றும் பிரதேச செயலகங்களில் காட்சிப்படு த்தப்பட்டுள்ள தெனவும் பயனாளிகள் தெரிவில் முறைப்பாடுகள் தெரிவிக்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளபபடும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# மாணவர்களுக்கான மாகாண மட்ட இடைத்தவணைப் பரீட்சை - 2016

க.பொ.த உயர்தர -2016 பரீட்சைக்குத் தோற்ற விருக்கும் கணித. விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான மாகாண மட்ட இடைத்தவணைப் பரீட்சை -2016 எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 23 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறவிருப்பதால் யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் தவறாது பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# தே.மு.க. அறிக்கையை பிரதி செய்தது அ.தி.மு.க

## சீறும் பிரேமலதா

திருவண்ணாமலை மாவட்டத்தில் போட்டியிடும் தே.மு.தி.க. வேட்பாளர்கள் கலையரசி மற்றும் மணிகண்டன் ஆகியோரை ஆதரித்து அக்கட்சியின் மகளிர் அணிதலைவி பிரேமலதா விஜயகாந்த் பிரசாரம் செய்தார்.

அப்போது அவர் கூறுகையில், அதிமுக, திமுக ஆகிய கட்சிகளுக்கு மாற்றாக தேமுதிக, தமிழ் மாநில காங்கிரஸ்- மக்கள் நலக் கூட்டணியை மக்கள் பார்க்கிறார்கள். சட்டசபை தேர்தலில் எங்கள் கூட்டணி 130 முதல் 160 இடங்களை கைப்பற்றி ஆட்சி அமைக்கும் என்று உளவுத்துறை ஆய்வில் தெரியவந்துள்ளது.

தே.மு.தி.கவின் தேர்தல் அறிக்கையை காப்பியடித்து தான் அதிமுக தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது என்றார். அதிமுக தங்களின் தேர்தல் அறிக்கையை காப்பியடித்துள்ளதாக திமுக, பாமக ஆகிய கட்சிகள் கூறி வரும் நிலையில் தேமுதிக மகளிர் அணி தலைவி பிரே மலதா விஜயகாந்தும் அதையே தான் தெரிவித்துள்ளார். (இ-5)

# ஆட்சிக்கு வந்தால் முதல் கையெழுத்து பயிர்க்கடன் தள்ளுபடியே-கருணாநிதி



திமுக ஆட்சிக்கு வந்தால் பயிர் கடன்களை தள்ளுபடி செய்வதே முதல் கையெழுததாக இருக்கும் என அதன் தலைவர் கருணாநிதி பிரசாரததில் தெரிவித்துள்ளார்.

சொந்த தொகுதியான திருவாரூரில் 2ஆம் கட்ட பிரசாரத்தை நேற்று முன்தினம் புதனகிழமை தொடங் கினார கருணாநிதி. அவர் பேசுகையில், திருவாரூர் தொகுதியில் கடந்த முறை தி.மு.க. சார்பில் போட்டியிட் டேன். என்னை வெற்றி பெற வைத்தீர்கள்.

மண்ணின் மைந்தராக, உங்கள் வீட்டு பிள்ளையாக மீண்டும் இங்கு போட்டியிடுகிறேன். உயிருள்ளவரை மக்களுக்காக உழைப்பேன். மாற்று அரசு உருவாக உங்களது அன்பான வாக்குகளை எனக்கு அளிக்க வேண்டும்.

அதேபோல ரூ.100 கோடி மதிப்பில் அரசு மருத்துவ கல்லூரி கொண்டு வரப்பட்டு சிறப்பாக தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சிறு, குறு விவசாயிகளுக்கு பயிர்க்கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. சிறு, குறு விவசாயிகள் என்று பிரிக்காமல் அனைத்து விவசாயிகளுக்கும் பயிர்க்கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை வைத் தனர்.

அந்த கோரிக்கையை ஏற்று சிறு, குறு விவசாயிகள் மட்டுமின்றி அனைத்து விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன்களும் தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவிக்கிறேன். இந்த அறிவிப்பை தி.மு.க. தேர்தல் அறிக்கையில் கூறியதாக நீங்கள் எடுத்து கொள்ள வேண்டும்," என்றார். (இ-5)

# விஜயகாந்துடனான கூட்டணி முறிவு மகிழ்ச்சியைத் தந்துள்ளது-ஸ்ராலின்



தேமுதிக கட்சி தலைவர் விஜயகாந்த் எங்களுடன் கூட்டணியில் வராதது நிம்மதியாக உள்ளது என திமுகவின் பொருளாளர் மு.க. ஸ்ராலின் கூறியுள்ளார்.

சட்டசபை தேர்தல் களத்தில் விஜயகாந்த் பங்கேற்கும் ஒவ்வொரு பொதுக்கூட்டமும் "காமெடி டைமாக"த்தான் இருக்கிறது. விஜயகாந்த் பேசுவது சிறிது நேரம்தான், அந்த சிறிது நேரப் பேச்சும் புரிந்து கொள்ள முடியாத வகையில் உள்ளது.

அதே நேரத்தில் பெரும் பகுதி நேரம் தொண்டர்களை ஒருமையில் திட்டுவது, நாக்கை துருத்தி அடிக்கை ஓங்குவது என்றெல்லாம் செய்துவிட்டு நான் மனதில்பட்டதைத்தான் பேசுவேன் என்கிறார். நல்ல வேளை விஜயகாந்த் திமுக கூட்டணியில் இணையவில்லை.

இப்போது தேர்தல் பிரசாரத்தின் போது விஜயகாந்த் குறித்து வரும் செய்திகளும், விமர்சனங்களையும் பார்க்கும் போது அப்படித்தான் நினைக்கத் தோன்றுகிறது.

ஒருவேளை அவர் திமுக தலைமையிலான கூட்டணியல் இணைந்திருந்தால் அவரது செயல்களுக்கு எல்லாம் நாங்களும்பதில்சொலல வேண்டிய நிலை வந்திருக்கும் என தெரிவித்துள்ளார். (இ-5)

# 303 அடி உயரத்தில் இந்தியாவின் மிகப்பெரிய தேசிய கொடியை அமைக்க தெலுங்கானா முடிவு

(ஐதராபாத்)

இந்தியாவிலேயே மிகப் பெரிய தேசிய கொடியை பறக்கவிட தெலுங்கானா அரசு முடிவு செய்துள்ளது. இதனை நிறைவேற்றும் பணியில் தெலுங்கானா அரசு தீவிரம் காட்டி வருகிறது. இதற்காக தெலுங்கானா அரசு ஐதராபாத் டேங்க்பென்ட் அருகே சஞ்சீவய்யா பூங்காவில் 303 அடி உயர தேசிய கொடி அமைக்கப்பட்டு வருகிறது.

இதற்கான கொடிகம்பம் அமைக்கும் பணியை கொல்கத்தாவை சேர்ந்த நிறுவனம் செய்து வருகிறது. இதன் மொத்த மதிப்பு ரூ.196 கோடியை தெலுங்கானா அரசு ஒதுக்கியுள்ளது.

முதல் கட்டமாக ரூ.1.32 கோடி வழங்கியுள்ளது. இதற்கு முன் ஜார்கண்ட் மாநில தலைநகர் ராஞ்சியில் இந்தியாவின் மிகப்பெரிய தேசிய கொடியாக இருந்து வருகிறது.

ராஞ்சியில் உள்ள தேசிய கொடி 99 அடி அகலம், 66 அடி உயரத்தில் 293 அடி உயரக் கம்பத்தில் பறக்க விடப்பட்டுள்ளது.

ஆனால் இதனை மிஞ்சும் வகையில் 66 அடி அகலம், 99 அடி நீளம் கொண்ட தேசியக்கொடியும், 303 அடி உயரக்கம்பம் தயாரிக்கப்பட உள்ளது. (இ-5)

# சீன அதிகாரிகள் குறித்து இங்கிலாந்து மகாராணி சர்ச்சைக்குரிய கருத்து



சீன அதிகாரிகள் முரட்டுத் தனமானவர்கள் என இங்கிலாந்து மகாராணி பேசிய பேச்சுக்கள் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

லண்டன் பக்கிங்ஹாம் அரண்மனையில் நேற்று முனதினம் மாலை முக்கிய பிரமுகர்கள் பங்கேற்றவிருந்து நிகழ்ச்சி நடைபெற்றது.

சீனாவுக்கான இங்கிலாந்து தூதரிடம் இந்நிகழ்ச்சியில் பேசிய மகாராணி எலிசபெத், கடந்த ஆண்டு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இங்கிலாந்துக்கு வந்தது குறித்தும் கருத்துக் களைத் தெரிவித்தார். சீன ஜனாதிபதியின் வருகையின் போது அவருடன் வந்த அதிகாரிகள் மிகவும் முரட்டுத்தனமாக நடந்துகொண்டதாக அவர தெரிவித்த கருத்துக்கள் குறித்த காட்சிகள் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

இதற்கிடையே, அதே நாளில், நைஜீரியா மற்றும் ஆப்கானிஸ் தான் நாடுகள் ஊழல் மிகுந் தவை என இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் கருத்து தெரிவித் தது தொடர்பான காட்சிகளும் வெளியாகியுள்ளன. (இ-5)

## போராட மறுத்து ஓடிய

# 35 ஐ.எஸ். தீவிரவாதிகள் உயிருடன் நிலத்தில் புதைப்பு

(தெஹ்றான்)

**ஐ.எஸ். எனப்படும் இஸ்லாமிய அரசுத் தீவிரவாத அமைப்பு, தப்பிக்கும் தீவிரவாதிகளைப் பிடித்து அவர்களை உயிரோடு நிலத்தில் புதைத்த அதிர்ச்சித் தகவல்கள் தற்போது வெளியாகியுள்ளன. தாம் தேடிப்பிடித்த தமது 35 போராளிகளை உயிரோடு அவர்கள் புதைத்திருப்பதாக ஈரானை மையமாகக் கொண்ட அஹ்லுல் பயிற் செய்தி நிறுவனம் (ABNA) தெரிவித்துள்ளது.**



ஐ.எஸ். இன் கட்டுப்பாட்டில் இருந்த ஈராக்கின் வடபுல பிரதேசங்கள் ஈராக்கிய இராணுவத்தின் கைகளில் வீழ்ந்து வருகிறது. அமெரிக்க அனுசரணையில் முனைப்பாக முன்னேறி வரும் ஈராக்கிய படையினருக்கு முகம் கொடுக்க முடியாமல் பல ஜிகாதிகள் தப்பித்து வருகிறார்கள்.

ஈராக்கின் வட மாகாண நகரான நினவாவை மீட்கும் கடும் போரை ஈராக்கிய படையினர் முன்னெடுத்து வருகிறார்கள். 2014 முதல் ஐ.எஸ். இன் கட்டுப்பாட்டில் இருக்கும் இந் நகரை தக்க வைக்க இஸ்லாமிய அரசுத் தீவிரவாதிகள் முனைகிறார்கள். பின்னடைவில் இருக்கும் ஜிகாதிகளில் பலர் ஆயுதங்களைக் கைவிட்டு தப்பித்து வரும் நிலையில், அவர்களைக் கைது செய்து உயிரோடு நிலத்தில் புதைத்துத் தண்டனை வழங்கியிருக்கிறது ஐ.எஸ்.

எத்தனை பேர் புதைக்கப்பட்டார்கள் என்ற விபரங்கள் குழப்பமாக உள்ளன. ஈராக்கியச் செய்திகள் அவ்வாறு புதைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை 45 எனக் குறிப்பிட்டுள்ளது. இத் தண்டனைகள் ஐ.எஸ். இன் கட்டுப்பாட்டில் உள்ள மௌசூல் நகருக்கு 30 மைல் தெற்கில் உள்ள கயாறா எனும் இடத்தில் நடத்தப்பட்டதாக ABNA செய்தி நிறுவனம் தெரிவிக்கிறது.

கடந்த திங்களன்று தப்பித்து ஓடிய பல ஜிகாதிகளை அல் கதார் என்ற மௌசூலிற்கருகே உள்ள கிராமத்தில் ஐ.எஸ். சுட்டுக் கொன்றதாக அராபிய மொழி ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (இ-5)




# பக்தாத் குண்டுவெடிப்புகளில் 30 பேர் பலி; 80பேர் காயம்!



ஈராக் தலைநகர் பக்தாத்தின் Kadhimiyah மாவட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்ற இருவேறு புதிய குண்டு வெடிப்புச் சம்பவங்களில் குறைந்தது 30 பேர் கொல்லப்பட்டதோடு, மேலும் 80 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் முதலாவது வெடிப்புச் சம்பவம் Kadhmiyah மாவட்டத்தின் வடபகுதியில் இடம்பெற்ற கார் குண்டுத் தாக்குதல் மூலம் இடம் பெற்றுள்ளதுடன், இதில் குறைந்தது 18 பேர் கொல்லப்பட்டதுடன் மேலும் 34 பேர் காயமடைந்தனர்.

ஷியா முஸ்லிம்களை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில், ஐந்து பொலிஸார் உட்பட பல பொது மக்கள் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்நிலையில், மேற்கு பக்தாத்தின் அல்-ரபி வீதியின் மருங்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனமொன்றில் பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் 12 பேர் கொல்லப்பட்டதுடன், 46 பேர் காயமடைந்துள்ளதாகவும் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை நேற்று முன்தினம் பக்தாத்தின் சதர் நகரில் இடம்பெற்ற கார் குண்டுத் தாக்குதலில் 84 பேர் கொல்லப்பட்ட தோடு, குறைந்தது 87 பேர் காயங்களுக்கு இலக்காகியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

பக்தாத் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அண்மைய வாரங்களாக பல குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெறுவது தொடர்கதையாகியுள்ள நிலையில், அவற்றுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## லண்டனில் கடும் மழையால் பாரிய வெள்ளப் பெருக்கு

லண்டனில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால், வீதி போக்குவரத்து பாதிக்கப்பட்டதோடு சில வீதி விபத்துகளும் ஏற்பட்டுள்ளன.

லண்டன் மற்றும் தென் கிழக்கு லண்டன் பகுதியில், நேற்றுமுன்தினம் முதல் நேற்றுக்காலை வரை விடாமல் பெய்த தொடர் மழையால் வீதிகள் பயணிக்க முடியாத அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளன.

புகையிரத சேவைகள் தடை செய்யப்பட்டதால் தலைநகர் செல்ல முயன்ற மக்கள் பெரிதும் அவதிக்கு உள்ளாகியுள்ளனர். தற்போது மழை மேற்கு நோக்கி நகர்வதால் Gloucestershire and South Wales பகுதியிலும் வீதிகள் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த கடும் மழையாலும், வெள்ளத்தாலும் லண்டனின் சில பகுதிகள் தற்போது மூடப்பட்டுள்ளன. வானிலை மையம் விடுத்துள்ள மஞ்சள் எச்சரிக்கையில், 24 மணி நேரத்தில் தெற்கு கடற்கரை பகுதியில் 25 மி.மீ. மழை பெய்யும் என எச்சரித்துள்ளது.

இந்த கடும் மழையால் லண்டனின் தென் கிழக்கில் உள்ள Lewisham-இல் உள்ள A20 என்ற வீதி மூடப்பட்டுள்ளது.

எனவே, Lewisham பகுதியில் உள்ள வீதிகள் மழை வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதால், வாகனங்கள் செல்ல முடியாது என லண்டன் போக்குவரத்து எச்சரிக்கை விடுத்துள்ளது. (இ-5)

## தப்பிக்க முயன்ற குடும்பத்தை எரித்துக் கொன்றது ஐ.எஸ்.

ஐ.எஸ்.குழுவினரின் ஆதிக்கத்தில் உள்ள பகுதியில் இருந்து தப்பிக்க முயன்ற சிறுவர்கள் உள்ளிட்ட குடும்பம் ஒன்றை உயிருடன் எரித்து கொலை செய்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக்கின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள கிர்கூக் நகரில் இச்சம்பவம் நடந்துள்ளது. தங்களது கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் இருந்து தப்பிக்க முயன்றதாக குற்றம்சாட்டப்பட்டுள்ள அந்த குடும்பத்தினரை கைது செய்த ஐ.எஸ். பொது வீதியில் வைத்து அவர்கள் மீது நெருப்பு வைத்துள்ளது. தீக்கிரையாக்கும் முன்னர் அவர்கள் மீது வாகன எரிபொருளை கொட்டியுள்ளது.

இதில் 3 சிறுவர்கள் உள்ளிட்ட அந்த குடும்பம் உடல் வெந்து சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளது. இச்சம்பவம் நடந்த அதே நாளில் அவர்களது குழுவினர் 35 பேரை உயிருடன் புதைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இவர்கள் ஈராக்கின் வடக்கு பகுதியில் போராடி வந்தவர்கள் எனவும், அங்கிருந்து தப்பிக்க முயன்றதாகவும் கூறப்படுகிறது. (இ-5)

## பதினாறு எதியோப்பிய கிறிஸ்தவர்களுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் மரண தண்டனை

லிபியாவில்16எதியோப்பிய கிறிஸ்தவர்களுக்கு கொடூரமான முறையில் மரண தண்டனை வழங்கப்படும் புதிய காணொலியை, ஐ.எஸ் தீவிரவாதிகள் வெளியிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை இணையத்தில் வெளியிடப்பட்ட இந்த காணொலி 29 நிமிடங்கள் கொண்டதாக அமைந்துள்ளதுடன், இருவேறு பகுதிகளில் வைத்து நிறைவேற்றப்பட்ட மரண தண்டனைகளைக் காட்சிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

இந்த காணொலியில் சிலர் மரங்களுக்கு கீழே முழங்காலிட்டு அமரும்படி பணிக்கப்பட்டு, பின்னர் முகமூடியணிந்த ஐ.எஸ்.தீவிரவாத உறுப்பினர்களால் துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் தலை துண்டிக்கப்படல் ஆகிய செயற்பாடுகளினால் கொல்லப்படுகின்றனர். மேலும் சிலருக்கு அதற்கு அருகில் உள்ள கடற்கரைப் பகுதியில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளமையும் காட்டப்படுகின்றது.

இந்த காணொலியில் ஐ.எஸ். தீவிரவாதிகளால் அறிக்கையொன்று வாசிக்கப்படுகின்றது. அதில் “இங்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுபவர்கள் அனைவரும் எதியோப்பிய கிறிஸ்தவ எதிரிகள். இஸ்லாமிய மதத்தைத் தழுவாமல் இருக்கும் ஏனைய மதத்தவர்கள் வழக்கமாக செலுத்த வேண்டிய கட்டாய மத வரியை செலுத்தாமையின் காரணமாக, இவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்காவின் சில பகுதிகளில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஐ.எஸ். தீவிரவாதிகள், பல கொடூரமான முறைகளைக் கையாண்டு பெருந்தொகையான மக்களுக்கு மரண தண்டனையை நிறைவேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)




# தூக்கம் வரல!

**வி**ருதூர் என்ற ஊரில் ரங்கா என்றொரு செல்வந்தன் இருந்தான். அவனுக்கு முன்னோர்கள் சேர்த்து வைத்த பெருஞ்செல்வம், வட்டு, நில புலன்கள் எல்லாம் இருந்தன. அவன பண்ணையிலும், வீட்டிலும் பல பணி யாட்கள் வேலை பார்த்து வந்தனர். இததனை செல்வமும் வசதியும் இருந தாலும், அவனுக்கு ஒரே ஒரு குறை மட்டும் இருந்தது. அது என்னவென் றால், சிறிது காலமாகவே அவன இரவில் தூக்கம் வராமல் தவித்து வந்தான்.

ரங்காவின் பால்ய நண்பன் பாலு. ரங்கா வும், பாலுவும் சிறுவயது முதலே ஒன்றாகப் படித்தவர்கள் என்பதால், இரு வருமே தங்கள் இன்ப துன்பங்களை ஒருவருக் கொருவர் பரிமாறிக் கொள்வர்.

ரங்கா தன் நண்பனான பாலுவைச் சந்தித்து, சமீபகாலமாக தான் தூக்கம் வராமல் தவிப்பதைப் பற்றிச் சொன்னான்.

பாலுவும் சிறிது நேரம் யோசித்துவிட்டு, “கவலைப் படாதே ரங்கா! எனக்குத் தெரிந்த சிறந்த நாட்டு மருத்துவர் இருக்கிறார். அவரிடம் சென்று உனக்கு வைத்தியம் செய்தால், நன்றாக தூக்கம் வரும். ஆனால், அந்த வைத்தியர் நம் ஊரின் அருகிலுள்ள மலைமீது வசிக்கிறார். நாம் நாளை காலை சென்று அவரைப் பார்க்கலாம். ஆனால், மலையடிவாரம் வரைதான் நாம் வண்டியில் செல்ல முடியும். அதற்கு



மேல் நடந்து தான் செல்ல வேண்டும். உனக்குச் சம்மதமா?” என்று கேட்டான்.

“எப்படியேனும் தனக்கு இரவில் தூக்கம் வந்தால் போதும்” என்று நினைத்த ரங்கா அதற்குச் சம்மதித்தான்.

மறுநாள் காலையில் இருவரும், ஒரு மாட்டு வண்டியில் மலையடி வாரத்தை அடைந்தனர். அங்கிருந்து மலை மீது இருவரும் நடந்தபடியே ஏறிச்சென்றனர். (தொடரும்)




- 1619 - டச்சு அரசியல்வாதி ஜொகான் வன் ஓல்டென பார்னவெல்ட் ஹேக் நகரில் நாட்டுத் துரோகக் குற்றச்சாட்டின் பேரில் தூக்கிலிடப்பட்டார்.
- 1648 - டில்லியில் செங்கோட்டை கட்டி முடிக்கப்பட்டது.
- 1765 - யாழ்ப்பாணத்தின் டச்சுத் தளபதியாக அந்தனி மூயார்ட் நியமிக்கப்பட்டான்.
- 1787 - ஆஸ்திரேலியாவில் குடியேற்றத்தை ஆரம்பிப்பதற்கென 11 கப்பல்களில் 772 சிறைக்கைதிகளையும் குற்றவாளிகளையும் ஏற்றிக் கொண்டு கப்டன் ஆர்தர் பிலிப் இங்கிலாந்தை விட்டுப் புறப்பட்டார்.
- 1830 - எக்குவாடோர் விடுதலை அடைந்தது.
- 1861 - பெரும் வால்வெள்ளி ஒன்று அவுஸ்திரேலியாவில் அவதானிக்கப்பட்டது.
- 1880 - நியூ ஜேர்சியில் மென்லோ பூங்காவில் எடிசன் மின்சாரத்தில் இயங்கும் தனது முதலாவது தொடருந்தை சோதித்தார்.
- 1888 - பிரேசில் அடிமைமுறையை இல்லாதொழித்தது.
- 1913 - நான்கு இயந்திரங்களினால் ஆன முதலாவது விமானத்தை ஈகர் சிபோர்ஸ்கி என்ற ரஷ்யர் இயக்கினார்.
- 1940 - இரண்டாம் உலகப் போர்: நெதரலாந்தினுள் நாசி ஜெர்மனியர் புகுந்ததை அடுத்து அதன் அரசி வில்ஹெல்மேனியா பிரித்தானியாவுக்கும் இளவரசி ஜுலியானா தனது குழந்தைகளுடன் கனடாவுக்கும் தப்பி ஓடினர்.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: வட ஆபிரிக்காவில் ஜெர்மனிய மற்றும் இத்தாலியப் படையினர் கூட்டுப் படைகளிடம் சரணடைந்தனர்.
- 1952 - இந்தியப் பாராளுமன்றத்தின் மேலவையான மாநிலங்களவையின் முதலாவது அமர்வு இடம்பெற்றது.
- 1954 - சிங்கப்பூரில் தேசியத்துக்கு எதிராக சீனப் பாடசாலை மாணவர்களின் போராட்டம் இடம்பெற்றது.
- 1960 - உலகின் ஏழாவது உயர மலையான தவுளகிரியின் உச்சியை சுவிட்சர்லாந்து மலையேறிகள் இருவர் முதன் முதலில் அடைந்தனர்.
- 1967 - சாகிர் உசேன் இந்தியாவின் முதலாவது முஸ்லிம் குடியரசுத் தலைவர் ஆனார்.
- 1969 - சீனர்களுக்கும் மலே இனத்தவர்களுக்கும் இடையில் இனக்கலவரம் மூண்டது. 190 பேர் கொல்லப்பட்டனர்.
- 1981 - ரோமில் திருத்தந்தை இரண்டாவது ஜோன் போலைக் கொலை செய்ய எடுக்கப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது.
- 989 - சீனாவில் தியனன்மென் சதுக்கத்தில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் உண்ணா நோன்புப் போராட்டத்தை ஆரமபித்தனர்.
- 1996 - வங்காள தேசத்தில் வீசிய கடும் புயலில் சிக்கி 600 பேர் வரையில் இறந்தனர்.
- 1997 - இலங்கை இராணுவம் விடுதலைப் புலகளுக்கு எதிராக ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தனர்.
- 1998 - இந்தோனீசியாவின் ஜகார்த்தாவில் சீனர்களுக்கெதிராக இனக்கலவரம் ஆரம்பமானது.
- 1998 - இந்தியா மேலும் இரண்டு அணு குண்டுச் சோதனைகளை மேற்கொண்டது.
- 2005 - உஸ்பெக்கிஸ்தானில் அண்டிஜான் என்ற இடத்தில் காவற்துறையினர் போராட்டக் காரர் மீது சுட்டதில் 187 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - யாழ்ப்பாணம், அல்லைப்பிட்டியில் 13 பொதுமக்களை இலங்கைக் கடற்படையினர் படுகொலை செய்தனர்.
- 2006 - தி.மு.க. தலைவர் மு. கருணாநிதி 5வது முறையாக தமிழக முதல்வர் பதவியை ஏற்றார்.
- 2007 - திருகோணமலை மொறவேவாப் பகுதியில் பொங்குதமிழ் உட்படப் பல நிகழ்வுகளில் முன்னின்று கலந்து கொண்ட வணகத்துக்குரிய நந்தரத்ன தேரோ இனம தெரியாதோரால் படுகொலை செய்யப்பட்டார்.

**பிறப்புக்கள**

- 1882 - ஜோர்ஜெஸ் பிராக், பிரெஞ்சு ஓவியர். (இ. 1963)
- 1905 - பக்ருதின் அலி அகமது, இந்தியக் குடியரசுத் தலைவர. (இ. 1977)
- 1918 - பாலசரஸ்வதி, பரத நாட்டிய மேதை (இ. 1984)
- 1956 - ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர், இந்திய குரு
- 1978 - மைக் பிபி, அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்.

**இறப்புகள்**

- 1898 - பி. ஆர். ராஜமய்யர், தமிழ் எழுத்தாளர். (பி. 1872)
- 1978 - வி. தெட்சணாமூர்த்தி, தவில் மேதை. (பி. 1933)
- 2000 - தாராபாரதி தமிழ்க்கவிஞர். (பி.1947)
- 2001 - ஆர். கே. நாராயண், இந்திய நாவலாசிரியர். (பி. 1906)


## வி. தெட்சணாமூர்த்தி தவில் மேதை



வி. தெட்சணாமூர்த்தி ஈழத்தின் ஒரு குறிப்பிடத்தக்க தவில் இசைக் கலைஞ ராவார். யாழ்ப்பாணத்தில் இணுவில் என்னும் ஊரில் புகழ்பெற்ற தவில் மேதை ச. விசுவலிங்கம், இரத்தினம்மாள் ஆகியோருக்கு மூன்றாவது மகனாக 1933 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் தனது ஆறாவது வயதில் தந்தையாரிடம் தவில் பயிற்சியை ஆரம்பித்து, தவில்மேதையானார். இணுவில் சின்னத்தம்பி, யாழ்ப்பாணம் வண்ணை காமாட்சி சுந்தரம் ஆகியோரிடம் விரிவாகவும் நுணுக்கமாகவும் பயின்று குறுகிய காலத்தில் அரங்குகளில் வாசித்து வந்தார். இவரது தவில் வாசிப்பு, யாவரும் வியக்கும் வண்ணமும், நாத சுகமுள்ளதாகவும், லய வேலைப் பாடுகள் நிறைந்ததாகவும் இருந்து வந்தது. மறைந்த நாதசுவர மேதை செம்பனார்கோவில் வைத்தியநாதன், நாங்கள் யாழ்ப்பாண த்துக்குச் சென்றபோது, ஒரு சிறுவன் வாசிக்கிறான் என்று சொன்னார்கள். காவேரிக் கரையில் நாம் பார்க்காத கலைஞர்களா என்று சற்று இளக்காரமாய்த்தான் நினைத்தோம். அந்தச் சிறுவன் வாசித்துக் கேட்டதும் புல்லரித்துப் போனோம் என்று மெச்சியுள்ளார். இந்தியப் பெருங்கலைஞரான நாச்சியார்கோயில் என். பி. இராகவப்பிள்ளையிடம் மேலும் லய சம்பந்தமான நுணுக்கங்களை பயின்று அவருடன் தவில் வாசிக்கும் பேற்றைப் பெற்றார். தொடர்ந்து இந்திய நாதசுவர மேதைகளாகிய காருக்குறிச்சி அருணாசலம், சேக் சின்ன மௌலானா, நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், டி. என். ராஜரத்தினம் பிள்ளை, போன்றவர்களுக்கு பெரும்பாலான இசை விழாக்களில் வாசித்து, பாராட்டுக்களையும் தங்கப்பதக்கங்களையும் பெற்றார். ஈழத்திலும் பி.எஸ்.ஆறுமுகம பிள்ளை, என். கே. பத்மநாதன், கே. எம். பஞ்சாபி கேசன், திருநாவுக்கரசு ஆகியோருக்கும் தவில் வாசித்தார். தெட்சணா மூர்த்தி தவில் வாத்தியத்தில் முதன் முறையாக பதினொரு எண்ணிக்கை கொண்ட கதி ஒன்றை அமைத்து அதற்கு உத்தரகதி எனப் பெயர் வைத்தார்.இவரது திருமணம் 1957 ஆம் ஆண்டு நடைபெற்றது. அளவெட்டி தவிற் கலைஞர் செல்லத்துரைப்பிள்ளையின் மகளான மனோன்மணியைத் திருமணம் புரிந்து ஐந்து பிள்ளைகளைப் பெற்றார். இவர்களில் இருவர் தவில் பயின்றார்கள். உதயசங்கர் தந்தை வழியிலேயே தவில் பயின்று தற்பொழுது தவில் வாசிப்பதில் சிறந்து விளங்கி வருபவர். மற்றவர் ஞானசங்கர்.தெட்சணாமூர்த்திக்கு சென்னையின் "தங்கக் கோபுரம்" விருது கிடைத்தது. திருவாவடுதுறை ராஜரத்தினம்பிள்ளை அவர்களின் நினைவு விழாவில் தங்கத்தாலான தவிற்கேடயம் 1968 இல் வழங்கப்பட்டது. வாழ்நாளின் பிற்பகுதியை இந்தியாவிலே செலவிட்டார். 1970 களில் இலங்கை வந்து 13. மே 1978 இல் காலமானார்.

# குறைநிரப்புப் பிரேரணை வாக்கெடுப்பில் குளறுபடி

## அறிக்கை கோருகிறார் பிரதமர்



(கொழும்பு)

கடந்த 5 ஆம் திகதி நாடாளுமன்றில் குறைநிரப்புப் பிரேரணை வாக்கெடுப்பின் போது ஆளும் கட்சியினரின் நடவடிக்கை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிக்கை கோரியுள்ளார்.

55 மில்லியன் ரூபா குறைநிரப்புப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.. இந்த குறைநிரப்புப் பிரேரணை வாக்கெடுப்பின் போது ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் எவ்வாறு செயற்பட்டார்கள் என்பது குறித்து முழுமையான அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில், அவைத் தலைவர் லக்ஷ்மன்கிரியெல்லவிற்கு நேற்றுமுன்தினம் உத்தரவிட்டுள்ளார்.

சிங்கப்பூர் விஜயத்தை முடித்துக்கொண்டு நேற்றுமுன்தினம் நாடு திரும்பிய பிரதமர், குறைநிரப்புப் பிரேரணை வாக்கெடுப்பு குறித்து அவைத் தலைவருடன் நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

குறைநிரப்புப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது ஆளும் கட்சியின் உறுப்பினர் எண்ணிக்கை குறைவடைந்தமைக்கான காரணம் அதற்கான பொறுப்பினை ஏற்றுக்கொண்டவர்கள் பற்றியும் அறிவிக்குமாறு பிரதமர் கோரியுள்ளார்.

குறைநிரப்புப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட போது ஆளும் கட்சியின் பிரதம கொறடா மற்றும் பிரதி பிரதம கொறடா அலுவலகங்களின் செயற்பாடுகள் குறித்து விளக்கம் கோரவும் தீர்மானித்துள்ளார்.

குறைநிரப்புப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பிற்கு விடப்பட்ட போது ஏற்பட்ட சர்ச்சை தொடர்பில் ஆராயவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் தலைமையில் குழுவொன்றை சபாநாயகர் கருஜயசூரிய நியமித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# கணக்காய்வுச் சட்டமூலம் அமைச்சரவையில் விரைவில்

(கொழும்பு)

கணக்காய்வுச் சட்டமூலம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கணக்காய்வு நடவடிக்கைகளை புதிய சட்டத்தின் மூலம் முன்னெடுப்பதற்கு இந்த சட்டமூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க ஊடகம் ஒன்றிடம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக சுயாதீனமாக கணக்காய்வாளரின் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு ஏதுவான வகையில் இந்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் கூறியுள்ளார்.

2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தின் உறுதிமொழிகளில் இதுவும் ஒன்று என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-5)

# இலங்கையில் கஞ்சா பயிரிட்டு வெளிநாட்டுக்கு அனுப்பத் திட்டம்

இலங்கையில் கஞ்சாச் செடிகளை வளர்த்து, மேற்கத்தேய நாடுகளின் மூலிகை மருத்துவ உற்பத்திகளுக்காக அனுப்பிவைக்கும் யோசனையொன்று முன்வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவத்துள்ளார். இதன்பிரகாரம், இலங்கையில் கஞ்சாச் செடிகளை வளர்த்து, ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கை ஆயுர்வேத கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட புதிய மூலிகை மருந்து உற்பத்திகளை. அறிமுகப்படுத்தும் நிகழ்வு, கொழும்பு வோட்டர்ஸ் எஜ் ஹோட்டலில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. இதன் போது கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் உரையாற்றிய அமைச்சர், "கடந்த காலங்களில், ஆயுர்வேத மூலிகை மருந்து உற்பத்திக்கு அபின் போதைப்பொருளின் பற்றாக்குறையொன்று நிலவியது. அதனால், அவற்றை இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து, அந்த மூலிகை மருந்து உற்பத்திகளை மேற்கொண்டோம். இதேபோன்று, வெளிநாடுகளல்தயாரிக்கப்படும்மூலிகை மருந்து உற்பத்திகளுக்குத் தேவைப்படும் கஞ்சாவினை, எமது நாட்டில் வளர்த்து, அவற்றை ஏற்றுமதி செய்ய திட்டமிட்டுள்ளோம்" என்றார். (இ-5)

# சோபித தேரரின் சடலத்தை பரிசோதனை செய்யாதது ஏன்?

## விசாரணைக்குழு நியமனம்

(கொழும்பு)

மறைந்த கோட்டே ஸ்ரீ நாக விஹாரையின் முன்னாள் விஹாராதிபதி மாதுளுவாவே சோபித தேரரின் மரணம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு கொழும்பு பிரதம நீதவானால் 5 பேர் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழு, சோபித தேரரின் சடலத்தைப் பிரேத பரிசோதனை செய்யப்படாதமைக்கான காரணங்களை கண்டறியவே நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



குறித்த குழுவில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் அனில் ஜெயசிங்க தலைமை தாங்குவதோடு மேலும், கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி அஜித் தென்னக்கோன், குமுதினி ரணதுங்க, நிமாலி பெர்னாண்டோ மற்றும் இரேஸ் விஜயமான்னே ஆகிய வைத்தியர்களும் இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## இக்கட்டு

(நேற்றைய தொடர்ச்சி...)

இப்போது நாமே அத்தகைய இருவர் காரணமாக இக்கட்டில் மாட்டிக் கொண்டால் என்னென்ன செய்வது? எப்படியெப்படி நடந்து அந்த நிலைமைகளைச் சமாளிக்கலாம் என்பது பற்றிக் கொஞ்சம் சிந்திப்போம்.

முதலாவதாக நாம் இந்த இருவரையும் அறிமுகப்படுத்தி வைத்த பாவத்திற்காக கொஞ்சம் நடையாய் நடக்கத்தான் வேண்டும். அதாவது அந்த இருவரையும் சந்திப்பதைத் தவிர்க்கும் எண்ணத்தைக் கைவிட்டு முடிந்தவரை சந்தித்து இருவரது மனக்குறைகளையோ பொருளாதார நட்டங்களையோ கொஞ்சத்திற்குக் கொஞ்சமாவது சரிக்கட்டப் பார்க்க வேண்டும்.

அறிமுகப்படுத்தி வைத்ததோடு நம் கடமை முடிந்து விட்டது என்றும் எனி எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்றும் நாம் எண்ணத் தொடங்கி விட்டோமானால் அல்லது அப்படிக் காட்டிக் கொண்டோமானால் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டிக் கொண்டிருந்த அந்த இருவரும் நம்மீது வருத்தப்படவோ பாயவோ ஆரம்பித்துவிடுவார்கள். இத்தகைய ஒரு சூழ்நிலை நிலைமை மோசமாக வழி வகுக்குமே தவிர, பிரச்சினையைத் தீர்க்க ஒருக்காலும் உதவாது.

அறிமுகப்படுத்தி வைத்தவர்களின் மனக்குறைகள் தீரும் வரை குறையும் வரை அந்த வரவு செலவுகளில் அல்லது உறவுமுறைகளில் நமக்கு அக்கறையும் ஆர்வமும் இருக்கிறது என்பதாகவும் அவர்களுள் ஒருவருக்குப் பாதிப்பு ஏற்பட்டு விட்ட நிலையில் (அல்லது இருவருமே தாங்கள் பாதிக்கப்பட்டுவிட்டதாகக் கருதும் சூழ்நிலையில்) அதற்காக நாம் வருத்தப்படுவதாகவும், தொடர்ந்து அந்த விடயத்தில் கவனம் செலுத்தி வருவதாகவும் காண்பித்துக் கொள்ள வேண்டும். இதுவே உண்மையான உணர்வாக இருந்தால் மிகவும் நல்லது.

அடுத்து அந்த இருவரை அறிமுகப்படுத்தி வைத்த நம் செயலிற்கு எந்தவிதமான உள்நோக்கமும் இல்லை என்பதை நாம் தெளிவுபடுத்திவிட வேண்டும். சற்று விளக்கமாகக் கூற வேண்டுமானால் இத்தகைய ஒரு செயலின் மூலம் பொருள் ரீதியான ஆதாயத்தை நாம் அடையவில்லை என்பதையும், எந்தவிதமான காரியத்தையும் அதன்மூலம் நாம் சாதித்துக் கொள்ளவில்லை என்பதையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு உணர்த்தி விட வேண்டும்.

பாவம் மனிதர், நல்ல எண்ணத்துடன் தான் நம்மை அறிமுகப்படுத்தி வைத்தார். இப்போது நம்மிடையே மாட்டிக் கொண்டு விழிக்கிறார் என்று அவர்கள் இருவரும் நம்மீது அனுதாபப்படும்படியான சூழ்நிலையையும் நாம் உருவாக்கிக் கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு சூழ்நிலையை உருவாக்க மேலே கூறிய இரு உத்திகளும் மிக உதவும்.

நம் நேர்மையை நிரூபிப்பதோடும் உள்நோக்கமில்லை என்பதை உணர்த்துவதோடும், நம்மீது அனுதாபத்தை ஏற்படுத்துவதோடும் நம் கடமை முடிந்து விட்டதாகக் கருதி விடாமல் எங்கே தவறு நிகழ்ந்தது? யார் மீது குற்றம்? எந்த நபர் அதிகம் பாதிக்கப்பட்டார் ஆகிய வினாக்களை மனத்தினுள் எழுப்பி அதற்கு விடைகண்டு தெளிவான முடிவுக்கு வர வேண்டும்.

இந்தவிடயத்தில் யார்மிகவும் வேண்டியவர், யார் அதிகம் அறிமுகமில்லாதவர் என்று பாரபட்சமாக எண்ணாமல் பாதிக்கப்பட்ட நபருக்குப் பக்கபலமாக இருந்து பரிகாரம் தேட முயல வேண்டும்.

இதன்மூலம் மற்ற ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடுமே? என்ற கேள்வி எழலாம்.

அதனால் பரவாயில்லை. நல்லவருக்குத் துணை போனோம் என்ற நம் உள்ளம் மட்டுமல்ல , இந்த விபரங்களைக் கேள்விப்படும் உள்ளங்களும் மகிழ்ச்சியுறும்.

லேனா தமிழ்வாணன்

# அடியாத மாடு படியாது



முனைவர்
மனோன்மணி
சண்முகதாஸ்

இது என்ன தலைப்பு என்று எல்லோரும் எண்ணக்கூடும். நமது முன்னோர்களின் நினைவிலே இத்தொடர் ஆழமாகப் பதிந்திருந்தது. குறிப்பாகப் பெற்றோர்களின் செயற்பாட்டை நெறிப்படுத்தும் ஒரு பழமொழியாக இன்று வரை நிலவும் தொடர் என்றால் மிகையாகாது. விலங்கு பற்றிய செய்தியாக விளங்கும் இத்தொடர் எப்படி மனிதனை நெறிப்படுத்தும்? என்ற கேள்வியும் இப்போது எழக்கூடும். தமிழரது பண்டைய வாழ்வியல் தந்த பட்டறிவினை பதி வாகவே இப்பழமொழி விளங்குகிறது.

மனிதன் நாடோடியாக அலைந்து திரிந்த வாழ்வியலின் வளர்ச்சி நிலையாக ஆற்றோரங்களிலே தங்கி வாழ்வு நடத்த முற்பட்ட போது சில விலங்குகளையும் தனக்குத் துணையாக்கிக் கொண்டான். அந்த வகையில் பயிர்ச் செய்கையை அவன் மேற்கொண்ட போது மாடு அவனுக்குப் பெரிதும் உதவியது. வாய்மொழி இலக்கியமாகத் தோன்றிய சங்க இலக்கியங்களிலே மாடு 'ஆநிரை' என அழைக்கப்பட்டதை அறிய முடிகிறது. 'ஆ' என்பது பசுவைக்குறித்தது காடும் காடு சார்ந்த பிரதேசமுமான முல்லை நிலத்தவருடைய தொழிலாக "ஆநிரை மேய்த்தலே" விளங்கியது. வயலும் வயல் சார்ந்த பிரதேசமுமான மருத நிலத்திலே உழவுத் தொழிலுக்கு உதவும் விலங்காக எருமை விளங்கியது. நீர் வளத்தையும் பசும் புல்லையும் விரும்பி வாழும் எருமையினம் மருத நிலத்து மக்களுக்குப் பெருஞ் செல்வமாகவும் பாற்பயன் தரும் பெருமை யுடையதாகவும் விளங்கியது. பெருவலிமையும் கடும் உழைப்புத்திறனும் கொண்ட எருமைகள் உழவர்களால் இன்றும் பேணப்பட்டு வருகின்றன. எருமையின் செயற்பாடுகளை மனிதர்களின் செயற்பாடுகளோடு ஒப்பிட்டுப் பண்டைய புலவர்கள் பாடியுள்ளனர். ஐங்குறு நூறு என்னும் சங்கத் தொகுப்பு நூலிலே "எருமைப்பத்து" எனப் பத்துப்பாடல்கள் இவ்வாறு பாடப்பட்டுள்ளன.

ஊர் பற்றிப் பாடும் புலவர் வருமாறு எருமை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

"மள்ளர் அன்ன தடம்
கோட்டு எருமை
மகளிர் அன்ன துணை
யொடு வதியும்
நிழல் முதிர் இலஞ்சிப்
பழனத்ததுவே
கழனித் தாமரை மலரும்
கவின் பெறு சுடர் நுதல்
தந்தை ஊரே"
(ஐங்குறுநூறு : 94)

மிக்க அழகுடைய ஒளி வீசுகின்ற முன் நெற்றியை உடையவளுடைய தந்தையின் ஊரில் தாமரை நிறைய மலர்ந்திருக்கும். வீரர்களைப் போலப் பெரிய கொம்புகளையுடைய ஆண் எருமைகள் வீரர்களுடைய காதலிமாரைப் போன்ற தம் பெண் எருமைகளோடு நிழல் நிறைந்த நீர் நிலைகளையுடைய வயற் பிரதேசத்திலே தங்கியிருக்கும்.

இந்த ஆண் எருமைகளை உழவுக்குப் பயன்படுத்தும் போது அவற்றை அதிலே பயிற்றுவதற்குத் தடி கொண்டு அடிக்கும் வழக்கம் இருந்துள்ளது. இயற்கையான நிலையில் கிடைக்கும் புல்லை மேய்ந்து இன்பமாக வாழ்ந்த எருமை மனிதனின் உழவுத் தொழிலுக்கு உதவியாளாக நேர்ந்த போது அவனுடைய சொற்படி வாழ நேரிட்டது. அது மட்டுமன்றி அவனுடைய செல்வமாகவும் கருதப்பட்டது. அந்த வகையிலே அவனோடு அருகில் வாழ்ந்த எருமை மாடு எனப் பெயர் பெற்றது. இச் சொல்லின் பயன் பாட்டைத் திருக்குறள் பதிவு செய்துள்ளது.

"கேடு இல் விழுச்
செல்வம் கல்வி ஒருவற்கு
மாடுஅல்ல மற்றை
யவை" (குறள் :400)

ஒருவனுக்கு அழிவு இல்லாத சீரிய செல்வமாவது கல்வியாகும். அது ஒழிந்த மணி, பொன் முதலானவை செல்வமல்ல. இங்கு மாடு என்ற சொல்லை வள்ளுவர் 'செல்வம்' என்ற பொருளிலே பயன்படுத்தியுள்ளார். மனிதனுடைய உழவுத் தொழிலுக்கும் உணவுப் பொருளாகிய பாலுக்கும் எருமை பயன்பட்ட போது அது பெருஞ் செல்வமாகக் கருதப்பட்டது. 'ஆநிரை' என்ற சொல் பசுக்கூட்டத்தைக் குறிப்பது. ஆனால் பசு என்பது வட மொழிச் சொல்லாகும். இன்று ஆநிரை என்ற சொல் 'பசுக்கூட்டம்' என வழங்கப் படுகிறது.

ஆனால் 'மாடு' என்ற சொல் விலங்கு என்னும் பொருளில் பழமொழியிலே பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தப் பயன்பாடு எருமையின் உழவுப் பயன்பாட்டிலிருந்தே தொடர்ந்திருக்க வேண்டும். ஒரு பயிற்சியை மேற்கொள்ளும் போது அதை நெறிப்படுத்த தடியைப் பயன்படுத்தும் வழக்கம் ஏற்கனவே இருந்துள்ளது. இந்தப் பயிற்றும் நிலை மனித வாழ்வியலிலும் வந்து சேர்ந்துள்ளது. கல்வி கற்பிக்கின்றபோது தடி கொண்டு அடித்துப் பயிற்றும் நிலை இருந்துள்ளது. ஆசிரியர் என்றாலே கையிலே பிரம்புடன் இருப்பவர் என்ற ஒரு கற்பனை உருவம் எல்லோர் மனதிலும் பதிந்துள்ளது. ஒரு மாணவன் தவறு செய்யும் போது அவனைத் தண்டிப்பதற்குப் பிரம்படி கொடுக்கும் வழக்கம் இற்றை வரையும் தொடர்கிறது. "அடியாத மாடு படியாது" என்ற முதுமொழி உழவுத் தொழிலில் மாட்டைப் படியவைப்பதற்கு அதற்கு தடியால் அடிக்கும் வழக்கம் இருந்ததை நன்கு உணர்த்துகிறது. யானையைப் பயிற்ற அங்குசமும் குதிரைக்குச் சவுக்குடியும் போல மாட்டுக்குத் தடியைப் பயன்படுத்தினர்.

விலங்கின் இயற்கையான வாழ்வியல் புல் மேய்ந்து நீர் அருந்தி மகிழ்வானதாக இருந்தது. மனிதன் விலங்கை தன்னுடைய முயற்சிக்குப் பயன்படுத்தத் தொடங்கிய போது விலங்கின் இயற்கையான வாழ்வியலில் மாற்றம் ஏற்பட்டது. வய லிலே நிலத்தை உழுவதற்கு ஏரிலே மாடுகளைப் பூட்டிப் பயிற்றல் நடைபெற்றது. மேலும் பயிர்ச் செய்கைப் பயன்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளை இழுப்பதற்கும் மாடுகள் பயன்படுத்தப்பட்டன.

இந்தப் பயிற்றலிலே மாடுகளை நெறிப்படுத்தச் சில வேளைகளில் அடிக்கவும் நேர்ந்தது. அடிப்பதன் மூலம் மாடுகளைப் படிய வைக்க முடிந்தது. மாடுகளும் அந்தப் பயிற்றல் மூலம் உழவு வேலை, வண்டி இழுக்கும் வேலை என்பவற்றைத் திறமையாகவே செய்தன. நெற்கதிர்களிலிருந்து நெல்மணிகளைப் பிரிப்பதை "சூடு மிதித்தல்" என அழைத்தனர். அந்த வேலைக்கும் மாடுகளே பயன்படுத்தப்பட்டன. இது இன்றுவரையும் தொடர்கிறது.

"மாடு கட்டிப்
போரடித்தால்
மாளாது செந்நெல் என்று
ஆனை
கட்டிப் போரடிக்கும்
அழகான
தென் மதுரை"

என்ற நாட்டார் பாடலிலும் இச் செய்தி பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே மாடு மனிதனுடைய செல்வத்தைப் பெருக்கும் ஒரு விலங்காக இருந்தமையால் மனிதனுடைய ஏனைய முயற்சிகளோடும் ஒப்பிட்டுப் பேசும் விலங்காகவே விளங்குகிறது. விளை பொருளோடு தொடர்புற்றிருந்த மாடு பின்னர் கல்வி முயற்சியிலும் தொடர்புறுத்தப்பட்டது. அந்நிலையில் "படியாது" என்ற சொல் படிப்பைத் தொடராது என்ற பொருளில் வழங்கப்பட்டது. "படிதல்" என்பது கட்டளைக்கு ஏற்ப நடத்தல் என்ற பொருளில் மாட்டின் செயற்பாடாக அமைந்திருக்கும். பின்னர் "படியாது" என்ற சொல் "பாடம் படித்தல்" என்ற செயற்பாட்டில் மனிதனோடு ஒப்பிட்டுப் பேசப்பட்டது.

எருமையும் இவ்வாறே மனிதனோடு ஒப்பிட்டுப் பேசும் விலங்காக உள்ளது. ஒருவரை பேசும் போது அவரை "நீ ஒரு எருமை" எனக் கடிந்துரைக்கும் வழக்கம் இன்றும் உள்ளது. பேச்சு வழக்கில் "எருமை மாடு" என்ற தொடரும் பயன்படுத்தப்படுகின்றது. மேலும் உழவர் தமக்குப் பயிர்ச் செய்கைக்கு உதவிய மாட்டிற்கு நன்றி கூறுமுகமாகத் தைப் பொங்கலுக்கு அடுத்த நாள் "மாட்டுப் பொங்கல்" நடைமுறையைச் செய்யும் வழக்கம் இன்றும் உள்ளது. "மாடு" என்ற சொல் மூன்று பொருளிலே தற்போது பயன்படுத்தப்படுகிறது. இடம், பக்கம், செல்வம் என முப்பொருள் கொண்ட சொல்லாகத் தமிழ்ப் பேரகராதி விளக்கம் தந்துள்ளது. எனினும் இன்று தமிழ் நாட்டிலே வழக்கிலுள்ள "மாட்டுப் பெண்" என்ற சொல்லையும் நோக்க வேண்டியுள்ளது. "சீதனம்" என்னும் செல்வத்தைக் கொண்டு வரும் மருமகள் "மாட்டுப் பெண்" என அழைக்கப்பட்டாள். பாரதி -யின் "பெண் விடுதலைக் கும்மி" என்னும் பாடலில் மாடு பெண்ணின் வாழ்வியலோடு இணைந்து இருக்கும் நிலை பதிவு செய்யப்பட்டுள்ளது.

"மாட்டை
அடித்து வசக்கித்
தொழுவினில்
மாட்டும்
வழக்கத்தைக் கொண்டு
வந்தே
வீட்டில்
எம்மிடம் காட்ட வந்தார்
அதை
வெட்டிவிட்டோமென்று
கும்மியடி (பாடல் : 3)

பெண்ணையும் மாட்டையும் ஒரு நிலையிலே வைத்து நடத்திய ஒரு நிலையிருந்ததை இதன் மூலம் அறிய முடிகிறது. எனவே "அடியாத மாடு படியாது" என்ற பழமொழி பெண்களின் வாழ்க்கையையும் எடுத்துரைக்கும் பணியையும் செய்திருக்கிறது எனலாம். மேலும் பழமொழிகளை நுண்ணாய்வு செய்ய வேண்டியதையும் இந்நிலை உணர்த்தி நிற்கிறது.

# இலங்கையில் நிகழ்ந்தது இனப் படுகொலையே!

## பிரிட்டன் எம்.பி.சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**இலங்கையில் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொல்லையே என பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் ரயான் தெரிவித்துள்ளார்.**

பிரித்தானிய நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் நேற்றுமுன்தினம் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரித்தானிய தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரயான் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் முள்ளிவாய்க்கால் கொடூரங்களை நினைவு கூரும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சந்திப்பு ஒன்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் இறுதிப்போரிலிருந்து உயிர் தப்பி பிரிட்டனுக்கு வந்து அரசியல் தஞ்சம்கோரியுள்ள களமுனை வைத்தியர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு, தமது கோர அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தபோது கொல்லப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல்துறைப் பொறுப்பாளர் பாலசிங்கம் நடேசனின் புதல்வர் பார்த்தீபனும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டிருந்தார்.

இந்தநிகழ்வில்ஆளும்பழைமைவாதக் கட்சி, பிரதான எதிர்க் கட்சியான தொழிற்கட்சி மற்றும் லிபரல் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு கருத்துக்களை வெளியிட்டிருந்தனர். என்பீல்ட் வடக்கிற்கான பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் ரயான் உரையாற்றுகையில்,நாம் இவ்வாறான சாட்சியங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும்போது தான் போர்க்குற்றம் என்றால் என்ன என்பதனையும், அதற்கு எவ்வாறான விலைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்பதனையும் ஆத்மார்த்தமாக அறியக் கூடியதாக இருக்கிறது. இந்த விடயங்கள் குறித்து விசாரணைசெய்ய காத்திரமான சர்வதேச உள்ளீடு அடங்கலான ஒரு விசாரணைபொறிமுறை அமையவில்லையாயின், இலங்கையில் நிலையான சமாதானம் ஒருபோதும் ஏற்படாது.

இலங்கைத் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலையே. இவ்வாறான கோரச் சம்பவங்கள் இடம்பெற்றிருக்கும் போது இதனை வேறு எவ்வாறு அழைப்பது. பொறுப்புக்கூறும் நடைமுறையில் சர்வதேச உள்ளீடு நிச்சயம் உள்வாங்கப்பட வேண்டும். இதனைத்தான் ஐ.நா. கூறியிருக்கிறது. இதனைததான் இலங்கை அரசும் ஏற்றுக்கொண்டிருந்தது என தெரிவித்தார். (இ-5)

### விழிப்புணர்வும் ஒத்திகை பயிற்சியும்

யாழ்.காரைநகர் பிரதேச செய லக பிரிவில் உள்ள கிராம சேவை யாளர் பிரிவில் (J/ 48,காரைநகர் மத்தி இன்று 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் முன்னெச்சரிக்கை விழிப்புணர்வும் ஒத்திகைப் பயிற்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படும். இது தொடர்பில் பொதுமக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடையத் தேவையில்லை எனவும் பொது மக்களுக்கு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (இ)

### கலை விழாவும் ஒன்றுகூடலும் நூல் வெளியீடும்

தும்பளை நெல்லண்டை அம்மன் திருமண மண்டபத்தின் 2ஆம் ஆண்டு நிறைவையொட்டிய கலை விழாவும் ஒன்றுகூடலும் நூல் வெளியீடும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4மணியளவில்தும்பளை நெல்லண்டை அம்மன் திருமண மண்டபத்தில் வி.சேதுநாயகம் தலை மையில் நடைபெறவுள்ளது.(இ-5-60)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 719

தர்மசிலன்




விமல்



முதலாளி என்னை ஆசிர்வாதம் பண்ணுங்க!
எதுக்கு?
சீக்கிரமே எனக்கு வேற நல்ல இடத்தில வேலை கிடைக்கணும்னு!

அச்சு

மனேஜர் உங்க ஹோட்டல் றூம் 708 லேயிருந்து பேசுறேன்.
சொல்லுங்க சேர் என்ன வேணும்?
எனக்கும் என் பொண்டாட்டிக்கும் பெரிய வாக்குவாதம்.. ஜன்னல் வழியா வெளியே குதிச்சிருவேன்னு மிரட்டுறா...
சேர் இது உங்க பர்ஸனல் விடயம்.
முட்டாள் ஜன்னல் திறக்க வரலை சீக்கிரம் அதை திறக்க ஒரு ஆளை அனுப்பு.

சுதா



நான் முட்டை மட்டும் சாப்பிடுவேன் ஆனால் நான் ஒரு சைவன். நானும் அப்படித்தான் கொஞ்சம் பொறுமையா அந்த முட்டை கோழி ஆன பின்னாடி சாப்பிடுவேன் நானும் சைவன் தான்.

மது

வாய்விட்டு சிரிங்க...ப்ளீஸ்... சிரிங்க ப்ளீஸ்

மனைவி: இன்னக்கி என்னங்க சமைக்கட்டும்...
கணவன்: பிரியாணி செய் டி...
மனைவி: நேத்து தானங்க செஞ்சேன்...
கணவன்: தெரியும் டி.. இன்னைக்காவது சரியா செய்ரியான்னு பாப்போம்...

Like Us - www.facebook.com/siringa

நிஷாந்தன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

157

## எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா இணைந்து நடித்த ஆயிரத்தில் ஒருவன்

**ஜெயலலிதா**

கதாநாயகியாக ஜெயலலிதா ஒப்பந்தம் செய்யப்பட்டார். அவர் எம்.ஜி.ஆருடன் இணைந்து நடித்த முதல் படம் இது தான்.

மற்றும் எம்.என். நம்பியார், மனோகர், ராம்தாஸ், நாகேஷ், எல்.விஜயலட்சுமி, மாதவி ஆகியோரும் நடித் தனர்.

**கதை**

நாடோடி மன்னன் கதை எவ்வாறு திருப்பங்களோடும், விறுவிறுப்பான சம்பவங்களோடும் உருவாக்கப்பட்டதோ அதுபோல் ஆயிரத்தில் ஒருவன் கதையும் நவரசங்களுடன் மிகச் சிறப்பாக உருவாக்கப்பட்டது.

ஒரு சர்வாதிகாரியை எதிர்த்து மணிமாறன் என்ற இளைஞன் நடத்தும் போராட்டமே கதையின் மையக்கரு. கடல், கப்பல், அடிமைகள் என்று மேல்நாட்டுப் படங்களைப் போன்ற பிரமாண்டமான பின்னணியில் கதை உருவாகியது. ஆர்.கே.சண்முகம் வசனம் எழுதினார்.

கண்ணதாசனும் வாலியும் பாடல்களை எழுத, விஸ்வநாதன்-ராமமூர்த்தி இசை அமைத்தனர். பந்துலு டைரக்ட் செய்தார்.


படத்தின் பெரும்பகுதி கோவாவிலும் அதன் அருகே கடல் பகுதியிலும் படமாக்கப்பட்டது. எம்.ஜி.ஆரும், நம்பியாரும் மோதும் கடும் சண்டை, ஏராளமான பொருட் செலவில் ஆங்கிலப்படங்களுக்கு இணையாக உருவாக்கப்பட்டது.

09.07.1965 இல் ஆயிரத்தில் ஒருவன் வெளிவந்தது. முதல் காட்சியிலேயே அது மெகாஹிட் படம் என்பது தெரிந்து விட்டது. தியேட்டர்களில் கூட்டம் அலை மோதியது. எம்.ஜி.ஆரும் ஜெயலலிதாவும் மிகச் சிறப்பாக நடித்திருந்தனர். அவர்கள் ஏராளமான படங்களில் இணைந்து நடிக்க ஆயிரத்தில் ஒருவன் வழிவகுத்தது.

**இனிய பாடல்கள்**

கருத்தாழம் மிக்க இனிய பாடல்கள் படத்தின் வெற்றிக்கு துணை புரிந்தன.

கண்ணதாசன் எழுதிய அதோ அந்தப் பறவைபோல வாழ வேண்டும், நாணமோ, ஒடும் மேகங்களே ஆகிய பாடல்களும் வாலி இயற்றிய பருவம் எனது பாடல், உன்னை நான் சந்தித்தேன், ஆடாமல் ஆடுகிறேன், ஏன் என்ற கேள்வி ஆகிய பாடல்களும் திக்கெட்டும் எதிரொலித்தன.



பி.ஆர்.பந்துலு வசூல் மழையில் நனைந்தார். கடன் பிரச்சினையில் இருந்து மீண்டார்.

1965இல் எங்க வீட்டுப் பிள்ளை, ஆயிரத்தில் ஒருவன் ஆகியவை தவிர பணம் படைத்தவன், கலங்கரை விளக்கம், கன்னித்தாய், தாழம்பூ, ஆசைமுகம் ஆகிய படங்களிலும் எம்.ஜி.ஆர் நடித்தார்.

**கலங்கரை விளக்கம்**

கலங்கரை விளக்கம் ஜி.என்.வேலுமணி தயாரித்த படம். வசனத்தை சொர்ணம் எழுத, கே.சங்கர் டைரக்ட் செய்தார். காற்று வாங்கப் போனேன் ஒரு கவிதை வாங்கி வந்தேன் என்ற புகழ் பெற்ற வாலியின் பாடல் இடம்பெற்ற படம் இது.

கன்னித்தாய்-தேவர் பிலிம்ஸ் தயாரிப்பு. இதில் எம்.ஜி.ஆருடன் ஜெயலலிதா இணைந்து நடித்தார். இதற்கு வசனம் எழுதியவர் ஆர்.கே.சண்முகம். கே.வி.மகா தேவன் இசை அமைக்க, எம்.ஏ.திருமுகம் டைரக்ட் செய்தார்.

**"சஸ்பென்ஸ்" படம்**

பத்மா பிலிம்ஸ் தயாரித்த படம் தாழம்பூ. இதில் எம்.ஜி.ஆருடன் கே.ஆர்.விஜயா இணைந்து நடித்தார். எஸ்.ராமதாஸ் டைரக்ட் செய்தார்.

மலையாள எழுத்தாளர் கொட்டா ரக்கரா எழுதிய கதை. சஸ்பென்ஸ் நிறைந்த படம். (தொடரும்)

# ஆக்கிரமிக்கும் சிங்கள குடியேற்றம்

(நேற்றைய கட்டுரையின் தொடர்ச்சி)

இது குறித்து கருத்து தெரிவித்த கிழக்குமாகாண விவசாய கால்நடைகள் அமைச்சர் கி.துரைராஜசிங்கம் கூறுகையில்,

"குறித்த பிரதேசம் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டிருந்தாலும் இந்த பகுதி மட்டக்களப்பு மக்களுக்கு சொந்தமானது. நிர்வாக ரீதியாக பல நடைமுறைகள் இருந்தாலும் இந்த பகுதியில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் அனைத்தும் இங்கு உள்ள மக்களுக்காகவே மேற்கெள்ளப்பட வேண்டுமே தவிர, பக்கத்து மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு மட்டக்களப்பு எல்லையை பயன்படுத்தும் அதிகாரம் இல்லை. எனவே குறித்த மகாவலி அபிவிருத்தி திட்டத்திற்கான அதிகாரம் தற்போது ஜனாதிபதியின் கையில் உள்ளபடியால் இது குறித்து எமது தலைவர் இரா.சம்பந்தன் ஐயாவின் ஊடாக ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு வந்து நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார்.

**1978 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட சிங்கள குடியேற்றம்**

கடந்த 1978 ஆம் ஆண்டு இதேபோன்ற சிங்களக் குடியேற்றம் ஒன்றை அப்போது இருந்த திம்புலாகலயை சேர்ந்த பிக்கு ஒருவர் தலைமையில் மேற்கொண்டதாகவும் அதனை அன்று ஐக்கிய தேசியக் கட்சியில் நீதி அமைச்சராக இருந்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான தேவநாயகம் தடுத்து நிறுத்தியதுடன் அப்போது ஜனாதிபதியாக இருந்த ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் கட்டளைக்கு அமைய குறித்த பிரதேசத்தில் குடியேறிய சிங்களக் குடும்பங்கள் அனைத்தும் வெளியேற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

அப்போது இந்த குடியேற்றத்தை மேற்கொண்ட குறித்த பிக்குவின் மீது நீதி அமைச்சராக இருந்த மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தேவநாயகம் தாக்குதல் நடத்தியதாக கூறி அவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட சம்பவங்களும் பதிவாகியுள்ளது.

**பிரதேசத்திற்கு வழங்கப்பட்டுள்ள இராணுவ பாதுகாப்பு**

குறித்த சிங்கள குடியேற்றத் திட்டத்திற்கு இந்த பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்கிவருவதாக கால்நடை வளர்ப்பாளர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

குறித்த பிரதேசத்தின் சிங்கள குடியேற்ற திட்டமானது மட்டக்களப்பு தரவையில் உள்ள இராணுவ முகாமிற்கும் மகாஓயா அரலகம்விலவில் உள்ள இராணுவ முகாமிற்கும் இடையிலான வளங்கள் பாதையை மையமாக கொண்டே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த இராணுவ முகாமிற்கான போக்குவரத்திற்காக அமைக்கப்பட்ட மான்திலை ஆறு பாலம் மற்றும் வீதிகள் என்பன அபிவிருத்தி செய்யப்பட்டதன் காரணமாக இந்த பகுதியில் குடியேறியுள்ள குடியேற்ற வாசிகளுக்கு குடியேற்றத்திற்கான அபிவிருத்தி பொருட்களை கொண்டுவந்து வீடுகளை கட்டுவதற்கு வசதியாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த காடானது யானைகளின் அதிக நடமாட்டம் கொண்ட பகுதியாக இருப்பதனால் இங்கு குடியேறியுள்ள மக்களுக்கான பாதுகாப்பை இங்குள்ள இராணுவத்தினரே வழங்கிவருவதாக கூறப்படுகிறது இதற்காக குறித்த பிரதேசத்தில் சிறிய இராணுவ முகாம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

**அத்துமீறிய குடியேற்றத்தால் ஊருக்குள் படையெடுக்கும் யானைகள்!**

குறித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் அத்துமீறிய சிங்கள குடியேற்றம் காரணமாக வனாந்தரக் காடுகள் அழிக்கப்பட்டுள்ளதால் இப்பகுதியில் வாழ்ந்த யானைகள் மான்கள் என்பன மக்கள் வாழும் பகுதிகளை நோக்கி நகரத்தொடங்கியுள்ளது. இதனால் தமிழ் பிரதேசங்களில் அண்மைக்காலமாக யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதுடன் உயிரிழப்புக்களும் ஏற்பட்டுவருகின்றது.

காடுகளை அழிப்பவர்கள் மீது முப்படைகளும் பாயுமென நாட்டின் ஜனாதிபதி தெரிவித்துள்ள நிலையில் பல நூற்றுக் கணக்கான ஏக்கர் காடுகள் அழிக்கப்பட்டு குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுவரும் நிலையில் இது குறித்து வனபரி பாலன திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கமுடியாமல் போனது நாட்டிற்கு சாபக்கேடானது என்றே கூறவேண்டும். குறித்த பிரதேசத்தில் குடியேறியுள்ளவர்களுக்கு எதிராக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும் இவற்றை வனபரிபாலன திணைக்கள அதிகாரிகளினால் தடுக்க முடியாது போயுள்ளமை சந்தேக த்தையே ஏற்படுத்தியுள்ளது.

எது எப்படியோ கண்கெட்ட பின் சூரிய நமஸ்காரம் என்பது போல் பல வருடங்களாக இங்கு அத்துமீறிய சிங்கள குடியேற்றம் நிகழ்கிறது என்று தெரிந்தும் அது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டியவர்கள் அப்போது நடவடிக்கை எடுக்காமல் இன்று வீடுகள் விகாரைகள் பாதைகள் என பல அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்ட பின்னர் இப்போது சென்று நடவடிக்கைகளை எடுப்பது என்பது இந்த விடயத்தில் பல்வேறு அழுத்தங்களை உருவாக்கும் என்பதுடன் மட்டக்களப்பு தமிழர்களின் பூர்வீக நிலத்தை இழக்கின்ற செயற்பாடாக போய்விட்டது.

பல தடவைகள் இங்கு சிங்கள குடியேற்றங்கள் நடப்பதாக தெரியப்படுத்தியும் அது குறித்து கவனம் செலுத்தாத நிலையில் இன்று அப்பிர தேசத்தில் ஒரு நிரந்தர குடியே ற்றத திட்டமே உருவாகின்ற அளவுக்கு வீடுகள் விகாரைகள் பாதைகள் என பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து வருகின்ற நிலை உருவாக்கப் பட்டுவிட்டது.

இதற்கான பொறுப்புக்களை யார் ஏற்கப்போகின்றார்கள்? குடியேறியுள்ள சிங்கள மக்கள் வெளியேற்றப்படுவார்களா? மட்டக்களப்பு கால்நடை வளர்ப்பாளர்களின் வாழ்வாதார தொழில் காப்பாற்றப்படுமா? மட்டக்களப்பு மண் பாதுகாக்கப்படுமா? என்கின்ற பல்வேறு பட்ட கேள்விகளுக்கு விடை எதிர்வரும் காலத்தில் கிடைக்குமா என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

(முற்றும்)

# ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை விரைவில் இலங்கைக்கு கிடைக்கும்

(கொழும்பு)

பிரசல்ஸில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பை அடுத்து, விரைவில் ஜி.எஸ்.பி பிளஸ் வரிச்சலுகையை பெற்றுக்கொள்ள முடியும் என்று எதிர்பார்ப்பதாக பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர்ஷ டி சில்வா இதனை தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சந்திப்பு தொடர்பாக கருத்துரைத்த ஹர்ஷ டி சில்வா,

இலங்கை தற்போது ஜிஎஸ்பி பிளஸ் சலுகையை பெற்றுக் கொள்வதற்கான இறுதி அடியை, அதாவது விண்ணப்பிக்கக்கூடிய நிலையை அடைந்துள்ளதாக தெரிவித்தார்.

இலங்கை - ஐரோப்பிய ஒன்றியம் செயற்குழு கூட்டம் நேற்றுமுன்தினம் பிரசல்ஸ் ஸில் இடம்பெற்றது. இது விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் முன்னதான இறுதி பேச்சாக அமைந்திருந்தது.

இதில் இலங்கையின் சார்பில் பொது வர்த்தக பணிப்பாளர் சோனாலி விஜேயரட்ன உட்பட்ட குழுவினர் பங்கேற்றனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் சார்பில், ஒன்றியத்தின் வர்த்தக பணிப்பாளர் பீட்டர் பேர்ஸ் பங்கேற்றார்.

இதன்போது இலங்கையின் மனித உரிமைகள் மேம்பாடு, ஜனநாயக திருப்பல்கள் குறித்து ஆராயப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# விசாரணை முடிவடைவதற்கு முன் என்னைக் கைது செய்துவிட்டனர்

## யோஷித குற்றச்சாட்டு

**சீ.எஸ்.என் தொலைக்காட்சி நிறுவனத்தில் இடம் பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பான விசாரணைகள் நிறைவடைவதற்கு முன்னரே, தன்னை கைதுசெய்துவிட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனான யோஷித ராஜபக்ஷ குற்றஞ் சாட்டியுள்ளார்.**

சீ.எஸ்.என் தொலைக்காட்சி நிறுவன நிதிமோசடி குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்கு, கடந்த இரண்டு தினங்களாக, நிதி மோசடி பிரிவிற்கு யோஷித அழைக்கப்பட்டிருந்தார்.

இதனபோது, ஊடகவியலாளர்களிடம் அவர் மேற்குறித்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அத்தோடு கடந்த இரண்டு தினங்களாக ஒரே விடயம் தொடர்பாகவே தம்மிடம் அதிகாரிகள் கேள்விகளை தொடுத்ததாக யோஷித இதன்போது தெரிவித்தார்.

சீ.எஸ்.என் நிறுவனத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில், யோஷித உள்ளிட்டவர், கடந்த ஜனவரி மாதம் 30ஆம் திகதி கைதுசெய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

எனினும்இது தொடர்பான வழக்கு, விசாரணையில் உள்ள நிலையில், கடந்த வழக்கு விசாரணை யின் போது, நிதிக்குற்ற விசாரணைப் பிரிவில் ஆஜராகி வாக்குமூலம் வழங்குமாறு கடுவலை நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# அரசாங்கத் தரப்பிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

## கம்மன்பில எச்சரிக்கை



அரசாங்கம் விளம்பரம் செய்கின்றது.

எமது அரசாங்க ஆட்சியில் தற்போதைய அரசாங்கத் தரப்பிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பொரளை என்பம் பெரோ கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சால் தற்போது பத்திரிகைகளில் முழுப் பக்க விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. இந்த விளம்பரங்கள் அரசியல் ரீதியான விளம்பரங்களாகும்.

ராஜபக்ஷக்களின் மோசடியினால் வரி அறவீடு செய்யப்படுவதாகக் குற்றம் சுமத்தும் தற்போதைய அரசாங்கம் மக்களின் பணத்தை விரயமாக்கி அரசியல் நோக்கங்களில் விளம்பரம் செய்து வருகின்றது.

எனவே, எமது அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட உடனேயே இது தொடர்பில் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்கள் பணத்தில் அரசியல் ரீதியான விளம்பரங்களைச் செய்ய அதிகாரிகளுக்கோ அமைச்சர்களுக்கோ உரிமையில்லை. இவ்வாறு பொதுமக்கள் பணத்தைப் பயன்படுத்துவது இலஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.


பொருளாதாரம் மீது புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றி, சவால்களுக்கு மத்தியில் கடுமையான போராட்டம், பாரிய கடன் சுமையிலிருந்து எதிர்கால சந்ததியினரை மீட்பதே எமது முயற்சி போன்ற விடயங்களின் அடிப்படையில் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் தற்போதைய அரசாங்கம் விளம்பரம் செய்கின்றது.

இதற்காக பல கோடி ரூபா மக்களின் பணம் விரயமாக்கப்படுகின்றது. இந்த விளம்பரங்கள் மக்களை தெளிவுபடுத்துவதற்கு அன்றி எதிர்த் தரப்பினர் மீது அரசியல் ரீதியாக தாக்குவதற்கேயாகும் என உதய கம்மன்பில தெரிவித்துள்ளார். (இ-5)

# பேருந்து விபத்து;ஒருவர் பலி! 17 பேர் வைத்தியசாலையில்

இறக்குவானை - கவுடுவாவ பிரதேசத்தில் நேற்று அதிகாலையில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் ஒருவர் பலியானதுடன் 17 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பயணிகளை ஏற்றிவந்த பேருந்து ஒன்றும் கொள்கலன் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதனாலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை இறக்குவானைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)



# செய்தித்துளிகள்

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் 60ஆவது ஜயந்திதினம் இன்று

(யாழ்ப்பாணம்)

பூஜ்ய ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் 60ஆவது ஜயந்தி தினம் இன்று மாலை 5 மணிக்கு வாழும் கலை அமைப்பின் யாழ்ப்பாண நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளை நாளை மறுதினம் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இரத்ததான நிகழ்வு ஒன்றும் இடம்பெறவுள்ளது. (இ-5)

## வீதி ஒழுங்கும் பாதுகாப்பும் பயிற்சி நாளை மறுதினம்

(சாவகச்சேரி)

யாழ்.காங்கேசன்துறை மாவட்ட சாரணர் சங்கமும் தெல்லிப்பழை பொலிஸாரும் இணைந்து நடத்தும் காங்கேசன்துறை மாவட்ட சாரணர்களுக்கான வீதி ஒழுங்கும் பாதுகாப்பும் என்ற தலைப்பிலான பயிற்சி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வளாகத்தில் நடத்தவுள்ளதாக மாவட்ட சாரணர் ஆணையாளர் செ.சந்குணராஜா அறிவித்துள்ளார். (இ-5-29)

## ஆடு உரியவரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

நெல்லியடி பொலிஸாரின் பராமரிப்பில் இருந்த ஆட்டினை உரிமையாளர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொண்டதாக நெல்லியடிபொலிஸ் பொறுப்பதிகாரி பிரியந்த தெரிவித்தார்.

ஆட்டினை அடையாளம் கண்டு கொண்ட பருத்தித் துறையைச் சேர்ந்த ஒருவர் ஆதாரத்தினை காட்டி ஆட்டினை மீட்டுச் சென்றுள்ளதாக பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (இ)

## சமய அறிவுப் போட்டி ஞாயிறு நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலி ஸ்ரீ காளி அம்மன் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஆலய பரிபாலன சபையினரால் நடத்தப்படவுள்ள சமய அறிவுப்போட்டியானது நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ்.திருநெல்வேலி முத்துத் தம்பி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவர்கள் உரிய நேரத்திற்கு பரீசை மண்டபத்திற்கு வருகை தருமாறு செயலாளர் செ.சிவலோசன் அறிவித்துள்ளார். (இ-5)

## ஆவணக் காப்பகத்தின் 33வது நிகழ்வு நிறுவனம்,உடல் மற்றும் இடம்பெயர்வு

ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் 33 ஆவது நிகழ்வாக "நிறுவனம், உடல் மற்றும் இடம்பெயர்வு என்ற தலைப்பில் "பிரதீப் தளவத்த" நிகழ்த்தவுள்ளார்.

தன்னைச் சூழவுள்ள இருப்பையும் பொருளையும் அக்கறையுடன் நோக்குவதைத் தனது பயிற்சியாக கொண்டுள்ளதாகவும் தனது கலை ஈர்ப்பினைத் தினமும் முறுகிக்கொண்டிருக்கும் அரசியலில் காண்பதாகவும் வளர்ந்து செல்லும் கலை வடிவங்கள் பற்றி கலந்துரையாடவுள்ளார்.

மேற்படி நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை 15 ஆம் திகதி முற்பகல் 10மணி தொடக்கம் 12 மணிவரை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக்காப்பகம், 199, கோவில் வீதி,நல்லூரில் இடம்பெறவுள்ளது. (இ-5)

## ஒப்பந்தகாரர்கள் தொடர்பு கொள்ளவும்

யாழ். பருத்தித்துறை நகர சபையின் அபிவிருத்தி ஒதுக்க நிதி, 2016 ஆம் ஆண்டின் சபை நிதி ஒதுக்கீட்டில் 14.32 மில்லியன் ரூபா செலவில் முன்னுரிமை அடிப்படையில் சாஸ்திரியார் வீதி, தங்காலை வீதி, பெருவெட்டி வீதி, லூர்து மாதா கோவில் வீதி, கிழுவைப்பை வீதி, பூதவராயர் வீதி, வேதவனம் வீதி, முருகன் கோவில் வீதி, பிரதான வீதி இரண்டாம் ஒழுங்கை, அப்புலியோடை ஆகிய வீதிகளினை புனரமைப்பதற்காகப் பொருத்தமான ஒப்பந்தகாரர்களை தெரிவு செய்வதற்காக 2016. 04.29 ஆம் திகதி யாழ். தினக்குரல் பத்திரிகையிலும், வலம்புரிப் பத்திரிகையிலும் விளம்பரம் மூலம் கேள்வி கோரப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் 2016.05.16 ஆம் திகதிக்கு முன்னர் கேள்விப் பத்திரங்களினை பெற்று விண்ணப்பிக்க முடியும். மேலதிக தகவல்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

உலக வங்கியின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் நெல்சிப் திட்டத்தின் கீழ் 8.6 மில்லியன் ரூபா செலவில் பருத்தித்துறை வெளிச்ச வீட்டு வீதி புனரமைக்கப்பட்டு வருகின்றது. 4.8 மில்லியன் ரூபா செலவில் நாவலடி, கலப்பணாவத்தை வீதிகளும் இவ்வாண்டில் புனரமைக்கப்படவுள்ளன.

கடந்த காலங்களில் குடிநீர் விநியோகத்திற்காக குழாய் பொருத்துவதற்காக வீதிகளினை அகழ வேண்டிய நிலைகள் ஏற்பட்டிருந்தது. இதனால் நல்ல நிலையில் இருந்த சில வீதிகளும் சேதமடைந்தன. இந் நிலையினைக் கருத்திற் கொண்டு குழாய் மூலமாக குடிநீர் விநியோகம் பெற ஆர்வமுள்ள பொதுமக்கள் இம்மாத இறுதிக்குள் நீர்வழங்கல் வடிகாலமைப்புசபையுடன் தொடர்பு கொண்டு குடிநீர் இணைப்பினை பெற்றுக் கொள் ளுமாறு பிரதேச செயலாளர் அறிவித்துள்ளார். இ

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-12.05.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 143.70 | 147.50 |
| பிரிட்டன் | பவுண்ட் | 206.76 | 214.09 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 163.19 | 169.68 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 147.07 | 153.20 |
| கனடா | டொலர் | 111.02 | 115.65 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 104.48 | 109.42 |
| சிங்கப்பூர் | டொலர் | 104.59 | 108.59 |
| இந்தியா | ரூபா | 2.1882 | ------- |
| சீனா | யுவான் | 22.4148 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.6150 |
| குவைத் | டினார் | 483.5766 |
| ஓமான் | ரியால் | 378.5763 |
| கட்டார் | ரியால் | 40.0324 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8646 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6804 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 60 | 80 | 60 | 100 | 90 |
| உருளைக்கிழங்கு | 80 | 100 | 70 | 80 | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 200 | 100 | 100 | 100 | 100 | 80 |
| தக்காளி | 180 | 200 | 150 | 140 | 140 | 200 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 80 | 35 | 60 | 60 | 80 | 60 |
| கோவா | 100 | 120 | 80 | 100 | 80 | 120 | 80 |
| கரட் | 80 | 120 | 70 | 80-200 | 80 | 120 | 80 |
| பூசணி | 40 | 50 | 20 | 40 | 30 | 40 | 40 |
| புடோல் | 100 | 80 | 50 | 120 | 50 | 100 | 70 |
| வாழைக்காய் | 40 | 50 | 30 | 40 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 100 | 100 | 120 | 160 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 80 | 80 | 80 | 80 |
| பாகற்காய் | 140 | 200 | 120 | 130 | 100 | 120 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 60 | 80 | 60 | 80 | 80 |
| கருணைக் கிழங்கு | 90 | 150 | 90 | 100 | — | 120 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 80 | 80 | 80 | 80 | 100 |
| லீக்ஸ் | 140 | 100 | 100 | 100-160 | 120 | 160 | 140 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 160 | 70 | 140 | 100 |
| கறிமிளகாய் | 140 | 100 | 100 | 200 | 80 | 120 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 100 | 150 | 140 | 160 | 150 |
| போஞ்சி | 180 | 200 | 180 | 200 | 060 | 240 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 60 | 50 | 70 | — | 80 | 80 |
| கீரை - 1பிடி | 30 | 40 | 50 | 40 | 30 | 20 | 25 |
| தேசிக்காய் | 400 | 400 | 350 | 600 | 360 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 15-30 | 50 | 20 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 160 | 250 | 140 | 180 | 140 | 120 | 150 |
| வெங்காயப்பூ | 400 | — | — | — | — | — | — |
| முள்ளங்கி | 80 | — | 60 | 80 | — | 100 | 60 |
| பொன்னாங்காணி | 20 | 50 | 70 | 30 | 40 | 30 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 70 | — | — | — | — | — | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதாக இராணுவம் அறிவிப்பு 179

...விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணத்திற்குள் சுமார் 5 ஆண்டுகளுக்குப்பின் இப்போதுதான் இராணுவம் நுழைந்து உள்ளது.

இராணுவத்துக்குக் கிடைத்த இந்த வெற்றியை யாழ்ப்பாணத்தில் கொடி ஏற்றிக் கொண்டாடும் திட்டம் எதுவும் இல்லை.

### மறுப்பு

நல்லூர் பகுதியில் நடந்த போரில் ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்களைக் கொன்று விட்டதாகவும் 3 இராணுவ டாங்கிளை தகர்த்து விட்டதாகவும் விடுதலைப்புலிகள் தரப்பில் கூறப்படுவது தவறான செய்தி ஆகும்.

விடுதலைப்புலிகள் தங்களுக்குள் இரகசிய வானொலியில் பேசியபோது யாழ்ப்பாணத்தை இழந்து விட்டதால் எங்களுக்கு பசி இல்லாமல் போய்விட்டது. எங்களால் சாப்பிடக்கூட முடியாது என்று கூறி இருக்கிறார்கள். இராணுவம் அவர்களுடைய பேச்சை ஒட்டுக் கேட்டபோது இது தெரியவந்தது.

இவ்வாறு இராணுவ அதிகாரி சரத்முனசிங்கே கூறினார்.

### சந்திரிகா வேண்டுகோள்

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த யாழ்ப்பாணம் இப்போது இராணுவத்தின் பிடியில் வந்திருப்பதால் அந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் ஏதாவது கலவரம் ஏற்படலாம் என அரசாங்கம் அஞ்சியது.

எனவே இராணுவத்துக்கு கிடைத்துள்ள இந்த வெற்றியை அமைதியாகக் கொண்டாட வேண்டும் என்றும் தமிழர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் நடவடிக்கை எதிலும் ஈடுபடக் கூடாது என்றும் பொது மக்களை ஜனாதிபதி சந்திரிகா கேட்டுக் கொண்டார்.

வானொலியில் பேசிய போது அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

### கடும் நடவடிக்கை

யாராவது தமிழர்களுக்கு எதிரான அச்சுறுத்தல் நடவடிக்கையில் ஈடுபட்டாலோ அல்லது இனக்கலவரத்தைத் தூண்டினாலோ அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொலிஸாருக்கு உத்தரவிட்டு இருப்பதாகவும் அப்போது அவர் தெரிவித்தார்.

நாட்டில் முழு அமைதி ஏற்பட அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

### 2 இலட்சம் தமிழர்கள்

இராணுவம் யாழ்ப்பாணத்துக்குள் நுழைந்ததைத் தொடர்ந்து அங்குள்ள தமிழர்கள் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறினார்கள்.

சுமர் 2 இலட்சம் தமிழர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக வெளியேறி வன்னி பகுதியில் குடியேறினார்கள். இலட்சக்கணக்கில் மக்கள் புதிதாக வந்ததால் நெருக்கடியற்ற வன்னி பகுதியில் புதிய குடியிருப்புக்கள் தோன்றின.

அகதிகளாய் அங்கு வந்துள்ள மக்களுக்கு விடுதலைப் புலிகள் அங்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தனர். இதன் காரணமாக வன்னி பகுதி புதிய பொலிவுடன் திகழ்ந்தது.

அந்தப் பகுதிகளில் புதிதாக தேநீர் கடைகளும், மளிகைக் கடைகளும் உருவாக்கப்பட்டன. மேலும் அங்கு குடியேறியுள்ள மக்களுக்கு எல்லா வகையான உணவுப்பொருட்களும் கிடைக்க விடுதலைப் புலிகள் வழிவகை செய்தனர்.

கொழும்பு நகரில் விடுதலைப்புலிகளின் தற் கொலைப் படையினர் நடத்திய தாக்குதலில் சக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்துப் பல கட்டடங்கள் தீப்பிடித்து எரிந்தன. ஜனாதிபதி அலுவலகம் அருகே நடந்த இந்தச் சம்பவத்தில் 200 இற்கும் மேற்பட்டோர் பலியானார்கள். 1,500 பேர் படு காயம் அடைந்தனர்.

விடுதலைப்புலிகளின் ஆதிக்கத்தில் இருந்த யாழ்ப்பாணத்தை மீட்பதற்காகச் சிங்கள இராணுவம் நடத்திய தாக்குதலில் ஆயிரக் கணக்கான விடுதலைப்புலிகள் கொல்லப்பட்டனர்.

இதற்கு பதிலடி கொடுக்க விடுதலைப்புலிகள் தங்கள் தாக்குதலைத் தீவிரப்படுத்தினார்கள்

### தற்கொலைப்படைத் தாக்குதல்


கொழும்பு நகரின் இதயம் போன்ற கோட்டைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் தற்கொலைப்படையினர் 31.01. 1996 அன்று நடத்திய தாக்குதலில் நகரமே அதிர்ந்தது.

வெடி குண்டுகள் ஏற்றப்பட்ட வாகனத்தை மத்திய வங்கி கட்டட த்தின் மீது விடுதலைப் புலிகள் மோதியதைத் தொட ர்ந்து பயங்கர சத்தத்துடன் குண்டுகள் வெடித்தன. காலை 10.45 மணிக்கு இந்தச் சம்பவம் நடந்தது.

இந்தக் குண்டு வெடிப்பில் மத்திய வங்கியின் 12 மாடிக் கட்டட த்தின் மத்திய பகுதி இடிந்து விழுந்து தீப்பிடித்து எரிந்தது.

வெடிச்சத்தம் 5 கிலோ மீற்றர் முதல் 10 கிலோ மீற்றர் தொலைவு வரை கேட்டது.

இன்சூரன்ஸ் கட்டடத்திலும் தீப்பிடித்துக் கொண்டது.பக்கத்தில் உள்ள சில கட்டத்திலும் தீப்பிடித்துக் கொண்டது.




யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள ஊர்கள்.

(தொடரும்)

துருப்பிடித்து அழிவதைவிட
தேய்ந்து அழிவது சிறந்தது. -ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# உயிரிழந்து போன உறவுகளை உள்ளத்தால் தியானிப்போம்

2009ஆம் ஆண்டு மே மாதம் தமிழ் மக்கள் தங்கள் வாழ்வில் பேரிழப்புகளைச் சந்தித்த காலம்.

வாழத் துடித்தவர்களை; எங்களை காப்பாற்றுங்கள் என்று கெஞ்சியவர்களை துடிக்கத் துடிக்க கொன்றொழித்த காலம்.

யுத்தக் கொடுமையின் உச்சத்தை தமிழ் மக்கள் அனுபவித்த காலமும் இதுவே.

பிள்ளைகளைத் தனியே விட்டு உயிர் பிரிந்து போன பெற்றவர்கள்; பிள்ளைகளை இழந்து பித்தராய்த் திரியும் பெற்றோர்கள்; அநாதைப் பிள்ளைகளை பொறுப்பெடுப்பது யார்? என்ற கேள்விகள்; உயிர் இழந்த உறவுகளை அப்படியே விட்டு விட்டு வந்தோமே என்ற ஏக்கத்தின் இடிகள் என அனைத்துத் துன்பங்களையும் தாங்கி வந்த மக்களை முட்கம்பி வேலிக்குள் அடக்கிய கொடுமை.

இப் பெரும் துன்பம் நடந்து ஏழு ஆண்டுகள் நிறைவாகின்றன. எனினும் அந்த யுத்தத்தின் அனுபவங்கள், ஏக்கங்கள், பயப்பீதிகள் இன்னமும் அடிக்கடி எங்களை திணுக்குறச் செய்கின்றன.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த கொடும் போரின் நினைவுகள் ஏழு ஆண்டுகள் ஆகியும் போய் அகலவில்லை. போரினால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வில் இன்னமும் ஒளி ஏற்றப்படவில்லை. சொந்த நிலத்திற்கு செல்லவே முடியவில்லை என்றபோது மிகுதி சொல்லவா வேண்டும்?

எது எப்படியாயினும் வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த பெரும் போரில் உயிரிழந்த எங்கள் உறவுகளை நினைப்பது கட்டாயமானதாகும்.

உயிரிழந்த உறவுகளை நினைவு படுத்துவது என்பது அடிப்படை உரிமை.

எனவே எங்களோடு வாழ்ந்தவர்கள்; எங்களுக்காக வாழ்ந்தவர்கள்; அவர்கள் உயிரிழந்ததால் தான் நாங்கள் உயிர் வாழ்கிறோம் என்பதால், எங்களுக்காக தங்கள் உயிரை விட்டு எங்களை வாழ வைத்தவர்கள் நினைவு கூரப்படவேண்டியவர்கள்.

இந்த நினைவு கூரல் இந்த நாட்டிற்கும் சர்வதேசத்திற்கும் ஒரு செய்தியைச் சொல்ல வேண்டும்.

ஆம்! வாழத்துடித்தவர்கள், எங்களைக் காப்பாற்றுங்கள் என்று சர்வதேசத்திடம் மன்றாடியவர்களை பேயரசு கொன்றொழித்தது.

அதை சர்வதேச சமூகம் பார்த்திருந்தது. இந்தக் கொடும் அநீதி உலகில் எந்த மூலையிலும் இனி நடந்து விடக் கூடாது.

தமிழினத்துக்கு இப்படி ஒரு கொடுமை நடந்த போது ஐ.நா சபை உட்பட சர்வதேச நாடுகள் பார்த்திருந்த பாவம் இனி ஒருபோதும் இடம்பெற்று விடக் கூடாது.

இதை வலியுறுத்துவதாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அமையட்டும்.

இதற்கு மேலாக அன்புக்குரிய சர்வமதத் தலைவர்களே! இந்த மண்ணில் நடந்த உயிர்க்கொலை எனும் பாவத்துக்கு பிராயச்சித்த வழிபாடு செய்யுங்கள். சமய நம்பிக்கைகளின் அடிப்படையில், அவலமாக பறிக்கப்பட்ட ஆத்மாக்கள் சாந்தி பெற வழிபாடு ஆற்றுங்கள்.

இறந்த தங்கள் உறவுகளுக்காக இன்று வரை எந்த ஆத்ம ஈடேற்ற வழிபாடுகளும் செய்ய முடியவில்லை என்று மனத்தால் வெதும்புவோர் ஏராளம். இந்தக் குறைகள் எல்லாம் நிவர்த்திக்கும்படி ஒவ்வொரு ஆலயங்களிலும் மோட்ச பூசைகள் நடக்கட்டும்.

போரில் உயிரிழந்த ஆத்மாக்கள் அமைதியடைய நாம் அனைவரும் உள்ளத்தால் இறைவழிபாடு செய்வோம்.

## கையொப்பமிட்ட பிரதியமைச்சருக்கு ஓர் இலட்சம் ரூபாய்

திருமண நிகழ்வொன்றிற்காக சாட்சி கையொப்பம் இட்ட பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு ஓர் இலட்சம் ரூபாய் பணம் வழங்கப்பட்டுள்ளது. குறித்த திருமணத்தை நடத்தியவரே இவ்வாறு பிரதி அமைச்சருக்கு பணம் கொடுத்துள்ளார்.

எனினும் குறித்த பணமானது தனது தனிப்பட்ட தேவைகளுக்கு பயன்படுத்துவதற்கு அன்றி தனது அறக்கட்டளைக்காகவே பெற்றுக் கொண்டதாகவும், இதன் மூலம் ஏழைகளின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளதாகவும் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். (இ-5)

# விவசாயிகளுக்குரிய பணம் வங்கியில் வைப்பிலிடப்பட்டது

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட விவசாயிகளிற்கு உர மானியத்திற்கான பணம் வழங்கல் மற்றும் சேதனப் பசளைப் பாவனையை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டம் 2016 இன் கீழ் ஹெக்டருக்கு 12 ஆயிரத்து 500ரூபாய் என்னும் அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 4 ஆயிரத்து 390 விவசாயிகளுக்கான 4ஆயிரத்தி 90.6 ஹெக்டருக்கான பணமாகிய 5கோடியே 11இலட்சத்து 32ஆயிரத்து 500 ரூபாய் பணம் விவாயிகளின் உரிய வங்கிக் கணக்குகளிற்கு வைப்பிலிடப்பட்டுள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்கமைய இலங்கை வங்கியில் 36.66 மில்லியன் ரூபாயும் மக்கள் வங்கியில் 14.3875 மில்லியன் ரூபாயும் ஹற்றன் நஷனல் வங்கியில் 60ஆயிரம் ரூபாயும் கொமர்சல் வங்கியில் 25 ஆயிரம் ரூபாயும் வைப்பிலிடப்பட்டுள்ளதாகம் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் விவசாயிகள் உரிய வங்கிகளுடன் தொடர்பு கொண்டு தமக்கான பணத்தினைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் கமநல அபிவிருத்தித் திணைகளத்தினர் தெரிவித்துள்ளனர். (இ-302)

## சாவகச்சேரி பிரதேச சபையின் புதிய செயலாளராக முகுந்தினி

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளராக திருமதி கோடீஸ்வரன் முகுந்தினி நேற்று முன்தினம் தொடக்கம் பதவியேற்றுள்ளார். இவர் முன்பு இப்பிரதேச சபையில்கடமையாற்றி (சுப்றா) அதி சிறப்பு பரீட்சையில் சித்தியெய்தி சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் நிர்வாக உத்தியோகத்தராக பதவியுயர்வுடன் 13.01.2016 இல் கடமையை பொறுப்பேற்றிருந்தார்.

இந்நிலையில் சாவகச்சேரி பிரதேச சபையில் செயலாளராக கடமையாற்றிய அ.வினோராஜ் கரவெட்டி பிரதேச சபைக்கு செயலாளராக மாற்றலாகிச் சென்றதையடுத்து சாவகச்சேரி பிரதேசசபையின் செயலாளராக இவர் நியமிக்கப்பட்டு கடமையை பொறுபபேற்றுக் கொண்டார். (இ-5-29)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை **யாழ்.பிரதேசத்தில** மயிலங்காடு, குப்பிளான், அம்பலவாணர் வீதி, உடுவில், ஆர்க் லேன், ஸ்ரீலங்கா பாடசாலைவீதி, இராமலிங்கம் வீதி, சோமணான் தோட்டம், சுதந்திரபுரம், குட்டியப்புலம், நிலாவரை, நவக்கிரி, சிறுப்பிட்டி, புத்தூர், ஊரணி, வாதரவத்தை, பெரிய பொக்கணை, ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, தம்பாலை, வளலாய், விஜிதா மில், கைத்தொழிற்பேட்டை, தோப்பு கைத்தொழிற் பேட்டை, கைத்தொழிற்பேட்டை I, கைத்தொழிற்பேட்டை II, மட்டுவில், சரசாலை, கல்வயல், மணியகாரன் சந்தி பகுதி, சிவப்பிரகாசம் பிரதேசம் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** இரணைமடு, திருவையாறு, முறிகண்டி, மத்தியவங்கி, கிளிநொச்சி கிறிட்டிலிருந்து கொக்காவில் வரைக்கும் மத்திய வங்கி, SFHQ இரணைமடு, MAS Active, யுனிச்செலா, பொறியியல் பீடம், விவசாய பீடம், North Cargill's Agrifoods, 7ஆவது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கை தொலைத தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற் லிமிட்டெட், கொக்காவில் இராணுவ படைமுகாம் I,II மற்றும் III, ரூபவாஹினி தொலைத்தொடர்பு கோபுரம், கொக்காவில் இராணுவ தொலைத்தொடர்பு கோபுரம் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** வவுனியா பஸார் வீதி, தோணிக்கல் சிவன் கோவிலடி பிரதேசம், சாம்பல் தோட்டம் கிராமம், ஓமந்தையிலிருந்து புளியங்குளம் வரை, இரணையிலுப்பைக்குளம், சாஸ்திரி கூழாங்குளம், ஈச் சங்குளம், கிடாச்சூரி, காக்கையனகுளம், பூம்புகார், நொதேர்ண் பாம், ஆசிரியர் தொழில் நுட்பக் கல்லூரி, கொம்பு வைத்த குளம் இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களில் மின் தடைப்படும். (இ-9)




### மெய் மறக்கச் செய்யும் பேராசை

❖ பிறரை விடக் கூடுதலாக உலக வசதிகளைப் பெற வேண்டும் என்னும் எண்ணம் உங்களை மெய்மறதியில் ஆழ்த்தி வைத்திருக்கின்றது. நீங்கள் மண்ணறைகளைச் சென்றடையும் வரையில்.

திருக்குர்ஆன்(102:1,2)

❖ இறைவன் உங்களில் சிலருக்கு சிலரைவிட எதனைக் கொண்டு சிறப்பளித்திருக்கின்றானோ அதனை அடைய நீங்கள் பேராசை கொள்ளாதீர்கள். ஆண்களுக்கு அவர்கள் சம்பாதித்ததற்கேற்ப பங்கு உண்டு. மேலும் பெண்களுக்கு அவர்கள் சம்பாதித்ததற்கு ஏற்ப பங்கு உண்டு. இருப்பினும் இறைவனிடம் அவனுடைய அருளைக் கோரிய வண்ணம் இருங்கள்.

(திருக்குர்ஆன்4:32)

❖ (நபியே!) நாம் அவர்களில் பல்வேறு பிரிவினர்க்கு வழங்கியிருக்கும் உலக வாழ்க்கையின் சுகபோகங்களின் பக்கம் நீர் ஏறிட்டும் பார்க்காதீர். அவர்களைச் சோதிப்பதற்காகவே அவற்றை நாம் வழங்கியிருக்கின்றோம். மேலும் உம் இறைவனால் வழங்கப்பட்டுள்ள (ஆகுமான) வாழ்வாதாரம் தான் சிறந்ததும் நிலையானது மாகும்.

(திருக்குர்ஆன்20:131)

(வேதவரிகளும் தூதர் மொழிகளும் நூலில் இருந்து)

## குருதேவரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி (பாடசாலை மாணவர்களுக்கானது)

**வினா இல.23**
**(அத்:4.ஸ்லோ:34)**
**ஞானம் பெற முயற்சிக்கும் மாணவன் எவ்வாறு ஆசிரியரை அணுகவேண்டும்?**

விடை: பணிவாக, மரியாதையாக, நமஸ்கரித்து, பணிவிடை செய்து, அவர் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து அவர் சொல்வதைச் சரியாகப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

**வினா இல.24**
**ஆசிரியருக்கு இருக்கவேண்டிய தகுதிகள் எவை?**

விடை: அ- அவருடைய துறையில் பூரண அறிவு நிறைந்தவராக இருத்தல்

ஆ-பூரண அறிவை அனுபவ ரீதியாக உணர்ந்தவராக இருத்தல் அல்லது பின்பற்றுபவராக இருத்தல்

**வினா இல.25**
**(அத்:4.ஸ்லோ:7)**
**பகவான் ஸ்ரீகிருஷ்ணர் கீதையில் தன்னைத் தான் எப்பொழுது தோற்றுவிப்பதாகக் கூறுகிறார்?**

விடை: எப்பொழுதெல்லாம் தருமம் குறைவடைந்து அதர்மம் மேலோங்குகின்றதோ அப்பொழுதெல்லாம்.

**வினா இல.26**
**(அத்.4: ஸ்லோ.8)**
**எதற்காக பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் யுகந்தோறும் தான் வெளிப்படுவதாகக் கூறுகிறார்?**

விடை: சாதுக்களை காப்பதற்காகவும் கொடியவர்களை அழிப்பதற்காகவும் தர்மத்தை நன்றாக நிலை நாட்டுவதற்காகவும்.

ஸ்ரீமத் பகவத்கீதை வினாவிடைப் போட்டி
எழுத்துப்பரீட்சை
காலம்:22.05.206 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்: காலை 10 மணி முதல் 11 மணி வரை
இடம்: யா/வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை
அனைத்து வடமாகாணப் பாடசாலை மாணவர்களும் பங்குபற்றலாம்.



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### கடவுள் மிகச் சிறந்த வியாபாரி

கடவுள் சிறு சிறு இன்பங்களை மட்டும் உலக வாழ்வில் நமக்களித்துவிட்டு, பரமானந்தத்தை தன்னிடமே வைத்துக்கொண்டுள்ளார். நாம் அந்தப் பரமா னந்தத்தை அடைவதற்குக் கடவுளிடம் மட்டுமே போக வேண்டும்.

கடவுளிடம் மிகவும் சாமர்த்தியமாய் நடந்து கொள்ளாதே. அவரை ஏமாற்ற முயலாதே. பெரும்பாலும் உன்னுடைய பிரார்த்தனைகளும் சடங்குகளும் கடவுளைச் சிக்கவைக்கும் முயற்சிகள்தான். கடவுளிடம் மிகச் சிறியதைக் கொடுத்துவிட்டு மிகப்பெரியதைப் பெற முயற்சி செய்கிறாய். அதையும் அவர் அறிவார். கடவுள் அதிபுத்திசாலியான சிறந்த வியாபாரி; அவரிடம் நீ சிக்கிக் கொள்ளும்படி செய்து விடுவார். நீ (தடுக்கின்) தரை விரிப்பின் கீழ் நுழைந்தால், அவர் தரைக்குக் கீழேயே நுழைந்து விடுவார்.

நேர்மையாக இரு. கடவுளை மிஞ்சுவதற்கு முயலாதே. நீ பரமானந்தத்தைப் பெற்று விட்டாயானால் எல்லாமே ஆனந்தமயமாகிவிடும். மற்ற எந்த ஆனந்தமும் நிலையற்றது.

பரமானந்தத்தைத் தவிர எந்தவித சந்தோசமும் உலகில் நிலையானது அல்ல.

# நெற்கொழு கழுகுகள் வி.கழகம் நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## அரியாலை ஐக்கியம் வெற்றி



பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுகழகம் நடத்தும் வடமாகாண வல்லவன் முதலாம் சுற்றில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் அரியாலை ஐக்கிய வி.க. எதிர்த்து ஸ்ரீ அம்பாள் வி.க. மோதியது.

ஆட்டத்தின் 23 ஆவது நிமிடத்தில் அரியாலை ஐக்கிய வீரர் கத்தான் முதலாவது கோலினை அடித்தார். அதனை தொடர்ந்து 28 ஆவது மற்றும் 55 ஆவது நிமிடங்களில் சிவராஜ் 2 கோல்களையும் 59 ஆவது நிமிடத்தில் கணேசன் மூலமாக ஒரு கோலும் பெறப்பட ஆட்ட நேர முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் அரியாலை ஐக்கியம் வி.க. வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக சிவராஜ் தெரிவு செய்யப்பட்டதுடன் அவருக்கான பணப்பரிசு மற்றும் பதக்கத்தினை நகர சபை செயலாளர் பிரசாத் வழங்கி கௌரவித்தார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்





## இன்றைய போட்டிகள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட சங்க அனுமதியுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கு மாகாண வல்லவன் உதைபந்தாட்ட தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பொற்பதி விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் மாந்தை சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து முல்லைத்தீவு சென். யூட்ஸ் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

◆◆◆

இளவாலை ஹென்றிஸ் இளைஞர் விளையாட்டுக்கழகம் ஹென்றிஸ் கிண்ணத்திற்கான உதைபந்தாட்ட போட்டியினை புனித ஹென்றியரசர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடத்துகின்றது.

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் மாதகல் சென்.தோமஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக்கழகமும் இரவு 8.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் விண்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து தீவகம் நசரேத் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது. (க)

## கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்குக

உரும்பிராய் ஈகிள் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 6 பேர் 5 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. விலகல் முறையில் நடைபெறும் மேற்படி மென்பந்துப்போட்டிகள் யாவும் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. பதிவு கட்டணமாக 1000 ரூபா அறவிடப்படவுள்ளது.

விண்ணப்பிக்கும் விளையாட்டுக்கழகங்கள் 077 013 2949 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

## இலங்கை சதுரங்கச் சங்கத்தின் தேசிய மட்ட சதுரங்கப் போட்டி



இலங்கைப் பாடசாலைகள் சதுரங்கச் சங்கத்தின் 2016ஆம் ஆண்டுக்கான தனியாள் சதுரங்கப் போட்டிகளின் தேசியமட்டப்போட்டிகளின் 7 ,9, 11, 13 வயதுப் பிரிவுகளுக்கான போட்டிகள் எல்பிட்டிய ஆனந்த மத்திய மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 23 பேர் பங்குபற்றினர். பங்குபற்றியுள்ள வீரர்களது விபரம்.

7 வயது ஆண்கள்

ர. ஜனார்த்தன், கிளிநொச்சி ம.வி

7 வயது பெண்கள்

பு. நந்துஷா- விவேகானந்தா வித்தியாலயம்.

9 வயது ஆண்கள்

ச.றெவிஷ்டன் - கிளிநொச்சி ம.வி. என். தரணிகன் - கிளிநொச்சி ம.வி. எஸ். தரணிகன் - கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம், கி. பானுஜன்- கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.

9 வயது பெண்கள்

பு.கலையிசை - விவேகானந்தா வித்தியாலயம், மு. வைகா - கிளிநொச்சி ம.வி, பா. துளசிகா - கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயம்.

11 வயது ஆண்கள்

தி. நவீன்ன- கிளிநொச்சி ம.வி, மு. கேசிகன் - பளை மத்திய கல்லூரி, எஸ். சரோன் - கிளிநொச்சி ம.வி, கு. சங்கீர்த்தன் - கிளிநொச்சி ம.வி, ம.கிதுசன் - கிளிநொச்சி ம.வி, சி. சிஹானந் - கிளிநொச்சி ம.வி, சி. பிரணவன்- கிளிநொச்சி ம.வி.

11 வயது பெண்கள்

கௌ. பிறையினி - பளை இந்து ஆரம்ப வித்தியாலயம்.

13 வயது ஆண்கள்

ர. பிரதாபன் - கிளிநொச்சி ம.வி, ச.சஜிதன் - கிளிநொச்சி இந்துக் கல்லூரி, சி. கவிசாந் - கிளிநொச்சி ம.வி, ஜோ.கவிநிலவன் - கிளிநொச்சி ம.வி.

13 வயது பெண்கள்

கௌ. தமிழிசை - பளை மத்திய கல்லூரி, பி. திலக்சிகா - தரும்புரம் மத்திய கல்லூரி. (க)

## மாவட்ட மட்ட மேசைப்பந்தாட்டம் உடுவில் அணி சம்பியன்





யாழ்.மாவட்ட பிரதேச செயலகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட மேசைப்பந்தாட்ட போட்டியில் உடுவில் பிரதேச செயலக அணி சம்பியானகியது.

கடந்த சனிக்கிழமை திருநெல்வேலி Y.M.H.A மண்டபத்தில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் உடுவில் அணியை எதிர்த்து நல்லூர் அணி மோதியது. மிகவும் பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் 3:1 என்ற ரீதியில் உடுவில் அணி சம்பியனாகியது. (க)

## நீலங்களின் சமர் இன்று ஆரம்பம்

கிளிநொச்சி இந்துக் கல்லூரியும் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயமும் மோதும் வடக்கின் நீலங்களின் சமர் கிரிக்கெட் போட்டி இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

காலை 9 மணிக்கு மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் கிளிநொச்சி வலய கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க)

## காயமடைந்தவர்...

16.05.2009 அன்று பின்னிரவு 3 மணியளவில் முள்ளிவாய்க்காலில் விசேடமாக இயங்கிய மருத்துவமனைக்கு நான் பொறுப்பு வைத்தியராக கடமையாற்றியிருந்தேன் .

இந்நிலையில் முதலாவதாக இறுதிக்கட்டப் போரின் போதுஇலங்கை இராணுவத்தினர் எமது மருத்துவமனைக்குள் நடந்து கொண்ட விதத்தினைக் கூறிக்கொள்கிறேன்.

அன்றைய தினம் சுமார் 750 தொடக்கம் 1000 வரையான காயமடைந்த நோயாளிகள் எனது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தனர்.

இராணுவத்தினர் எமது மருத்துவமனையினை அண்மித்து வந்தவேளை காயப்பட்டு சிகிச்சை பெற்றவர்கள், சிகிச்சைக்காக வந்தவர்கள் என பலரை துப்பாக்கியால் சுட்டவாறே வந்தனர்.

அந்த நேரத்தில் நான் எனது வைத்தியசாலையில் அறுவைச்சிகிச்சை பிரிவில் நோயாளி ஒருவருக்கு அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டிருந்தேன். துப்பாக்கிச் சத்தங்களை கேட்டு நாம் வெளியே எட்டிப்பார்த்த வேளை இராணுவம் எமது வைத்தியசாலைக்குள் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு வந்தது.

அதன்போது எங்களது நோயாளிகளின் கதறல் சத்தங்களும் அதிகமாகக் கேட்டு அதிர்ச்சி அடைந்த நிலையில் ஒன்றும் செய்ய முடியாதவாறு காயப்பட்ட நோயாளிகள் எழும்பி ஓடித் தப்பிக்கொள்ளக்கூடிய நோயாளர்களை அங்கிருந்து ஒரு பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லும்படி கூறினேன்.

அப்போது சிறிய காயங்களுக்கு உள்ளானவர்கள் கதறியபடி தங்களைப் பாதுகாப்பதற்காக சிதறியடித்து ஓடிக்கொண்டிருந்தனர். அதனால் பலத்த காயங்களுக்கு உள்ளான நோயாளர்களை இலங்கை இராணுவத்தினர் சரமாரியாக சுட்டுக்கொன்றதை நான் எனது கண்களால் நேரடியாகக் கண்டேன்.

அதன் பிறகு இராணுவத்தினர் என்னை நொருங்குவதை அறிந்த நானும் மக்களோடு மக்களாக வைத்தியசாலையை விட்டு தப்பியோடினேன். நான் பணியாற்றிய மருத்துவமனை திட்டமிட்டு விமானத் தாக்குதல், ஷெல் தாக்குதல்களுக்கும் உள்ளானது என்பதை என்னால் உறுதிப்படக் கூற முடியும்.

இதை நான் ஏன் உறுதிப்பட கூறுகின்றேன் என்றால் ஆளில்லாத வேவு விமானகள், ஆளணியுள்ள வேவு விமானங்களும் இறுதி யுத்தம் நடந்த பிரதேசங்களை படங்கள் எடுத்தவாறு பறந்துகொண்டிருந்தன.

இந்த இறுதியுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் அதாவது முள்ளிவாய்க்கால் பகுதியில் எங்களது இடத்திலிருந்து 300 மீற்றர் தூர இடைவெளியில் இராணுவ முன்னரங்க நிலைகளும், வட்டுவாகல் பக்கமாக 600 மீற்றர் இடைவெளியும் இருந்தது.

அவர்கள் பிரயோகித்த துப்பாக்கி ரவைகளும் எனது தற்கால மருத்துவமனைக்குள் வந்து வீழ்ந்துகொண்டிருந்தது. எனது மருத்துவமனைக்கு பொஸ்பரஸ் குண்டுகள் மூலம் தாக்கப்பட்ட நிலையில் ஏராளமான நோயாளர்கள் சிகிச்சை பெற்று வந்தனர். அவர்களில் பலர் எரியுண்ட நிலையிலும் இருந்தனர்.

இந்த நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கு மிகவும் கஷ்டமான சூழ்நிலையை எதிர்கொண்டிருந்தோம். என்னுடைய மருத்துவமனைக்குள் சாதாரண காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்தவர்கள் மீது மீண்டும் எனது மருத்துவமனை மீதும் மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்கள், பொஸ்பரஸ் குண்டுத் தாக்குதல்கள், ஷெல் தாக்குதல்கள் காரணமாக பல நோயாளர்கள் உடல் சிதறிப் பலியாகினார். அத்துடன் சிறு காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்த பல நோயாளர்கள் படுகாயங்களுக்குள்ளாகினார்கள்.

இந்த இறுதியுத்த காலத்தில் குறிப்பிடத்தகு 20 மீற்றர் பகுதிக்குள் நடந்து செல்வதாககூட இருந்தால் குறைந்தது 10 அல்லது 10மேற்பட்ட இறந்த சடலங்களை தாண்டியே நான் நடந்து போகவேண்டியிருந்தது. அதேநேரம் அந்த இடங்களில் மிகவும் படுமோசமான நிலையில் பலரும் படுகாயமடைந்து கிடந்தனர்.

இலங்கை இராணுவத்தின் கண்மூடித்தனமான தாக்குதல்கள் காரணமாக காயப்பட்டவர்களுக்கு எம்மால் உரிய சிகிச்சை வழங்க முடியாத நிலையிருந்தது.

சிகிச்சை அளித்துக்கொண்டிருந்த பலரும் இந்தத் தாக்குதல் பலியாகினார்கள். எனது வைத்தியசாலை சாதாரண ஒரு புற்தரையில் கட்டில்கள் பராமரிக்க கூடிய வசதிகள் அற்ற நிலையில் தான் அமைந்திருந்தது. அங்கே காயப்பட்டவர்கள் இறந்தவர்கள் என அனைவருமே ஒன்றாகத்தான் இருந்தனர்.

அதேநேரம் எங்களிடம் ஒரேயொரு சத்திர சிகிச்சைகூடம் தான் இருந்தது. அதுவும் பனை மரக்குற்றிகளால் அமைக்கப்பட்ட பங்கர். அந்த பங்கரினுள் காயப்பட்ட ஒருவருக்கு மட்டும் சிகிச்சை அளிக்கக்கூடிய வசதிகளே இருந்தது.

இதனால் ஏராளமான காயமடைந்த நோயாளர்கள் எமது கண்முன்னே இறந்தனர். எத்தனையோ காயமடைந்த நோயாளர்கள் எங்களைக் காப்பாற்றும்படி கதறியழுத அவலங்களினையும் அவர்களை எங்களால் காப்பாற்ற முடியாது போனதை நினைத்து இன்றும் நான் வருந்துகின்றேன்.

16.05.2009 அன்று முற்றாக எம்மால் சிகிச்சை அளிக்க முடியாத நிலை இருந்தது. ஏனெனில் எம்மிடம் போதியளவு மருத்துவ வசதி இல்லாததால் அவர்களுக்கு எம்மால் முதலுதவிகளையும், இரத்தப் பெருக்கை ஓரளவு கட்டுப்படுத்தக்கூடிய நிலையே இருந்தது.

இந்நேரத்தில் எமது பிரதேசத்தில் பலமான தாக்குதல்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. இந்த இறுதித் தாக்குதல்களில் எமது மருத்துவமனைகளில் பணியாற்றிய பணியாளர்கள், தாதியர்கள், வைத்தியர்கள் என பலரும் இறந்தனர்.

எனது வைத்தியசாலையில் பணியாற்றிய எனது சக நண்பனான வைத்தியர் ஒருவரும் தாக்குதலுக்கு இலக்காகி வயிறு கிழிந்த நிலையில் குடல்களை கையால் ஏந்தியவாறு கதறி வந்தார். எனது கண்முன்னே துடிதுடித்து இறந்தார்.

அதேநேரம் எனது மருத்துமனை பணியாளர் ஒருவருடன் வெளிநிலத்திலிருந்து நான் உணவு உண்டுகொண்டிருந்தேன். அப்பொழுது ஷெல் ஒன்று அங்கிருந்து வெடித்து எனது சாப்பாட்டிற்குள் ஒருவருடைய மூளை சிதறிய நிலையில் வந்து விழுந்தது.

அப்போது நான் அதிர்ச்சியில் நிமிர்ந்த பார்த்த போது என்னுடன் உணவு உட்கொண்ட பணியாளரின் மூளையே இவ்வாறு வீழ்ந்தது என்பதை அறிந்து எனது இதயம் துடிதுடித்துப்போனது.

இதேவேளை நான் இலங்கையில் உள்ள சில சிறைச்சாலைகளில், முகாம்களிலும் பல சித்திரவதை அனுபவித்தே இங்கு வந்தேன்.

இன்று நான் கூறிய சாட்சியால் இலங்கையில் உள்ள எனது குடும்பத்தினருக்கும் எதுவும் நடக்கலாம். அப்படியிருந்தும் எமது இனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு சம்பவங்களை கூறவேண்டிய கடமையுள்ளது. இதனை நான் எங்கு சென்று சொல்லவும் தயாராகவுள்ளேன் என்றார். (செ-12)

## பசில் நேற்று...

கைதுசெய்யப்பட்டார்.

பின்னர் மாத்தறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, கடும் நிபந்தனைகளுடன் அவருக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷவின் கடவுச்சீட்டை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி, நிதி மோசடிகளை ஆராயும் விசேட பொலிஸ் பிரிவுக்கு மாதம் ஒருமுறை சமுகமளிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஷ, அவரது கீழிருந்த திவிநெகும என்ற வறுமை ஒழிப்புத் துறையில் நடந்துள்ளதாகக் கூறப்படும் நிதி மோசடி தொடர்பில் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

அந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில், பசில் ராஜபக்ஷ உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்களுக்கு எதிராக கொழும்பு மேல்நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடந்துவருகின்றது.

இந்தப் பின்னணியிலேயே, காணிக் கொள்வனவு தொடர்பான புதிய குற்றச்சாட்டின கீழ் அவர் நேற்று மீண்டும் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## மனித உரிமை...

டிஸ் மற்றும் சுயாதீன நீதிமன்ற கட்டமைப்பிற்கான ஐ.நா பிரதிநிதி மொனிக்கா பின்டோ ஆகியோர் தமது விஜயம் தொடர்பில் கூட்டறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அதில் குற்றச்செயல்கள் தொடர்பில் இலங்கையின் நீதிமன்ற கட்டமைப்பு செயற்பட்டு வரும் விதம் மறைமுகமாக சித்திரவதைகளை நீதிமன்றங்கள் ஊக்குவிப்பதாக அமைந்துள்ளன என்றும் ஐ.நா பிரதிநிதிகள் குற்றம் சாட்டியுள்ளனர். தண்டனை வழங்குவதற்கு ஒப்புதல் வாக்குமூலத்தை மாத்திரம் சாட்சியாக எடுத்துக்கொள்ள முடியாது என தெரிவிக்கும் ஐ.நா அதிகாரிகள் 90 வீதமான தண்டனை வழங்கும் வழக்குகள் ஒப்புதல் வாக்குமூலத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

குறிப்பாக பயங்கரவாத மற்றும் குற்றப்புலனாய்வு பொலிசார் மாத்திரமன்றி சாதாரண பொலிசாரும் சித்திரவதைகளையும் துன்புறுத்தல்களையும் ஆயுதமாக பயன்படுத்தி வருவதாகவும் குற்றம்சாட்டியுள்ளனர். அது மாத்திரமன்றி இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பில் தமிழ் மொழி அறிந்த மற்றும் சிறுபான்மையின நீதிபதிகளின் பற்றாக்குறையும் நீதி நிலைநாட்டப்படாமைக்கு பிரதான காரணமாக அமைந்துள்ளது என்றும் ஐ.நா அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (செ-12)

## விரைவில் நினை...

தெரிவித்துள்ளார்

முள்ளிவாய்க்கால் நினைவு தூபி அமைப்பது தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த கால யுத்தத்தின் போது கொல்லப்பட்ட அனைவரும் எமது உறவுகள். எமது உறவுகளின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதும் அவர்கள் உயிரிழந்த நாளை நினைவு கூருவதும் எமது உரிமை.

கடந்த கால ஆட்சியில் இவ்வாறு எமது உறவுகளை நினைவு கூருவதற்கான சந்தர்ப்பங்கள் எமக்கு வழங்கப்படவில்லை. ஆனால இந்த நல்லாட்சியில் எமக்கு கிடைத்துள்ளது.

நல்லாட்சி அரசில் குழப்பத்தை ஏற்படுத்தாமல் போரின் போது உயிரிழந்த எமது உறவுகளை நினைவு கூருவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## ஊழலை ஒழி...

கலந்து கொள்வதற்காக அழைப்பு விடுத்தமைக்காக பிரித்தானியப் பிரதமர் டேவிட் கமரூனுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று உலகெங்கிலும் பரவியிருக்கும் ஊழலுக்கெதிராக போராடும் முன்னணியாக எமது உள்ளங்களை இணைப்பதற்கு எடுக்கப்படும் ஒரு விசேட நடவடிக்கையாக இந்த மாநாட்டைக் குறிப்பிட முடியும்.

தற்போது ஊழல், அரசியல் வன்முறைகள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பாரிய குற்றச்சாட்டுக்களைக் கொண்ட ஒரு யுகத்தை இலங்கை கடந்துள்ளது.

இலங்கை மக்கள் ஜனநாயக ரீதியாக அந்த ஊழல்மிக்க ஆட்சியிலிருந்தும் அவர்களின் அடிவருடிகளிடமிருந்தும் மீட்சி பெற்றனர். இன்று இலங்கையில் இருபெரும் அரசியல் கட்சிகளுடன் கூடிய ஒரு தேசிய அரசாங்கம் ஆட்சியில் உள்ளது.

ஜனநாயகம், நல்லாட்சி மற்றும் சட்ட ஆட்சியைப் பாதுகாக்கும் கொள்கையின் அடிப்படையிலேயே நாம் மக்கள் வாக்குகள் மூலம் தெரிவுசெய்யப்பட்டுள்ளோம். எனவே நாட்டிலிருந்து ஊழலை ஒழித்துக்கட்டுவதை எமது அடிப்படைப் பொறுப்பாக நாம் கருதுகின்றோம் என ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிடார்.

முன்னதாக காலை விருந்தில் இலங்கை ஜனாதிபதி உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் தலைவர்களையும் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# ஐ.நா விசேட பிரதிநிதிகளின் சந்திப்பில் அரசியல் கைதிகள் தவிர்க்கப்பட்டனர்

## உறவுகள் ஆதங்கம்

(யாழ்ப்பாணம்)

அரசியல் கைதிகளான எமது உறவுகள் தமது நிலையை ஐ.நா விசேட பிரதிநிதிகளுக்கு எடுத்துரைக்க வழி சமைத்துக் கொடுக்காது வஞ்சிக்கப்பட்டு விட்டார்கள் என தமிழ் அரசியல் கைதிகளின் பெற்றோர்கள், உறவினர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பிரதிநிதிகள் இருவர் இலங்கையின் சமகால நிலைமைகளையும், உறுதி மொழிக்கு அமைவான முன்னேற்றங்களையும் மதிப்பீடு செய்வதற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தார்கள்.

அதனடிப்படையில் பாதிக்கப்பட்ட பல தரப்பினரையும் சந்தித்த பிரதிநிதிகள் வட பகுதியில் கூடுதலான கவனத்தை செலுத்தியிருந்தனர். எனினும் இன்று இந்நாட்டில் அவசரமாகவும், அவசியமாகவும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகளுள் முதன்மை விடயமாக தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் பார்க்கப்படுகின்ற இத்தருணத்தில் அரசியல் கைதிகளை ஐ.நா அதிகாரிகள் சந்திக்கத் தவறியமை பெரும் ஏமாற்றத்ததையும், கவலையையும்தருகின்றது.

அந்த வகையில் சித்திரவதைகள் மற்றும் கொடூர செயற்பாடுகள் பொருத்தமற்ற தண்டனைகள் தொடர்பிலான விசேட பிரதிநிதி ஜீவான் மெண்டோஸ் அவர்களும், நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுயாதீன தன்மை தொடர்பான விசேட பிரதிநிதி மொனிக்கா வின்டோ அவர்களும் தமது விஜயத்தின் போது பூசா தடுப்பு முகாம், குற்றப்புலனாய்வுத் திணைக்களம், பயங்கரவாத தடுப்புப் பிரிவு மற்றும் சாதாரண சிவில் கைதிகளை தடுத்து வைக்கக்கூடிய வெலிக்கட, வவுனியா சிறைச்சலைகளுக்கும் சென்று அவதானிப்புகளை நடத்தியிருந்தார்கள்.

ஆயினும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் 15-20 வருடங்களுக்கு மேலாக சிறைவைக்கப்பட்டு பாரிய தண்டனைகள் வழங்கப்பட்டவர்கள் உட்பட சுமார் 80 தமிழ அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள மகசீன் சிறைச்சாலைக்கோ 50 வரையிலான தமிழ் அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனுராதபுரம் சிறைச்சாலைக்கோ ஐ.நா விசேட பிரதிநிதிகள் விஜயம் செய்யாமையானது அரசாங்கத்தின் திட்டமிட்ட செயலாகவே கருத வேண்டியுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளானது குறித்த தமிழ் அரசியல் கைதிகள் அங்கீகரிக்கப்படாத அநீதிக்கு உட்பட்டிருப்பதை அப்பட்டமாக வெளிச்சம் போட்டு காட்டியுள்ளது. அதனை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

எவ்வாறாயினும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை அரங்கில் அறிக்கை சமர்ப்பிக்கப்படக் கூடிய ஆதாரங்கள் திரட்டும் முக்கிய சந்திப்பின் அரசியல் கைதிகளான எமது உறவுகளின் அவல நிலையை தெரிவிப்பதற்கு சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க அரசியல் கைதிகளின் விடுதலைக்கான அமைப்புக்கள் எனக் கூறிக்கொள்பவர்களும், தமிழ் அரசியல தலைமைகளும், சிவில் சமூகத்தினர் மற்றும மத அமைப்புக்கள் என அனைவரும் தவறிவிட்டார்கள்.

இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் எமது உறவுகளின் விடுதலை விவகாரத்தின் வலிமையை மலினப்படுத்தி விடும் என்பதை அனைத்து தரப்பினரும் உணர்ந்து செயற்பட வேண்டும் என உறவுகள் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (செ-9)

## கடற்படை...

பூநகரி பள்ளிக்குடா கிராம சேவையாளர் பிரிவில் கடற்படைக்கென தேவாலய காணியை சுவீகரிக்கும் பொருட்டு அதனை அளவீடு செய்ய முயன்ற நிலையில் பொதுமக்கள் திரண்டு அதனை தடுத்துள்ளனர். இந்த சம்பவம் நேற்று காலை ஒன்பது மணியளவில் நடைபெற்றுள்ளது.

பொது மக்களின் இந்த எதிர்ப்பு நடவடிக்கை பள்ளிக்குடா கடற்படை முகாமில் நடைபெற்ற நிலையில், பொது மக்களது எதிர்ப்பு நடவடிக்கையின் போது கடற்படையினர் பொதுமக்களை ஆயுதம் தாங்கிய வண்ணம சுற்றி வளைத்து கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியமைக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, தமிழ் மக்கள் முன்னணி ஆகியன கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளன.

பள்ளிக்குடாவில் கடற்படை முகாம் அமைந்துள்ள காணியை நிரந்தரமாக கடற்படை சுவீகரிப்பதற்காக நில அளவையாளர்களால் நேற்றைய தினம் அளப்பதற்கு முயற்சிக்கப்பட்ட போது அங்கு திரண்ட பொதுமக்கள் நில அளவையாளர்களின் வாகனத்தை வழி மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

பொது மக்களோடு, வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் பசுபதிப்பிள்ளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொது செயலாளர், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரும் இணைந்திருந்தனர். பொதுமக்கள் அங்கு திரள கடற்படையினர் ஆயுதங்களோடு பொது மக்களை சுற்றி வளைத்து அங்கு நின்றமையால் பெரும் பதற்றம் காணப்பட்டது.

மேலும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை கடற்படையினரும், இராணுவ புலனாய்வாளர்களும் புகைப்படம் எடுத்து அச்சுறுத்தியதோடு, செய்தி சேகரிப்பில் நின்ற ஊடகவியலாளர்களையும் புகைப்படம் எடுத்தனர். இதனால் மேலும் பதற்றம் அங்கு காணப்பட்டதோடு, புகைப்படம் எடுத்த இராணுவத்தோடு வடக்கு மாகாண சபை உறுப்பினர் பசுபதிப்பிள்ளை முரண்பட்டுக கொண்டார்.

ஐம்பது வருட காலமாக குறித்த காணி தேவாலயத்திற்கு உரியதாகவே உள்ளது. தேவாலயத்தின் கிணறு கூட கடற்படை வசமே அமைந்துள்ளது. இந்த நிலையில் நாம் அந்த கிணற்றினை பாவிக்க முடியாத நிலையில் உள்ளோம். ஆகவே தற்போது போருக்கு பின்னர் குறித்த காணியை பிடித்த கடற்படை அதனை நிரந்தரமாக தமது உடைமையாக்குவதற்கு முயற்சிப்பது ஏற்புடையதல்ல,

நல்லாட்சி என கூறிக்கொண்டு எமது காணிகளை தொடர்ந்தும் இராணுவம் பிடித்துக் கொண்டு உள்ளது. மகிந்த ஆட்சியில் என்ன நடந்ததோ அவையெல்லாம் தற்போதும் நடைபெற்றுக்கொண்டே உள்ளன. ஆகையால் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பொது மக்கள் வலியுறுத்தியிருந்தனர். (செ-4)

## முள்ளிவாய்...

மேற்படி அறிவிப்பினை வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் அறிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் வாரம் நேற்றைய தினம் ஆரம்பமாகிய நிலையில், அதனை ஒட்டி செம்மணி படுகொலை நடைபெற்ற இடத்தில் சுடர் ஏற்றி அஞ்சலிகள் நடைபெற்ற பின்னரே ஊடகங்களுக்கு சிவாஜிலிங்கம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். இதனடிப்படையில் இன்றைய தினம் (நேற்று) செம்மணி படுகொலை இடம்பெற்ற இடத்திலும்,

நாளைய் தினம் (இன்று) 13ஆம் திகதி நாகர்கோவிலில் இலங்கை விமானப்படையால் நூற்றுக்கணக்கான பொது மக்கள் படுகொலை செய்யப்பட்ட இடத்திலும் 14ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் செல்வீச்சில் கொல்லப்பட்ட நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்திலும், 15ஆம் திகதி இலங்கை கடற்படையால் நூற்றுக்கணக்கான மக்கள் வெட்டி கொலைசெய்யப்பட்ட நெடுந்தீவு குமுதினி படுகொலை நினைவு தூபியிலும்,

16ஆம் திகதி வடக்கு கிழக்கின் தலைநகரான திருகோணமலையில் அமைந்துள்ள வெலிக்கடை தியாகிகள் அரங்கிலும், 17 ஆம திகதி தென்மராட்சியில் நடைபெற்ற படுகொலை இடத்திலும், 18ஆம் திகதி வடக்கு மாகாண சபையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்காலிலும் நினைவேந்தல் நிகழ்வுகள் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார்.

மேலும் இறுதி நாளான பதினெட்டாம் திகதி காலை ஆறு மணிமுதல் மாலை ஆறு மணிவரை வடக்கு கிழக்கில் அமைந்துள்ள இந்து ஆலயங்கள், கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பூசைகளையும் உயிரிழந்தவர்கள் நினைவாக நடத்துமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை அரசினால் எம்மீது வலிந்து முன்னெடுக்கப்பட்ட படுகொலைகளை நாங்கள் நினைவு கூருவதன் மூலமே எமது விடுதலையை நோக்கிய பயணத்தை எந்த தடையுமின்றியும் முன்னெடுக்க முடியும். எமது சொந்தங்கள், போராளிகள் தான் கொடிய போரில் கொல்லப்பட்டார்கள். அவர்களை நினைவு கூருவது எம்முடைய கடமைக்கப்பால், உணர்வு பூர்வமான செயற்பாடாகும்.

நாங்கள் தொடர்ந்தும் எமது விடுதலை நோக்கிய பயணத்தை முன்னெடுப்பதற்கு இந்த நினைவு நிகழ்வுகள் ஏதோ ஒருவகையில எமக்கு உந்துதலை அளிக்கின்றன. எமது உறவுகளை நினைவு கூருவதற்கு மேற்குறிப்பிட்ட இடங்களில் இயலுமானவரை அனை வரையும்காலை பத்து மணிக்கு ஒன்று கூடுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (செ-4,281)

## முதலாம் நாள்...

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம நேற்று காலை 10 மணிக்கு யாழ்.செம்மணி பகுதியில் சுடரேற்றி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் சுடரேற்றி ஆரம்பித்து வைத்தார். மே மாதம் 12ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 18ஆம் திகதி வரை இந்த நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நேற்றைய ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண சபை விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், சபை உறுப்பினர் பா. கஜதீபன், வல்வெட்டிதுறை முன்னாள் உப தவிசாளர் எஸ்.சதீஸ் ஆகியோர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். முன்னதாக காலை ஒன்பது மணியளவில் ஆரம்பமாகிய இந்த நிகழ்வுகள,

பொதுசுடர் ஏற்றப்பட்டு, உயிரிழந்த போராளிகள், பொதுமக்கள் நினைவாக அக வணக்கம் செலுத்தப்பட்டு, பின்னர் அஞ்சலி உரைகளும் இடம்பெற்றன, வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தனது அஞ்சலி உரையில், கடந்த காலத்தில் தமிழ் மக்கள் மீது எவ்வாறு வன்முறை வெளிப்படையாக கட்டவிழ்த்து விடப்பட்டதோ,

அதே போன்ற நிலைதான் தற்போதும் காணப்படுகின்றது. எமது உறவுகளை நினைவு கூருவதற்குக் கூட புலனாய்வு பிரிவின் கண்காணிப்பு காணப்படுகின்றது. எங்கள் உறவு கள் உயிரிழந்த தினத்தை நாங்கள் மட்டு மல்ல ஒட்டு மொத்த தமிழினமும் நினைவு கூர வேண்டும்.

தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் எமது பிரதேசத்தில் தொடர்கின்றன, நல்லாட்சி என்பவர்கள்தான் இவற்றை செய்கின்றனர். ஆகவே நாங்கள் நல்லாட்சி அரசினை தொடர்ந்தும் நம்பிக் கொண்டு இருப்பது பயனற்றது என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவித் தார்.

மேலும் தற்போது இடம்பெறுவது ஒரு வகையான அச்சுறுத்தல்களே. தமது உறவுகளை பொது மக்கள் ஒன்று கூடி நினைவு கூர்ந்து விடக்கூடாது என்பதற்காகவே இராணுவம் மற்றும் புலனாய்வு பிரிவு கடுமையான அச்சுறுத்தல்களை தற்போது ஆரம்பித்துள்ளது.

ஆகவே இதனை கண்டு எமது மக்கள் அஞ்சிவிடாது. தமது உறவுகளை நினைவு கூர முன்வர வேண்டும் என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித் தார். (செ-4)

## உயிரிழந்த...

அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடிகளை காட்சிப்படுத்துதல் மற்றும் தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்துதல் போன்றன தடைசெய்யப்பட்டுள்ளதாகவும், அவற்றை செய்பவர்களுக்கு எதிராக பொலிஸாரால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என குறிப்பிட்ட அவர் போரில் உயிரிழந்த அப்பாவிப் பொதுமக்களை நினைவு கூர எவ்வித தடையும் இல்லை எனக்குறிப்பிட்டார். (செ-12)

## தீர்வு அவசியம்...

தொடர்பில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் நடைபெற்று வரும் விசேட கூட்டத்தில் நேற்று பங்கேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (செ-12)


**புதிய பிரிவுகள் ஆரம்பமாகின**

**யாழ் - கொழும்பு முன்னணி**
**ஹொட்டேல் வேலைவாய்ப்பு ஏற்பாட்டுடன்**

Business & **Hotel Management** UK Certified

**BATCH 1 - Entry Level**
- Introduction to Tourism & Hospitality Management
- Food & Beverage Management
- English For Beginners & Personality Development

**BATCH 2 - Diploma Level**
- Front Office Management
- House Keeping Management
- Special Hospitality English Program

100% JOB/VISA Guaranteed

அனுமதிகளுக்கு:
077 3616 798 021 222 0011
www.sikaram.lk Sikaram Academy

SIKARAM ACADEMY
Business · Hospitality · English
SCHOOL of HOSPITALITY
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

**வாடகைக்கு**

திருநெல்வேலிச் சந்தி பலாலி வீதிக்கு அருகாமையில் 30 அடி நீளம் 11 அடி அகலம் கொண்ட கடை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:0750395005 (4553)

**வடக்கு மாகாண கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்க விசேட பொதுக் கூட்டம்**

இடம்:-மீசாலை உயர் கலைக் கல்லூரி
(மீசாலை பழைய புகையிரத நிலையத்துக்கு அருகில்)
காலம்:14.05.2016 நாளை சனிக்கிழமை
நண்பகல் 12.00 மணி.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த சகல கடமை நிறைவேற்று அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
நிர்வாகம்
**கடமை நிறைவேற்று அதிபர்கள் சங்கம்**
**வட மாகாணம்.**
(இ)

**பதவி வெற்றிடம்**

இல.32, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள நிறுவனம் ஒன்றிற்கு பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
- பிரதம கணக்காய்வாளர் (குறைந்தது 5 வருட அனுபவம்)-2
- கணக்கு உதவியாளர் (ஆண்/ பெண்)-4
- விற்பனையாளர்கள்(Delivery Boys)-4
- விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)--2
- களஞ்சியக் காப்பாளர் (Store Keeper)-2

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு தகைமையுடையவர்கள் உங்களுடைய சுயவிபரக்கோவையுடனும் கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடனும் எதிர்வரும் திங்கட்கிழமை (16.05.2016) காலை 11.00 மணியளவில் நேர்முகத்தேர்விற்கு சமுகமளிக்கவும்.
T.P.021 222 8468
(சி-4594)

**பங்குச் சந்தை முதலீட்டுக் கருத்தரங்கு** CSE COLOMBO STOCK EXCHANGE

சமகால முதலீட்டு வாய்ப்புகள் குறித்த கருத்தரங்கு துறைசார் வளவாளர்களால் **இன்று** (13.05.2016) வெள்ளிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு நடத்தப்படுகிறது.
ஆர்வமுள்ளோர் கலந்து கொள்ளலாம்: **அனுமதி இலவசம்.**

பங்குச் சந்தை முதலீடு சம்பந்தமான முழுமையான அறிவை பெற்றுக் கொள்ளும் வகையிலான தொடர் கருத்தரங்கு (workshop) எதிர்வரும் 28.05.2016 முதல் ஆரம்பமாகவுள்ளது. முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

**இடம்: 147, 2/3, கே.கே.எஸ். வீதி( சத்திரச் சந்தி), யாழ்ப்பாணம்.**
**மேலதிக தகவல்களுக்கு: 0777822014 / 021 222 1455**
(சி-4599)





இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.05.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.